**â}ôÂr©/**தொலைபேசி ,y./Telephone Nos.

ðÑ¨gÔg¿Ñ¨ 
அமைச்சர் 
Minister
2784832
2784807
2785617

ÍxÂ¬
செயலாளர்
Secretary
2784812

Kotte
Â¨[Q¨kQ
அலுவலகம்
Office
2785141-50
**Fax**: 2784846

jÍ¬x/<-nkapy;;/E-mail : isurupaya@moe.gov.lk

üÍÜ ð|ÂQ
உமது இல.
Your No.
………………………………….

**ðHÔ¨¡© ðÑ¨gÔ¨|³Q**

**கல்வி அமைச்சு**

**Ministry of Education**

'ªÝeôA¡¨Q', ³o$
cQú[H©¡eôÍÂ¨zÁÍÁ, ¹gzgôÑexk

“இசுருபாயா“ ஸ்ரீஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura
Battaramulla.

ÑÍhz ð|ÂQ
எமது இல.
My No.
ED/3/20/

âµ¼©Q
திகதி
Date
2013.02.19

சுற்று நிருபம் இல. 10/2013

சகல மாகாண கலிவிப்பணிப்பாளர்கள்
சகல வலய கல்விப்பணிப்பாளர்கள்
சகல கோட்ட கல்விப்பணிப்பாளர்கள்
அதிபர்கள்

**பாடசாலைமட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

விருத்தி அடைந்துவரும் நாளைய உலகின் தேவைக்குப் பொருத்தமான அறிவாற்றலும் ஆளுமையும் மிக்க சிறந்த சந்ததியொன்றினை உருவாக்க பெரும் பங்களிக்கும் ஆசிரியர்களது அறிவாற்றலும் அதற்கேற்ற விதமாக புதுப்பிக்கப்பட்டும் விருத்தியடைந்தும் காணப்படல் இன்றியமையாதது. இதற்காக தற்போது பல்வேறுபட்ட ஆசிரிய மேம்பாட்டு வேலைதிட்டங்கள் நடைமுறையில் உள்ளன. எனினும் அவை எதிர்பார்த்த இலக்கை எட்டுவதற்குப் பொதியதாயில்லாமை தெரிய வந்துள்ளது. எனவே வலுவாகக் காணப்படும் ஆசிரிய மேம்பாட்டு தேவையினை அடையும் ஒரு முயற்சியாக கல்வி அமைச்சின் துறைசார் விருத்திச் சட்டக செயற்திட்டத்தின் கீழ் இயங்கும் TESP வேலைத்திட்டத்தினால் பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் புது வடிவம் பெற்று அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**பாடசாலைமட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் என்றால் என்ன?**

மாணவர்களின் அடைவு மட்ட உயர்வு மற்றும் ஆளுமை விருத்திக்கு வழிகாட்டக்கூடிய பொறுப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காக பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகளை இனங்காணல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் எனும் செயற்பாடுகளை உள்ளடக்கியதான தொடர்ச்சியானதும் ஒருங்கிணைந்ததுமான ஆசிரியர் விருத்திச் செயற்பாடுகளை பாடசாலைகளில் செயற்படுத்தலானது பாடசாலைமட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்டம் எனப்படும்.

**நோக்கம்**

- ஒவ்வொரு பாடசாலையையும் அத்தியாவசியமாகதும் பொருத்தமானதுமான ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தை தாமாகவே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் ஆற்றலுள்ளதாக வலுப்படுத்தல்
- மாணவர்களின் அடைவு மட்ட மேம்பாட்டுக்கான தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல்.
- ஆசிரியர்களிடையே சிறந்த நடைமுறைகள் (best practices) தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் பிரதிபலித்துக் கற்கும் தேர்ச்சியை ( Reflective practices) மேம்படுதத்தல்.
- தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத்திட்டங்கள் மூலமாக பாடசாலை முறைமையில் பண்புத்தர விலுத்தியை ஏற்படுத்தல்.

**பாடசாலைமட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தின் தேவை**

- தற்போது நடைமுறையிலுள்ள பல்வேறு ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டங்கள் பாடசாலையின் தேவையுடன் நேரடிதயாகத் தொடர்புபடத் தவறியுள்ளன.
  - பல்வேறு நிறுவனங்கள் மூலமாக தற்போது ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கல்வி அமைச்சு, மாகாண/வலய/ கோட்டக் கல்விக்காரியாலயங்கள் மற்றும் பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிருவகம், தேசிய கல்விக் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி, ஆசிரிய மத்திய நிலையம் மற்றும் வேறு அரச தனியார் நிறுவனங்கள் மூலமாக இவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன இவ்வேலைத்திட்டங்கள் பெரும்பாலும் பாடசாலைகளுக்கான குறிப்பான தேவைக்குப் பொருத்தமாக அமைவதில்லை.

- பிறரால் திட்டமிடப்பட்ட பாரம்பரியமான ஆசிரிய கல்விச்செயற்பாடுகளை விட பாடசாலைகளால் இனங்காணப்பட்ட தமது தேவைகளுக்கு பொருத்தமான வேலைத்திட்டங்கள் பாடசாலைகளாலேயே நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் உயர் அடைவுகள் எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்டுகின்றது.
- தமது வேலைத்திட்டமென்ற உணர்வானது ஆசிரியர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பு கிடைக்க வாய்ப்பாயமையும்.
- புாடசாலைகளின் பௌதிக மற்றும் ஏனைய வசதிவாய்ப்புகளுக்கமைவாய் நடைமுறைப்படுத்தப்படும் இத்தகைய விசேட வேலைத்திட்டங்கள் பயன்மிக்கதாகக் காணப்படும்.
- வேலைத்திட்டங்களின் விளைவுகளை நேரடியாகக் கண்டுகொள்ள முடியும்.
- .ஆசிரிய விருத்தி மூலமான மாணவர்களின் அடைவு மேம்பாட்டுக்கான இவ்வேலைத்திட்டங்கள் பாடசாலைச் செயற்பாடு இடம்மெறும் நேரத்திலேயே நடைபெறுவதனால் நேரமும் வளங்களும் சிறந்த முறையில் பயன்படுத்தப்படும்.
- ஆசிரியர்கள் தமக்கிடையே வாண்மை விருத்தி தொடர்பான கருத்துப் பரிமாறல்கள் செய்யவும் இடைத்தொடர்புகளை வளர்த்துக்கொள்ளவும் உதவும்.

- புாடசாலைகள் சுய விருத்திக்கான ஆற்றலைப் பெற பயிற்சியும் சந்தர்ப்பமும் கிடைக்கும்.

மேற்படி வேலைத்திட்மூலம் உயர் பெறுபேறுகள் அடைய முடியுமென எதிர்பார்க்கப்டுவதனால் வளர்ச்சியடைந்து வரும் பெரம்பாலான நாடுகள் இம்முறையை நடைமுறைப்படுததுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வகையில் வளர்ச்சியடைந்து வரும் நாடான இலங்கையிலும் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் மேம்பாட்டிற்காக இவ்வணுகுமுறை மிகவும் பொருத்தமானதாக அமையும்.

## பாடசாலைமட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை நிறுவனப்படுத்தல்

பாடசாலைகளில் பாடசாலைமட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த பின்வரும் படிமுறைகளை அனுசரித்தல் பொருத்தமானது.

1. பாடசாலையின் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் மீளாய்வு செய்து ஆசிரிய மேம்பாட்டுத்திட்டங்களை அமைத்தல்.
2. ஆசிரியர் மேம்பாட்டுக்காக ஒவ்வொரு பாடசாலையி ஒரு குழு நியமித்தல்
3. இக்குழு பாடசாலையின் ஆசிரிய மேம்பாட்டுத் திட்டத்தினை இனங்கண்டு தயாரித்தல்
4. ஆவ்வாறு இனங்காணப்பட்ட தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் வருடாந்த பாடசால செயற்திட்டத்தில் இணைத்துக்கொள்ளல்.
5. சுகல பாடசாலைகளும் தமது வரவு செலவுத்திட்டத்தில் பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டிற்குப் போதிய நிதியை ஒதுக்குதல். ஆத்துடன் பொருத்தமானதும் சாத்தியமானதுமான வேறு நிதி மூலங்களை உரியவாறு பெற்றுக்கொள்ளல்.
6. இச்செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்குபற்ற ஆசிரியர்களை ஊக்குவித்தல்
7. வேலைத்திட்டங்களை தயாரிக்கும் போது செலவற்ற வேலைத்திட்டங்களையும் சேர்த்துக்கொள்ளல்
8. இவ்வாறு தமக்காக தாமே செயற்படுத்தும் இவ்வேலைத்திட்டங்களை சிறந்த முறையில் மேற்பார்வை செய்து மேம்படுத்தல்
9. பேறப்பட்ட அனுபவங்களை பாடசாலையினுள்ளும் பாடசாலைக்கு வெளியே ஆசிரியர்களுடனும் (கோட்ட, வலய, மாகாண மட்டத்தில்) பகிர்ந்து பரஸ்பரம் விருத்தியடைதல்

## பாடசலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டிற்குப் பொருத்தமான செயற்பாடுகள் சில

பாடசாலைகள் தமது தேவைகளுக்காக வடிவமைக்கும் செயற்பாடுகள் பொருத்தமாக இருப்பதை உத்தரவாதப்படுத்திக்கொள்ளல் வேண்டும். இதற்காக பயன்படும் சில வேலைத்திட்டங்களாவன.

- ✓ ஆயசிரியர்கள் கூட்டம்/ பெற்றார்கள் கூட்டம்
- ✓ தொடர்ந்து நடை பெறும் குழுக்கூட்டங்கள் ( ஆசிரியர்களின் தேவைக்கேற்ப)
- ✓ மாதிரி கற்பித்தல் ( model teaching )
- ✓ ஆசிரிய மேம்பாட்டுத்திட்டங்களை வெளிப்புற உதவியுடன் செயற்படுத்தல்
- ✓ சகபாடிகள் பயிற்சி ( peer-coaching)
- ✓ தொழில் வழிகாட்டுனர் மூலம் வழிகாட்டல் ( mentoring)
- ✓ செய்துகாட்டல் ( demonstration )
- ✓ பாடசாலை மட்ட திட்டமிடல் வேலைத்திட்டங்கள். இங்கு பாடசாலை மட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்படல்.
- ✓ ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட வழிகாட்டல்கள் ஏற்பாடு செய்தல்
- ✓ செயல்நிலை ஆய்வு
- ✓ சம்பவ கற்கை
- ✓ கண்காணிப்புப் பயணம் (மாதிரிப் பாடசாலையொன்றின் / நிறுவனத்தின் செயற்பாட்டை அவதானித்தல்)
- ✓ அனுபவப் பரிமாற்றத்திற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்

## கண்காணிப்பும் மதிப்பீடும்

அதிபர்கள் பாடசாலைமட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை கண்காணித்து அறிக்கைப்படுத்துவதற்காக பொருத்தமான திட்டமொன்றை செயற்படுத்தல் வேண்டும். ஒவ்வொரு தவணை இறுதியிலும் தமது பாடசாலையில் இடம்பெற்ற பாடசாலைமட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்டம் பொடர்பான மதிப்பீட்டறிக்கையை வலயக் கல்விக் காரியாலயத்தில் இவ்வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான கல்வி அதிகாரிக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

வேலைத்திட்டங்களின் பூரண வெற்றியானது ஆசியர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பில் தங்கியுள்ளது. இதற்காக ஆசிரியர்களை ஊக்கப்படுத்தி ஈடுபட வைப்பது அதிபர்களின் பொறுப்பாகும்.

மேற்படி விடயம் தொடர்பான தங்களின் கூடிய கவனத்தை வேண்டுவதுடன் பாடசாலையின் அபிவிருத்திக்கு ஆசிரிய மேம்பாட்டின் முக்கியத்துவத்தினை உணர்ந்து பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றுவதில் தங்களது மாகாண வலய கோட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி தங்கியிரப்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த பாடசாலைமட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்டத்திம் தொடர்பான மேலதிக விளக்கங்களுக்கு **'பாடசாலைமட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்ட வழிகாட்டல் - 2012'** கைநூலைப் பயன்படுத்தவும்.

எஸ்.எம். கோடாபய ஜயரத்ன
கல்வி செயலாளர்
கலிவி அமைச்சு
இசுருபாய

கல்வி அமைச்சு
Ministry of Education
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. } ED/03/20/05/10-1 ඔබේ අංකය / உமது இல. / Your Ref. } දිනය / திகதி / Date } 2019.11. 19

சுற்றறிக்கை இலக்கம் ~~05~~ 45/2019

சகல : மாகாண பிரதான செயலாளர்கள்

மகாண கல்விச் செயலாளர்கள்

மாகாண கல்விப் பணிப்பாளாகள்

வலயக் கல்விப் பணிப்பாளாகள்

கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்

அதிபர்கள்,

**பாடசாலையை அப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரிய அபிவிருத்தி வேலைத்திட்டம் (Shool - Based Professional Teacher Development (SBPTD) அமுல்படுத்தல்.**

மாற்றமடைந்து செல்லும் உலகிற்கு பொருத்தமான ஆக்கங்கள் மற்றும் மென்பொருள் திறமைகள் கொண்ட சமநிலையான ஆளுமை கொண்ட எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதற்காக பாடசாலையில் அனைத்து ஆசிரியர்களுக்கும் தொழில்சார் அறிவு, தொழில்சார் செயற்பாடுகளைப் போன்று தொழில் கௌரவத்தினை முன்மாதிரியாக செயற்படுவதனை இலக்காக் கொண்டு 10/2013 சுற்றறிக்கைக்கு அமைய தற்போது பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரிய அபிவிருத்தித் திட்டத்தினை (SBTD) தொடர்ந்தும் பயன்மிக்தாக முன்னெடுப்பதற்காக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி (SBPTD வேலைத்திட்டம் தொடர்பான எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சியான ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகளை பயன்மிக்கதாக முன்னெடுக்கும் சவாலை வெற்றிகௌ்ளும் ஒரு நடவடிக்கையாக வருடாந்தம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் பிரதான அம்சமாக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் அபிவிருத்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கல்வி அமைச்சின் இலக்கம் 26.'.2018 கொண்ட சுற்றறிக்கை)

ஆசிரியர்களின் நளாந்த கற்றல் கற்பித்தல் செற்பாடுகளுக்குரிய போதனாவியல் தேர்ச்சியின் தொடர்ச்சியான அபிவிருத்தி (Continuous professional development), பாடசாலை ஆசிரியர் வகிபாகத்தை அபிவிருத்தி செய்யும் செயற்பாடு, (Colleagues) சகபாடிகளுடன் உடன் தொழில்சார் அனுபவங்களை பரிமாறிக்கொள்வதற்காக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் ஊடாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

**02. நோக்கம்.**

- அவ்வவ் பாடசாலைகளுக்கு அடையாளங்கள் மற்றும் பொருத்தமான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் அபிவிருத்தியினை திசைமுகப்படுத்திய ஆசிரிய அபிவிருத்தி வேலைததிட்டத்தை பாடசாலைகள் மூலம் திட்டமிட்டு அமுல்படுத்தல்.

- மாணவர்களின் பல்வேறுபட்ட கற்றல் தேவைகளுக்கு அமைய ஆசியர்களினால் தமது பாட அறிவு மற்றும் போதனாவியல் விஞ்ஞான திறமைகளை விருத்தி செய்யும் செயற்பாடுகளை திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தல்.
- மாணவர்களின் மனோவியல் - சமூக திறமைகள் (Social - Emotional Skill), அறிவியல் சார்ந்த திறமைகளை விருத்தி செய்வதனை இலக்காகக் கொண்ட புத்தாக்க கற்றல் கற்பித்தல் முறைகள் மற்றும் செயற்பாடுகளைப் பயன்படுத்துவதற்காக ஆசிரியர்களை ஈடுபடுத்தல், ஊக்குவித்தல் மற்றும் விருத்திசெய்தல்.
- மாணவர் அடைவுமட்டத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறுபட்ட தெடர்ச்சியான ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை திட்டமிடல். அமுல்படுத்தல் மூலம் பாடசாலை கற்றல் கலாச்சாரத்தை பலப்படுத்தல்.
- ஆசிரியர்களுக்கிடையே வெற்றிகரமான செயற்பாடுகள் (Successfull Practices) தொடர்பான அனுபவத்தை பரிமாறிக்கொள்வதற்காக மற்றும் ஆசிரியர்களின் ஆய்வுரீதியிலான திறமைகளை (Reflecting skill) விருத்தி செய்தல்.
- ஆசிரிய அபிவிருத்தியின் மூலம் முழுமையான கல்வி செயற்பாட்டின் பண்புசார் தரத்தை விருத்தி செய்தல்.

**03. பாடசலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரிய அபிவிருத்தியினை அமுல்படுத்தல்.**

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தை பலப்படுத்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக அனைத்து பாடசலைகளிலும் பாடசாலை முறைமை தொழில்சார் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக துணைக் குழுக்களை நியமிக்க வேண்டும். இத் துணைக் குழுவின் நோக்கம் மற்றும் உள்ளீடுகள் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு மற்றும் பாடசாலை முகாமைத்துவ குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டும். இதற்காக 03 - 10 இற்கு இடைப்பட்ட எண்ணிக்கையானோர் ஆசிரிய சபையின் கூட்டு இணக்கத்துடன் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட வேண்டும். அமுல்படுத்தும் வசதிக்காக துணைக்குழு அங்கத்தவர்களின் இணக்கப்பாட்டிற்கு அமைய தலைவர் ஒருவரை நியமிப்பது பொருத்தமானதாகும்.

இத்துணைக்குழுவினால் பாடசாலையை அடிப்படியாகக் கொண்ட தொழில்சார் ஆசிரிய அவிருத்தி வேலைத்திட்டத்தை அமுலபடுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

- பாடசாலை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மீளாய்விற்கு உட்படுத்துவன் மூலம் தொழில்சார் அபிவிருத்தி தேவைகளை இணங்காணுதல் மற்றும் முன்னுரிமைப்படுத்தல்.
- பாடசாலையில் ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகளுக்காக பொருத்தமான செயற்பாடுகளை இணங்காணுதல் மற்றும் திட்டமிடல்.
- அனைத்து பாடசாலைகளிலும் தமது வருடாந்த வரவு செலவினை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரிய அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக போதியளவு நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்குதல்.
- வேலைத்திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கும் போது நிதிசார் செலவீனம் அற்ற வேலைத்திட்டங்களுக்கு விஷேடமாக முன்னுரிமையளித்தல்.
- வேலைத்திட்டங்களை தேர்ந்தெடுக்கும் போது நிதிசார் செலவினம் அற்ற வேலைத்திட்டங்கள் குறித்து விஷேடாமாக கருத்திற்கொள்ளல்.
- பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் அபிவிருத்தி செயற்பாடுகளை வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டங்களில் உள்ளடக்குதல்.
- ஆசிரியர்களின் வினைத்திறனான பங்குபற்றலுடன் வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல்.
- அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டங்களில் உற்பத்தித் திறனை நேரடியாக மேற்பார்வை செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
- இவ் வேலைத்திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவத்தை பாடசாலைகளுக்கிடையே மற்றும் கோட்ட/வலய/மாகாண/தேசிய மட்டத்தில் பரிமாறிக் கொள்ளல்.

**04. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் அபிவிருத்தி முறைகள் மற்றும் செயற்பாடுகள்.**

பாடசாலை தேவைகள் மற்றும் சூழலுக்குரியதாக முன்னெடுக்கக் கூடிய பல்வேறு தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்காக பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட முறைகள் மற்றும் செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- ஆசிரியர் கூட்டம்
- ஆசிரிய அபிவிருத்தி தேவைகளுக்கு அமைய நடாத்தப்படும் தொடர்ச்சியான சிறு குழுக் கூட்டம்.
- ஆசிரிய அபிவிருத்தித் தேவைகளுக்காக பொருத்தமான முறைகளுக்கு புறம்பாக உதவியுடன் அமுல்படுத்தும் வேலைத்திட்டங்கள்.
- சமநிலையான ஆசிரியர் பயிற்சி (சமமான ஆசிரியர் ஒருவரினால் வழிகாட்டல் - Peer Coaching)
- பாடசாலையை மட்ட வழிகாட்டல் (நிபுணர்களின் வழிகாட்டல் - Mentoring)
- கண்காட்சி கற்பித்தல் (Demonstration)
- தனிப்பட்ட ஆலோசனையை வழங்குதல் (ஐனெைைனரயட புரனையஙெந)
- செயல் வழி ஆய்வுகள்
- சம்பவ பகுப்பாய்வு
- மேற்பார்வை (Observation)/ அனுபவ பரிமாற்றல்களை மேற்கொள்ளும் வேலைத்திட்டம் (Sharing Experiecnse)

இம்முறை மற்றும் அனைத்து செயற்பாடுகளும் அல்லது அவற்றின் அசைவுகள் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழல்சார் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட முடியும். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரிய அபவிருத்தி - ஆலோசனைக் கோவையினை பரீசீலனை செய்வது இதன் போது பயன்மிக்கதாகும். ஆசிரிய அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஆசிரியர்களை பங்கேற்கச் செய்யும் பாடசாலையின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கு காரணமாக அமைந்துள்ளதுடன் கட்டாயமாக அனைத்து ஆசிரியர்களையும் இதற்காக பங்கேற்கச் செய்வது அதிபரின் பொறுப்பாகும்.

**05. மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகள்.**

அதிபர் மற்றும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரிய அபிவிருத்தி துணைக் குழுவினால் அனைத்து வேலைத்திட்டங்களையும் அமுல்படுத்தும் பொறுப்பினை ஏற்கவேண்டும். அமுல்படுத்தும் முன்னேற்ற மீளாய்வு மற்றும் மேற்பார்வையை மேற்கொண்டு அறிக்கைப்படுத்தும் முறையினை முன்னெடுக்க வேண்டும். அனைத்து வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் அதனைப்போன்று ஆண்டு இறுதியில் மொத்த ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை தயாரித்தல் பாடசாலைகளினால் முன்னெடுக்க வேண்டும். இது தொடர்பில் முன்னேற்ற மீளாய்வுக் அறிக்கை அனைத்து தவணை இறுதியிலும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்க வேண்டும்.

26/2018 சுற்றறிக்கைக்கு உரியதாக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்புசார், அளவியல் சார் மற்றும் கட்டமைக்கப்பட்ட அபிவிருத்தியிற்காக திட்டமிடல் மற்றும் பெறுகை தொடர்பான சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல் ஆலோசனை கையேட்டிற்கு அமைய பாடசாலை அனுசரணை மற்றும் மேற்பார்வை பணியின் போது இவ் வேலைத்திட்டத்திற்காக தேவையான உதவிகள், வழிகாட்டல்களை வழங்குவது மாகாண கல்வித் திணைக்களம்/வலய கல்வி அலுவலகம்/கோட்டக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துமாறு மேலும் அறிவிக்கப்படுவதுடன் பாடசாலை அபிவிருத்தியிற்காக ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் தேவைகள் மற்றும் முக்கியத்துவத்தை விளங்கி பொறுப்புடன் மற்றும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு

அமைய தங்களது மாகாணத்தின்/வலயத்தின்/கோட்டத்தின்/பாடசாலைக் கல்வி அபிவிருத்தியினை நிலைப்படுத்துவதாக குறிப்பிடுகிறேன்.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட கல்வி செயலாளரின் இலக்கம் 10/2013 மற்றும் 2013.03.11 ஆம் திகதிய சுற்றறிக்கையும். இணைப்பு இலக்கம் ED/03/20/05/10-2 மற்றும் 2018.12.18 ஆம் திகதி கொண்ட ஆலோசனைக் கடிதத்திற்கு அப்பால் இச் சுற்றறிக்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எம்.என். ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் :

1. கணக்காய்வாளர் - வி.அ.கோ/ தே.நட
2. தலைவர் - தேசிய கல்வி ஆணைக்குழு - வி.அ.கோ/ தே.நட
3. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் - வி.அ.கோ/ தே.நட
4. சகல பணிப்பாளர்கள், கல்வி அமைச்சு. - வி.அ.கோ/ தே.நட
5. பீடாதிபதி, தேசிய கல்வியற் கல்லூரி - வி.அ.கோ/ தே.நட
6. அதிபர், ஆசிரியர் பயிற்சி கல்லூரி - வி.அ.கோ/ தே.நட
7. முகாமையாளர், தொழில்சார் ஆசிரிய அபிவிருத்தி மத்திய நிலையம் - வி.அ.கோ/ தே.நட




# SBPTD in Schools

Continuous Professional Development

T.Lenin
DDE (Dev)

# Directed by

## Circulars & Instructions



- SBTD - 10/2013 (TSEP) Guide Book
- SBPTD - 45/2019 - GEMP 2019 – 2024
- Instruction Letter for all school (SBPTD) 2018.12.28 principals
- Leaflets by MOE

# Financial Assistance

## Circulars

- 26/2018 பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்பு ரீதியான, அளவு ரீதியான கட்டமைப்பு ரீதியான அபிவிருத்திக்கான திட்டமிடல்கள் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருபம்

- 19/2019 திருத்தங்கள்



## 6.12 ஊழியர்களின் தொழில் வாண்மை விருத்திக்கு நடவடிக்கை எடுத்தல்

6.12.1 கல்வி சார், கல்வி சாரா ஊழியர்களின் தொழில் வாண்மை விருத்தித் தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலை மட்ட வாண்மை விருத்தி தொடர்பாக வளவாளர் குழு இனங் காணப்பட்டு பட்டியல் பாடசாலையில் பேணப்படுதல்.

6.12.2 அதனடிப்படையின் சகலரின் பங்குபற்றலுடன் தரவட்டம், பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித் திட்டம் (SBPTD) கல்வி சாரா ஊழியர்களின் வாண்மை விருத்தி தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

6.12.3 கல்வி சார், கல்வி சாரா ஆளணியினருக்கு வழங்கப் படும் பல்வேறு வெளியக தொழில் வாண்மை விருத்தி வேலைத்திட்டங்களில் பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுதலும் பெற்றுக் கொள்ளப்பட்ட வாண்மை ஏனையோருக்கும் பகிரப்பட ஏற்பாடு செய்லும்.

# Quality Assurance

## பண்புத்தர உறுதிப்பாடு 6

**தலைமைத்துவமும் முகாமைத்துவமும்**

**வினைத்திறன், விளைதிறன், வெளிப்படையான தன்மையுடன் கூடிய முகாமைத்துவ செயற்பாடொன்றினை கொண்ட தலைமைத்துவம்.**

**தேவைப்பாடுகள் 07**

**நியதிகள் 16**

**சுட்டிகள் 45**

TREY research

# SBPTD Executive Committee

# 2019/45

- 3 to 10 Members
- Chairman (DP- Edu Dev or Senior Teach)

- தொழில்சார் அபிவிருத்தி தேவைகளை இனங்காணுதல், முன்னுரிமைப்படுத்துதல் – Internal Evaluation
- பொருத்தமான செயற்பாடுகளை இனங்காணுதல் மற்றும் திட்டமிடல்
- நிதிசார் செலவினம் அற்ற வேலைத்திட்டங்களை விஷேடமாக கருத்தில் கொள்ளுதல் முன்னுரிமையளித்தல்
- வருடாந்த வரவு செலவினை அடிப்படையாகக் கொண்ட SBPTD வேலைத்திட்டத்திற்காக போதியளவு நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்குதல்
- செயற்பாடுகளை வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டங்களில் உள்ளடக்கல்
- வளவாளர் குழாம் ஒன்றை உருவாக்கி உதவியை பெற்றுக் கொள்ளல்
- ஆசிரியர்களின் வினைதிறனான பங்குபற்றுதலுடன் வேலைத்திட்டத்தை அமுல்படுத்துதல்
- அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டங்களில் உற்பத்திதிறனை நேரடியாக மேற்பார்வை செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்
- வேலைத்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவத்தை பாடசாலைகளுக்கிடையே மற்றும் கோட்ட / வலய / மாகாண / தேசிய மட்டத்தில் பரிமாறிக் கொள்ளல்
- முன்னேற்றம் தொடர்பான ஆவணம் தயாரித்தல் மற்றும் வலய கல்விப் பணிமனைக்கு அறிக்கையிடல்.

# Suggested Activities

- ஆசிரியர் கூட்டம் – PRM
- தேவைகளுக்கேற்ப நடாத்தப்படும் சிறுகுழுக்கூட்டம்
- அனுசரணைகளுடனான முறைசார் பயிற்சி வேலைத்திட்டம்
- சமநிலை ஆசிரியர் வழிகாட்டல் – Peer Coaching
- பாடசாலை மட்டநிபுணத்துவ வழிகாட்டல் – Mentoring
- நிகழ்த்திக்காட்டுதல் – Demonstration
- தனிப்பட்ட ஆலோசனை – Individual Guidence
- செயல்வழி ஆய்வுகள் – Action Research
- சம்பவ பகுப்பாய்வு – Case Studies
- அவதானிப்பு சந்தர்ப்பம் – Observation
- அறிவு/அனுபவ பகிர்வு சந்தர்ப்பம் – Knowledge & Experience Sharing

## SBPTD தொடர்பாக பாடசாலையில் பேணப்படவேண்டிய ஆவணங்கள்

- SBPTD திட்டம்
- SBPTD சம்பவத் திரட்டு
- வேலைத்திட்டம் ஒன்றுக்குத் தனியான கோவை
- தவணை முன்னேற்ற அறிக்கைகள்
- வலய அனுமதிக்கடிதம்
- SBPTD தொடர்பான முன்மொழிவுகளுக்கு ஆசிரியர் நிலையத்தில் பேணப்படுகின்ற முன்மொழிவுப் பத்திரம்

## SBPTD தொடர்பாக ஆசிரியரினால் பேணப்பட வேண்டிய ஆவணங்கள்

- தொழில் சம்பவத் திரட்டு
- சுய மதிப்பீட்டுப் படிவங்கள்
- ஆசிரியர் அறிக்கைப் புத்தகம்

# School Teacher Centers – Under SBPTD

## Upgrading Teachers' Rest Rooms into TC

குறிக்கோள்

SBPTD கலாசாரத்தினை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல்

- அனைத்து ஆசிரியரும் வாண்மை விருத்தி நோக்கிய உத்வேகம்
- கற்றல் கற்பித்தல் தொடர்பில் அனுபவங்களையும் சிந்தனைகளையும் பரிமாறல்
- ஆசிரியரிடையான விளைதிறனான ஊடாட்டம், இணைச்செயலாற்றுகை
- ஓய்வுப்பொழுதை விரும்பத்தகு வாண்மைவிருத்திக்கு திசைப்படுத்தல்


எதிர்பார்க்கப்படும் இடுபணிகள்

அறிவு அனுபவ பகிர்வு
முறையியல் அனுபவம் பெறல்
உள்நாட்டு வெளிநாட்டு அனுபவங்கள் பெறுதல் – இணையம்
விடயங்களை உசாவுதல் – புத்தகங்கள், இ கற்றல் சாதனங்கள்
புத்தாக்க திறன்களை உருவாக்கல் – கற்றல் கற்பித்தல்
ஓய்வுப்பாடங்களை தன் வாண்மைவிருததிக்கு பயன்படுத்தல்
கணினி தொலைக்காட்சிகளுடு கல்வி விடயங்களை உசாவுதல்

- Computers
- Printers
- Photocopiers
- Internet Facilities
- Water Dispenser
- White Board
- Book Shelves
- Scanners
- Notice Board
- TV
- Fans
- Furnitures

# Check List - Principal

## What we have to do in schools?




- வழிகாட்டிகள், சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல் கடிதங்கள் என்பவற்றை உள்ளடக்கிய கோவை
- SBPTD அறிவூட்டல் செயலமர்வு – பாடசாலை மட்டம்
- SBPTD குழு தாபிக்கப்படுதல்
- SBPTD குழுக்கோவை, அறிக்கைப்புத்தகம்
- ஆசிரியர் வாண்மைவிருத்தி தேவைகள் இனங்காணல்
- பூர்த்தி செய்வதற்கான திட்டங்களை AIP ல் உள்ளடக்குதல்
- நடைமுறைப்படுத்துதல்
- அறிக்கைப்படுத்துதல்
- ஆசிரியர் துலங்கல் பெற்றுக்கொள்ளுதல்
- பின்னூட்டல், முன்னூட்டல்
- முன்னேற்ற மீளாய்வும் தொடருதலும்

TREY research



# Thank You

T.Lenin
0777252022
ktlenin2010@gmail.com
ZEO - VS

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 Fax +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/03/20/05/10-2 — ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. — දිනය / திகதி / Date 2018.12.28

சகல பாடசாலை அதிபர்களுக்கும் (தேசிய மற்றும் மாகாண பாடசாலைகள்)

**பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி (School – Based Professional Teacher Development (SBPTD)) வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்**

மாற்றமடையும் உலகிற்கு பொருத்தமான ஆக்கத்திறன்மிக்க மற்றும் மென்திறன்களுடன் கூடிய சமபலமான ஆளுமையுடன் கூடிய எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும் நோக்கில் பாடசாலையின் ஒவ்வொரு ஆசிரியரும் தமது தொழில்சார் அறிவு, தொழில் நாணயம் போன்றே தொழில் கௌரவத்தினையும் இலக்காகக்கொண்டு 10/2013 இலக்க சுற்றிக்கையின் பிரகாரம் தற்போது பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டமானது (SBTD) மேலும் உற்பத்தித்திறன் மிக்க வகையில் அதனை பேணும் நோக்கில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி (SBPTD) வேலைத்திட்டம் தொடர்பான எண்ணக்கருவினை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் பிரகாரம் சகல பாடசாலைகளும் இவ் வேலைத்திட்டத்தினை பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறியத்தருகின்றேன். அதற்கு கீழ் தரப்பட்டுள்ள ஆலோசனை மற்றும் வழிகாட்டிகளை பின்பற்றுதல் சாலப்பொருத்தமானதாக அமையும்.

*www.guruwaraya.lk*

02. இடைக்கால பொதுக் கல்வித் துறை அபிவிருத்தித் திட்டம் (2018-2025) இன் கீழ் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டமானது, மென்மேலும் ஆசிரியர்களின் அன்றாட கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டிற்கேற்ப அறிவியல் போதனைத் திறன்களை தொடர்ந்தும் விருத்தி செய்வதற்கும், பாடசாலையில் ஆசிரியர் வகிபங்கினை விருத்தி செய்வதற்கும், அவ்வாறே சக ஆசிரியர்களிடையே (Peer Group) தொழில்சார் அனுபவங்களை பரிமாறிக்கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்குவதை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளின் மூலம் அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

I. மாணவர்களின் பல்வேறுபட்ட கற்றல் தேவைகளுக்கேற்ற வகையில் விடய அறிவு மற்றும் அறிவியல் போதனைத் திறன்களை விருத்தி செய்யும் செயற்பாடுகளை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

II. மாணவர்களின் சமூக – உணர்ச்சித் திறன்கள் (Social- Emotional Skills), அறிவுசார் திறன்களின் விருத்தியினை இலக்காகக்கொண்ட புதிய கண்டுபிடிப்புகளுக்கான கற்றல் கற்பித்தல் நுட்பங்கள் மற்றும் செயற்பாடுகளின் பயன்பாட்டிற்கு ஆசிரியர்களை திசைமுகப்படுத்தல், வலுப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல்.

III. இந்த அமைச்சின் பாடசாலைக் கல்விக்கான பண்புத்தரத்தினை உறுதி செய்தல் மற்றும் அதனோடு இணைந்த பரிந்துரைகளுக்கு ஏற்ப பாடசாலையின் வருடாந்த திட்டத்தில் ஓர் பிரிவாக ஆசிரியர் அபிவிருத்தித் தேவைப்பாட்டினை இனங்காணல், வேலைத்திட்டம் ஒன்றினை செயற்படுத்தல் மற்றும் பின்னூட்டல் செயல்முறையினை ஒருங்கிணைப்பு செய்தல்.

IV. பாடசாலை முன்னேற்றத்திற்கான விரிவாக்க வேலைத்திட்டத்தின் (Enhancement Program for School Improvement (EPSI)) கீழ் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister — +94112784832, Fax +94112784825, education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary — +94112784811, Fax +94112785162, secretary.education@moe.gov.lk

03. கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வி அமைச்சுகளினால் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்பாடுகளை செயற்படுத்தும் நோக்கில் பாடசாலைகளை வலுப்படுத்துவதற்கும், அச் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கும், மேற்பார்வை செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

***www.guruwaraya.lk***

04. பாடசாலையின் தேவைகள் மற்றும் சுற்றாடலுக்கு பொருத்தமான பல்வேறுபட்ட ஆசிரிய தொழில்சார் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தற்போது அமுலில் உள்ளன. அவற்றிற்கு துணையாக அமையும் பல்வேறுபட்ட நுட்பங்கள் மற்றும் செயற்பாடுகள்: உதாரணமாக ஆசிரியர் ஒன்றுகூடல், அடிக்கடி நிகழ்த்தும் சிறு குழுக் கூட்டங்கள் (ஆசிரியர் தேவைகளுக்கேற்ப), ஆசிரியர் அபிவிருத்தி தேவைகளுக்கு பொருத்தமான வகையில் புற உதவிகளுடன் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்கள், கூட்டுப் பயிற்சி (Peer Coaching), பாடசாலை அடிப்படையான ஆன்மீக நிபுணர் ஒருவரது வழிகாட்டல் (Mentoring), செயல்விளக்க கற்பித்தல் (Demonstration), தனிப்பட்ட வழிகாட்டல் (Individual Guidance), செயல்வழி ஆய்வு, விடய ஆய்வு மற்றும் கள அவதானிப்பு/அனுபவம் என்பவற்றை தம்மிடையே பரிமாறிக்கொள்ளும் வேலைத்திட்டங்கள் (Sharing Experience) போன்றவற்றினை குறிப்பிடலாம். ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஆசிரியர்கள் கலந்துகொள்ளுதல் பாடசாலைச் செயற்பாடுகள் சிறந்த முறையில் முன்னேற்றம் காண்பதற்கு காரணமாக அமைவதோடு கட்டாயமாக சகல ஆசிரியர்களையும் இதில் கலந்துகொள்ளச்செய்வது அதிபரினது பொறுப்பாகும்.

05. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் ஆலோசனை வழிகாட்டி ஒன்று சகல பாடசாலைகளுக்கும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அவ் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் விரிவாக்க மானியம் (School Based Learning Enhancement Grant - SBLEGs) வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பத்மசிறி ஜயமான்ன
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் :

1. சகல மாகாண பிரதம செயலாளர்கள் - தய. நடவடிக்கைக்காக
2. சகல மாகாண கல்விச் செயலாளர்கள் - தய. நடவடிக்கைக்காக
3. சகல மேலதிக செயலாளர்கள், கல்வி அமைச்சு - தய. நடவடிக்கைக்காக
4. சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், - தய. நடவடிக்கைக்காக
5. பிரதம நிதி அலுவலர், கல்வி அமைச்சு - தய. நடவடிக்கைக்காக
6. பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி), கல்வி அமைச்சு - தய. நடவடிக்கைக்காக
7. சகல கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சு - தய. நடவடிக்கைக்காக
8. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் - தய. நடவடிக்கைக்காக
9. சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் - தய. நடவடிக்கைக்காக
10. சகல தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகள் - தய. நடவடிக்கைக்காக
11. சகல ஆசிரியர் கல்லூரி அதிபர்கள் - தய. நடவடிக்கைக்காக
12. சகல ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர்கள் - தய. நடவடிக்கைக்காக
13. கணக்காய்வாளர் நாயகம் - தய. தகவலுக்காக
14. உள்ளக கணக்காய்வாளர், கல்வி அமைச்சு - தய. தகவலுக்காக

கல்வி அமைச்சு

ஆசிரியர் அபிவிருத்தி நிர்வாக அலகு – பொதுக்கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டம்

## பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி (SBPTD) வேலைத்திட்டம்

## பாடசாலை மட்டக் கண்காணிப்புக்கான செவ்வைபார்த்தல் படிவம்

**பாடசாலைப் பெயர்:** ……………………………….. **ஆசிரியர்கள் எண்ணிக்கை:**………….

| ஆண்டு | |
|---|---|

| | |
|---|---|
| செவ்வை பார்த்தல் சந்தர்ப்பம் - 1 | |
| செவ்வை பார்த்தல் சந்தர்ப்பம் - 2 | |

### 01. பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பான (SBPTD) அடிப்படைத் தகவல்கள்

கீழே தரப்பட்டுள்ள பிரமாணங்களுக்கான விடைகளுக்கு ஆம் எனில் ✓அடையாளமும் இல்லையெனில் X அடையாளமும் இடுங்கள். தகவல்கள் அடங்கிய மாதிரி செவ்வை பார்த்தல் படிவத்தை **மே மாதம் 15 ஆம்** திகதிக்கும் ஒக்டோபர் மாதம் 15 ஆந் திகதிக்கும் முன்னர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் / SBPTD இணைப்பதிகாரி அவர்கனிடம் கையளியுங்கள்.

| | பிரமாணங்கள் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1 | சுற்றறிக்கைகள் /அறிவுரைப்பு வழிகாட்டிகள் என்பன இற்றைப்படுத்தப்பட்டு கோவைப்படுத்தப்பட்டுள்ளது. | | |
| 2 | குழு தாபிக்கப்பட்டு பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. | | |
| 3 | வேலைத்திட்டம் தொடர்பாக ஆசிரியர்களுக்கும் அது சார்ந்தவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | | |
| 4 | குழுக் கூட்ட அறிக்கைக்கான கோவையொன்று பேணப்படுகின்றது. | | |
| 5 | ஆசிரிய வாண்மை விருத்தித் தேவைகள் இனங்காணப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. | | |
| 6 | வருடாந்த வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | | |
| 7 | ஆசிரிய வாண்மை விருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திட்டம் நடைமுறையில் உள்ளது. | | |
| 8 | நடைமுறையில் உள்ள திட்டத்திற்கமைய தொடர்ச்சியான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. | | |
| 9 | வேலைத்திட்டம் தொடர்பான அறிக்கைப்படுத்தல் முறையாக இடம்பெறுகின்றது. | | |
| 10 | SBPTD வேலைத்திட்டம் தொடர்பான ஆசிரியர்களது துலங்கலைப் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறை அமைக்கப்பட்டுள்ளது. | | |
| 11 | பின்னூட்டல் மற்றும் முன்னூட்டல் வேலைத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. | | |
| 12 | இருக்கின்ற வளங்கள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றன. | | |
| | 1. மனித வளம் | | |
| | 2. பௌதிக வளம் | | |

## 2. ஆசிரியர்களது சுய மதிப்பீட்டுப் படிவத்தின் சாராம்சம்

ஆசிரியர்கள் துலங்கல்களுக்கு ஏற்ப ✓அடையாளமிட்ட விடைகளினதும் X அடையாளமிட்ட விடைகளினதும் மொத்த எண்ணிக்கையை உரிய கூட்டினுள் குறிப்பிடுக.

| கருத்துக்கள் / துலங்கல் | செயற்பாடு | | | | | | | | | | | | | | | | வேறு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பாடசாலை மட்டத்திலான வழிப்படுத்தல் சேவை (mentoring) | | முறைசார்ந்த கற்றல் குழு | | பாட அவதானிப்பு | | சம்பவக் கற்கை | | மாதிரிப் பாட அவதானிப்பு | | ஆய்வு | | மிகச்சிறப்பான நடவடிக்கைகளைப் பரிமாற்றம் செய்து கொள்ளல் | | முறைசார்ந்த விதமான ஆசிரியர் கலந்துரையாடல் | | | | | |
| | √ | x | √ | x | √ | x | √ | x | √ | x | √ | x | √ | x | √ | x | √ | x | √ | x |
| பங்குபற்றல் | | | | | | | | | | | | | | | | | | | | |
| செயலூக்கமுள்ள பங்களிப்பை வழங்குதல் | | | | | | | | | | | | | | | | | | | | |
| புத்துணர்வு மிக்க கற்றல்-கற்பித்தல் முறைப் பயன்பாட்டில் அனுபவம் பெறல் | | | | | | | | | | | | | | | | | | | | |
| பெற்றுக்கொண்ட அனுபவங்களைக் கற்றல்-கற்பித்தல் செயன்முறையின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தல் | | | | | | | | | | | | | | | | | | | | |
| தேவையான வளங்கள், வசதிகளை வழங்குதல் மற்றும் வழிகாட்டல் என்பன போதுமானவை | | | | | | | | | | | | | | | | | | | | |
| பாடசாலை வேளையிலும் மற்றும் அதற்கு மேலதிகமாகவும் தேவைக்கேற்றவாறு நேரத்தைப் பயன்படுத்தல் | | | | | | | | | | | | | | | | | | | | |

## 3. பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்திச் செயன்முறை தொடர்பான ஆசிரியர் தேர்ச்சிகள்

t1, t2 என்ற இலக்கங்கள் ஆசிரியர்களைக் குறிப்பிடுவனவாகும். அதற்குப் பதிலாக ஆசிரியருக்கு உரிய எண் இருப்பின் அதனையோ அல்லது ஆசிரியரைக் குறிக்கும் பெயரின் முதலெழுத்தையோ பயன்படுத்தி தேவையெனில் மேலும் நிரல்களை அமைத்துப் பெறுமான அளவைக் குறிப்பிடுங்கள். குறிப்பிட்ட காலத்திற்கேற்ப, ஒவ்வொரு ஆசிரியரினதும் ஆசிரிய நடத்தைகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. 15 ஆசிரியர் தேர்ச்சிகளையும் உரியவாறு அவதானித்து, நம்பிக்கையும் ஏற்புடைய தன்மையும் கொண்டவாறு ஒவ்வொரு தேர்ச்சிகளின் விருத்திக்கும் உரிய புள்ளிகளை வழங்குக. இந்நடவடிக்கைக்கான வகைகூறல் அதிபர் / பி.அதிபர் / பிரிவுத் தலைவர் / SBPTD குழு ஆகியோரைச் சார்ந்தது.

| ஆசிரியரது பெயர் அல்லது அவரைக் குறிக்கும் இலக்கம் | ஆசிரியர் வாண்மைத் தேர்ச்சி / ஆசிரிய இலக்கத்திற்கமைய பெறுமானம் | | | | | | | | | | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இற்றைப்படுத்தப்பட்ட பாட அறிவை வெளிப்படுத்துவார். | தெளிவாகவும் மனங்கவரும் விதமாகவும் தொடர்பாடுவார். | குழு உணர்வுடன் செயற்படுவார் | கற்றல் பல்வகைமைக்கு ஏற்ப, மாணவர் செயற்பாட்டு முறையைப் பன்படுத்தி, கற்றல்-கற்பித்தலில் ஈடுபடுவார். | உள-சமூகத்திறன்களை தமது நடத்தையில் உள்வாங்குவதற்கு மாணவரை வழிகாட்டுவார். | முன்வைத்தல் திறனை விருத்தி செய்துகொள்வார் (presentation skills) | ஆசிரியர் ஓர் ஆய்வாளராகச் செயற்படுவார். | ஏற்ற கணிப்பீட்டு. மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்துவார். | சுய விருப்பின் பேரில் வாண்மை விருத்தி நடவடிக்கையில் ஈடுபடுவார். | ஒரு வசதிப்படுத்துநராகச்செயற்படுவார். (Facilitator) | கற்றல்-கற்பித்தல் சம்பவங்களைப் பகுப்பாய்வு செய்து அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவார். | ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் ஈடுபடுவார். | மென்திறன்களை வெளிப்படுத்துவார். | நவீன தொழில்நுட்ப முறைகளைக் கையாள்வார். | சவால்கள் கொண்ட சந்தர்ப்பங்களை வெற்றிகரமாக முகாமை செய்வார். | |
| t1 | | | | | | | | | | | | | | | | |
| t2 | | | | | | | | | | | | | | | | |
| t3 | | | | | | | | | | | | | | | | |
| t4 | | | | | | | | | | | | | | | | |
| t5 | | | | | | | | | | | | | | | | |
| t6 | | | | | | | | | | | | | | | | |
| t7 | | | | | | | | | | | | | | | | |
| t8 | | | | | | | | | | | | | | | | |
| t9 | | | | | | | | | | | | | | | | |
| t10 | | | | | | | | | | | | | | | | |
| t11 | | | | | | | | | | | | | | | | |
| t12 | | | | | | | | | | | | | | | | |
| t13 | | | | | | | | | | | | | | | | |
| t14 | | | | | | | | | | | | | | | | |
| t15 | | | | | | | | | | | | | | | | |
| t16 | | | | | | | | | | | | | | | | |
| t17 | | | | | | | | | | | | | | | | |

பெறுமான அளவு 3 - நன்று 2 - சாதாரணம் 1 - விருத்தி அடைய வேண்டும்.

பெறுமான அளவு 3 = நன்று, 2 = சாதாரணம், 1 = விருத்தி அடைய வேண்டும்

4. பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டம் நடைபெற்றதன் காரணமாக

| | | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1 | மாணவர்கள் புத்துணர்வுடன் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். | | |
| 2 | மாணவர் வரவு அதிகரித்துள்ளது. | | |
| 3 | ஆசிரியர் மாணவர் இடைத்தொடர்பு விருத்தியடைந்துள்ளது. | | |
| 4 | மாணவர் எதிர்பார்த்த இலக்கை நோக்கி அண்மித்தவாறு உள்ளனர். | | |
| 5 | பாடசாலை கற்றல் செயற்பாடுகளில் பண்புத்தர விருத்தியொன்றைக் காணக்கூடியதாக உள்ளது. | | |

ஆலோசனைகளும் முன்மொழிவுகளும்

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.................................... ......................... ................

அதிபர் / பி.அதிபர் / பிரிவுத் தலைவர் / SBPTD குழு கையொப்பம் திகதி

**கல்வி அமைச்சு**

**ஆசிரியர் அபிவிருத்தி நிர்வாக அலகு – பொதுக்கல்வி நவீன மயமாக்கல் செயற்றிட்டம்**

**பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி (SBPTD) வேலைத்திட்டம்**

## ஆசிரியர் சுயமதிப்பீட்டுப் படிவம்

ஆசிரியர் பெயர் ...................................................... குறியீட்டு இலக்கம் .........

(ஏற்றுக்கொண்டமைக்கு '√' எனவும் இல்லையெனில் 'X' எனவும் அடையாளமிடுக.) மதிப்பீட்டின் இறுதியில் இப்படிவத்தை அதிபர் / பி.அதிபர் / பிரிவுத் தலைவர் / SBPTD குழுவிடம் மே மாதம் 1 ஆந்திகதி மற்றும் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்கவும்.

| கருத்துக்கள் / துலங்கல் | செயற்பாடுகள் / வேலைத்திட்டம் | | | | | | | | வேறு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பாடசாலை மட்ட வழிகாட்டல் (mentoring) | முறைசார் கற்றல் குழு | பாட அவதானிப்பு | சம்பவக் கற்கை | மாதிரிப்பாட அவதானிப்பு | ஆய்வு | மிகச்சிறந்த நடவடிக்கைகளைப் பரிமாற்றும் | முறைசார்ந்த விதமான ஆசிரியர் கலந்துரையாடல் | |
| பங்குபற்றியுள்ளேன் | | | | | | | | | |
| செயலூக்கமுள்ள பங்களிப்பை வழங்கியுள்ளேன். | | | | | | | | | |
| புத்துணர்வு மிக்க கற்றல்-கற்பித்தல் முறைப் பயன்பாடு தொடர்பான அனுபவத்தைப் பெற்றுள்ளேன். | | | | | | | | | |
| பெற்றுக்கொண்ட அனுபவங்களைக் கற்றல்-கற்பித்தல் செயன்முறை மேம்பாட்டுக்குப் பயன்படுத்தியுள்ளேன். | | | | | | | | | |
| தேவையான வளங்கள், வசதிகளை வழங்கல் மற்றும் வழிகாட்டல் என்பன போதுமானவை. | | | | | | | | | |
| பாடசாலை நேரத்தையும். அவசியமானபோது மேலதிக நேரத்தையும் பயன்படுத்தல் | | | | | | | | | |

**கருத்து மற்றும் ஆலோசனை**

......................................................................................................................................................

........................ ................................ ............

பெயர் கையொப்பம் திகதி

**அவதானிப்புக் குறிப்பு**

........................ ................................ ............

பெயர் கையொப்பம் திகதி

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V





# பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை அபிவிருத்தி வழிகாட்டல் கையேடு





கல்வி அமைச்சு - 2019

World Bank
GEMP 2019-2024

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

# பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை அபிவிருத்தி

## வழிகாட்டல் கையேடு

ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை
கல்வி அமைச்சு - 2019

Scanned with CamScanner

## கல்விச் செயலாளர் வழங்கும் செய்தி

உலகின் எந்த நாடாக இருந்தாலும் அங்குள்ள பாடசாலைக் கல்வியின் பிரதான இலக்காக அமைவது நல்ல குடிமகனை உருவாக்குதல், பூரணமான ஒரு மனிதனைக் கட்டியெழுப்புதல், எதிர்கால வேலையுலகிற்கு வினைத்திறனுள்ள நபரை அர்ப்பணித்தல் ஆகிய விடயங்களாகும். கல்வி என்பது மக்களின் அடிப்படைத் தேவை மட்டுமல்ல அனைவரது உரிமையும் ஆகும். எமது நாட்டில் பாடசாலையே கல்வியை வழங்கும் பிரதான மானிட ஒழுங்கமைப்பு ஆகும். அதனைச் செயலூக்கத்துடன் முன்னெடுத்துச் செல்வது ஆசிரியர்களே. அதற்கான விசேட செயற்பாடுகளும் அதன் வகைகூறலும் ஆசிரியர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. **கல்வியின் இதயம் போன்றவர்கள் ஆசிரியர்களே** எனக் கருதப்படுவதற்கு அவர்கள் கல்வியில் எதிர்பார்க்கப்படும் ஏதேனும் ஒரு நோக்கத்தை எய்துவதற்கான செயன்முறையில் மாணவரை ஈடுபடுத்துவது காரணமாக அமைகின்றது.

ஆசிரியர்கள் தமது கடமைகளைச் செம்மையாகவும் சமூகம் எதிர்பார்க்கும் விதத்திலும் முன்னெடுத்துச் செல்வதற்கு அவர்களது தொழில் வாண்மைத் திறன்களை வலுப்படுத்திக்கொள்ளும் செயன்முறை தொடர்ச்சியாக இடம்பெறல் வேண்டும். குறிப்பாகக் கற்றல் - கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டுச் செயலொழுங்குகளில் எழுகின்ற சவால்களை வெற்றிகொள்வதற்கு ஆசிரியர்கள் தொடர்ந்தும் வாண்மை விருத்திச் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். அதற்கெனவே பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டத்தைத் தீவளாவிய ரீதியில் சகல பாடசாலைகளிலும் கிரமமான முறையில் செயற்படுத்துவதற்கு ஏற்றவாறு, தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள் இக்கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கல்விப்புல நடவடிக்கைகளில் இணைந்துள்ள அனைத்து ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் அனைவரும் இவ் ஆலோசனை வழிகாட்டல் கையேட்டைப் பரிசீலித்துப் பயன்படுத்தி ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பான நவீன கண்ணோக்கத்துடன் எமது நாட்டின் பிள்ளைகளுக்காக வினைத்திறன் மிக்க மகிழ்ச்சிகரமான பாடசாலையை நிர்மாணிப்பதில் பங்களிப்புச் செய்யுமாறுநான் அழைப்பு விடுக்கின்றேன். மேலும், பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பான ஆலோசனை வழிகாட்டியை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு, காலத்தின் தேவைக்கேற்ற பயனுள்ள இம் மகத்தான காரியம் வெற்றி பெறுவதற்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேராசிரியர் கே. கபில சி. கே. பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

Scanned with CamScanner

# மேலதிக செயலாளர் வழங்கும் செய்தி
## (கொள்கை, திட்டமிடல் மீளாய்வு)

மாணவரது பல்வகைமை மற்றும் ஆற்றல்களை இனங்கண்டு எதிர்கால உலகிற்குப் பயனுள்ள வகையில் அவர்களுக்கு வழிகாட்டலை வழங்குவதே பாடசாலைகள் ஆற்ற வேண்டிய சிறப்பான சேவையாகும். அதற்காக தேசிய கல்விக் குறிக்கோள்களுடன் இணைந்தவாறான செயற்பாடுகள் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அதுவே கல்வியின் பண்புத்தரத்தை மேலும் விருத்தி செய்வதற்கு ஏதுவாக அமையும். அதற்காக ஓர் ஆசிரியர், பாடசாலை மட்டத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக இப்பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்திக் கையேடு விளக்கமளிக்கின்றது.

பாடசாலையுடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் இடையீட்டுடன் பாடசாலை பண்புத்தர விருத்தியை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதோடு, அதற்காகப் பாடசாலை கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் பிரதான வழிப்படுத்துனர்களாகத் திகழும் ஆசிரியர்கள் மேலும் வலுவூட்டப்படல் வேண்டும் என்பதும் முக்கிய தேவையாக உள்ளது. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டம் என்பது அதற்குப் பங்களிப்புச் செய்வதற்கான ஓர் உபாய மார்க்கமாகும். இவ்வழிகாட்டல் கையேடு பாடசாலையில் ஓர் உயர்ந்த கற்றல் - கற்பித்தல் பாரம்பரியத்தையும் நவீன கலாசாரத்தையும் கட்டியெழுப்புவதற்கு உதவியாக அமைவதோடு ஆசிரியர்களது சமகாலத்துக்கேற்ற வாண்மை விருத்தித் தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்கான வழிகாட்டலை வழங்கும் எனவும் பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.

இந்த வழிகாட்டல் கையேட்டைப் பரீட்சார்த்தமாகப் பரிசீலனை செய்வதன் வாயிலாக மேலும் பயனுள்ள வாண்மையாளர்களைக் கொண்ட கற்றல் சமூகமொன்று (Professional Learning Community) பாடசாலையில் உருவாக வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். இத்தகைய செயற்பாட்டில் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

கலாநிதி எம். எம். வேஹெல்ல
மேலதிகச் செயலாளர்
(கொள்கை, திட்டமிடல் மற்றும் மீளாய்வு)

Scanned with CamScanner

## மேலதிகச் செயலாளர் வழங்கும் செய்தி (பாடசாலை நடவடிக்கைகள்)

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி அணுகுமுறையானது, சேவையிலுள்ள ஆசிரியர்களுக்குத் தமது கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கைப் பண்புத்தரம் கொண்டதாக நடைமுறைப்படுத்துவதற்கேற்ற ஆசிரியர் தேர்ச்சிகளைத் தொடர்ந்தும் மேம்படுத்திக்கொள்வதில் பங்களிப்புச் செய்யக்கூடிய வினைத்திறன் மிக்க அணுகுமுறை என்பது அனைத்து ஆசிரிய கல்வியியலாளர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நிகழ்காலத்தில் இலங்கைப் பாடசாலை அமைப்பினுள் கல்விச் செயற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்தல் தொடர்பாக நிலவுகின்ற சவால்களுக்கு மிகவும் பொருத்தமான பிரயோகமுறையிலான தீர்வு தான் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி அணுகுமுறை என்பதை கல்வி ஆணைக்குழு அறிக்கை (2016) பதிவு செய்துள்ளது. மேலும் பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மாதிரி ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டங்களின் ஊடாகவும் இக்கருத்து உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைக்குமான தனித்தன்மைக்கு உரியவாறும் பொருத்தமானவாறும் அதிபர் மற்றும் ஆசிரியர் குழாம் தமது ஆசிரியர் விருத்திக்கான தேவைகளைச் சரியாக இனங்கண்டு, பாடசாலையில் உள்ள மனித மற்றும் பௌதிக வளங்களைப் போலவே விசேட சந்தர்ப்பங்களில் வெளிவாரி வளவாளர்களின் உதவியையும் பெற்று ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டங்களைப் பயனுள்ளவாறு முன்னெடுத்தல் வேண்டும். இச் செயற்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்கான முயற்சியின் பெறுபேறாகவே இவ் வழிகாட்டல் கையேடு உங்களிடம் கையளிக்கப்படுகின்றது.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பான எண்ணக்கருவை இனங்கண்டு கொள்ளவும் அதன்படி செயலாற்றவும் அவசியமான வழிகாட்டல் இக்கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் மற்றும் மாணவர் விருத்தி என்பதே பாடசாலையின் ஒட்டுமொத்த விருத்தி என்பதைப் புரிந்து கொண்டு பாடசாலையை மேம்படுத்துவதற்கு அதிபர் உள்ளிட்ட ஆசிரியர் குழுவினர் அனைவரும் முன்வரல் வேண்டும் என வாழ்த்துவதோடு இவ் வழிகாட்டல் கையேட்டைத் தயாரித்த உன்னதமான செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு நல்கிய ஆளணியினருக்கும் வளவாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல். டி. எம். தர்மசேன
மேலதிகச் செயலாளர் (பாடசாலை நடவடிக்கைகள்)

Scanned with CamScanner

## பிரதம ஆணையாளர் வழங்கும் செய்தி

உலகம் துரித வேகத்தில் மாற்றமடைந்து வருகின்ற இன்றைய யுகத்தில் பாடசாலையும் வகுப்பறையும் எவ்விதத்திலேனும் அதற்கு ஏற்ப இசைவாக்கமடைய வேண்டும் என்ற சிந்தனை மீண்டும் மீண்டும் எழுவது இயல்பு. அதனால் சமகாலத்தில் பாடசாலைகள் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது. அவற்றில் பாடசாலைக்கு உரிய ஆசிரிய வளங்களை இலக்காகக் கொண்டு வாண்மை விருத்திச் செயலொழுங்கைப் பயன்தரும் விதமாக நடைமுறைப்படுத்தல் என்பது முதன்மையான சவாலாக உள்ளது.

பாடத்திட்டம் மற்றும் விடயப் பரப்பு பொதுவானதாக இருந்தபோதிலும் மாணவர்கள் மற்றும் கற்றல் - கற்பித்தல் சூழல் என்பன பல்வேறு தன்மைகளைக் கொண்டவை. அதனால் வகுப்பறைக் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை அந்தந்தப் பாடசாலையின் குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்றவாறு உருவாக்கிக்கொள்ளல் வேண்டும். அங்கு மாணவர் மேம்பாட்டை இலக்காகக்கொண்ட கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளைக் கட்டியெழுப்புவதற்கும், உரிய பாடசாலையை நோக்காகக்கொண்டு இனங்கண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும் பாடசாலைக்கு வாண்மைத்துவம் மிக்க ஆசிரிய ஆளணியினர் அவசியமாகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரிய வாண்மை விருத்தி மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஆசிரியர்களை வலுவூட்டுவதற்கான வழிகாட்டலை வழங்குவது இவ்வழிகாட்டல் கையேட்டின் நோக்கமாகும். பொருத்தமான அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக்கொள்ளல், பிரச்சினைகளை இனங்காணல், அவற்றின் தீர்வுக்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் போன்றவை தொடர்பாகப் பிரயோகமுறையிலான வழிகாட்டல் ஆலோசனை இதில் உள்ளடங்கியுள்ளது. அதற்கேற்ப, அனைத்து நிறுவனங்களையும் மனித வளங்களையும் சிறந்தமுறையில் இணைப்பாக்கம் செய்துகொண்டு ஆசிரிய வாண்மை விருத்தி வேலைத்திட்டத்தைப் பாடசாலையில் மிகவும் வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு இக்கையேடு உறுதுணையாக இருக்கும் என்பது திண்ணம்.

இம் மகத்தான காரியத்திற்கென எமக்கு வலுவூட்டிய கௌரவ கல்வி அமைச்சர் அவர்களுக்கும் கல்விச் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர்களுக்கும் கல்வியியற்கல்லூரி மற்றும் ஆசிரிய கல்வி நிர்வாகக் கிளை ஆளணியினருக்கும் நன்றி கூறுகின்றேன். அதே வேளையில் இதற்கான நிதி அனுசரணை வழங்கிய உலக வங்கிக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இவ் ஆலோசனை வழிகாட்டல் கையேட்டைத் தயாரிப்பதில் முன்னின்று செயற்பட்ட ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளையின் பணிப்பாளர், கல்வி அதிகாரிகள் உள்ளிட்ட ஆளணியினர் அனைவருக்கும் எனது பாராட்டைத் தெரிவிப்பதோடு பல்வேறு வகையிலும் உதவிகளை வழங்கிய கல்வி அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த நிறுவன அதிகாரிகளுக்கும் கல்வியியல் கல்லூரிகள், ஆசிரிய விருத்தி வள நிலையங்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், மாகாண, வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் பாடசாலை வளவாளர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈ. எம். எஸ். ஏக்கநாயக்க
பிரதம ஆணையாளர்
(ஆசிரியர் கல்வி)



Scanned with CamScanner

## கல்விப் பணிப்பாளர் (ஆசிரிய கல்வி நிர்வாகம்) வழங்கும் செய்தி

கல்வியுடன் தொடர்புபட்ட அனைத்துக் காரியங்களினதும் இறுதி இலக்காக அமைவது மாணவர் விருத்தியாகும். மாணவர் விருத்தியின் வெற்றியானது ஆசிரியர் விருத்தியிலேயே தங்கியுள்ளது. சமூக எதிர்பார்ப்புகள், கலைத்திட்டம், பாட உள்ளடக்கம் மற்றும் கற்றல் - கற்பித்தல் முறையியல் என்பன தொடர்ச்சியாக மாற்றமடைவன. அத்தகைய மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு, அதற்கு இசைவாக்கமடையும் பொருட்டு ஆசிரியர்களும் தொடர்ச்சியாக ஆசிரியர் விருத்தியின் பால் தம்மை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் தொடர்ந்தும் தம்மைக் கற்றலில் ஈடுபடுத்திக்கொள்ளல் வேண்டும்.

அதற்காகவே, தற்காலத்தில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையான பாடசாலை மட்ட ஆசிரிய வாண்மை விருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் முழு உலகமும் அவதானம் செலுத்துகின்றது. இலங்கையில் சகல பாடசாலைகளிலும் பிரயோக முறையிலும் பயனுள்ளதாகவும் அமுலாக்கக்கூடிய விதத்தில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்திச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும், அச் செயற்பாடுகளுக்கான தெளிவான விளக்கம் அளிப்பதன் நோக்கில் இவ்வழிகாட்டல் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மட்ட ஆசிரிய வாண்மை விருத்தி தொடர்பான எண்ணக்கருவை அறிந்து கொள்ளவும் உரிய செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவும் தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டல் இதில் உள்ளடங்கியுள்ளன.

இவ் ஆலோசனை வழிகாட்டல் கையேட்டைத் தயாரிப்பதில் பல்வேறுவகையிலும் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, அதிபர்களும் ஆசிரியர்களும் ஒற்றுமையாகவும் ஒத்துழைப்புடனும் செயற்பட்டுத் தமது பாடசாலை ஆசிரியர்களது வாண்மை விருத்திச் செயலொழுங்கைப் பயன்தருவிதமாகத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென வாழ்த்துகிறேன்.

ஆர். எம். எம். ரத்நாயக்க
கல்விப் பணிப்பாளர்
(ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை)

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

**ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| | கல்விச் செயலாளர் |
| என். டி எம். சித்ரானந்த | முன்னாள் மேலதிக செயலாளர் (கல்வி பண்புத்தரம்) |
| எச். யு. பிரேமதிலக்க | முன்னாள் பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) |
| பி. டி. சி. பியன்வில | பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம் |
| கே. எம். எச். பண்டார | பணிப்பாளர் (ஓய்வு) ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை |
| கே. எம். எச். ஹரீஜா | முன்னாள் பணிப்பாளர், (ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை) |
| யு. எம். பி. உபசாந்த | ஆலோசகர்- பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை |
| கலாநிதி லலிதா பட்டுவிட்டகே | விருத்தி வேலைத்திட்டம், ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை |

**எழுத்தாளர் குழு**

| | |
|---|---|
| எல். எம். வன்சவதி | பீடாதிபதி (ஓய்வுநிலை) வயம்ப தேசிய கல்வியியல் கல்லூரி |
| டபிள்யு. எம். டி. சேனாரத்ன | மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களம், குருணாகலை |
| எஸ். கே. அபேநாயக்க | முகாமையாளர் - ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம், பண்டாரவளை |
| ஜி. எச். ஜி. என். எல். ருக்லாந்தி | முகாமையாளர் - ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம், களுபோவில |
| பி. ஜி. ஐ. கே. ஹேமாலி | பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை |
| பி. ஏ. டி. பி. நிசாந்த | உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை |
| பி. ஏ வி. திலினி | உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை |
| டபிள்யு. டபிள்யு. குலரத்ன | உதவிக் கல்விப் பணிப்பாளர் மாகாண கல்வித் திணைக்களம், இரத்தினபுரி |

**பாட இணைப்பாளர்**

| | |
|---|---|
| கே. ஏ. ஏ. எஸ். ஜயதிலக்க | முகாமைத்துவ சேவையாளர், ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை |

**தமிழாக்கம் -**

| | |
|---|---|
| திருமதி. எம். சபாரஞ்சன் | பணிப்பாளர் (ஓய்வு) பெருந்தோட்டப் பாடசாலைகள் பிரிவு |

**மொழிச் செம்மையாக்கம்**

| | |
|---|---|
| ஷீலா ஸ்ரீதரன், | GIZ செயற்றிட்ட அலுவலர் |



Scanned with CamScanner

# பொருளடக்கம்

அறிமுகம் ........ 1

முதலாம் அத்தியாயம்

தேசிய கல்வி இலக்கு, வாண்மைத்துவ ஆசிரியர் மற்றும் எதிர்காலப் பிரசை ........ 2

1.1 அறிமுகம் ........ 2

1.2 வாண்மைத்துவ ஆசிரியர் ........ 3

1.3 ஆசிரிய வாண்மைத் தேர்ச்சி விருத்திக்கான உபாயமார்க்கம் ........ 7

இரண்டாம் அத்தியாயம்

பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு

2.1 பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி என்றால் என்ன? ........ 8

2.2 பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி ஏன் அவசியம்? ........ 9

2.3 பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத் திட்டத்தினைப் பாடசாலையில் எவ்வாறு ஸ்தாபிப்பது? ........ 10

மூன்றாம் அத்தியாயம் ........ 19

பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் ........ 19

3.1 பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தித் தேவைகளை எவ்வாறு அறிந்து கொள்வது? ...... 19

3.2 பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தியின் தேவையை அறிந்து கொள்ளும் முறையும் செயற்பாடுகளும் ........ 20

3.3 ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பாக பயன்படுத்தக் கூடிய முறைமை மற்றும் செயற்பாடுகள் யாவை? ........ 34

நான்காம் அத்தியாயம்

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டத்தின் கண்காணிப்பும் மதிப்பீடும் ........ 54

4.1 பாடசாலையினால் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பும் மதிப்பீடும் ........ 55

4.2 வெளிவாரி தரப்பினரால் கண்காணிப்பும் மதிப்பீடும் ........ 61

இணைப்பு 1 ........ iii

இணைப்பு 2 ........ vi

இணைப்பு 3: ........ vii

Scanned with CamScanner

# அட்டவணைப் பெயர்ப் பட்டியல்

அட்டவணை 1: பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தியின் தேவையினை அறிந்து கொள்ளலும் பலன்களும்.

அட்டவணை 2: தெரிவு செய்த பாடசாலையொன்றில் க.பொ.த (சா.த) பெறுபேறுகளின் பகுப்பாய்வு.

அட்டவணை 3: ஆங்கில பாட அடைவினை அதிகரிப்பதற்காக ஆசிரியர் தரப்பில் ஏற்படக் கூடிய மாற்றம்.

அட்டவணை 4: பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி முறைகளும் செயற்பாடுகளும்.

அட்டவணை 5: சிரேஷ்ட ஆசிரியர்களின் உதவியினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய துறைகள்.

அட்டவணை 6: பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட உதவியளித்தல் சகபாடி, வழிகாட்டல்கள் ஒப்பீடு.

அட்டவணை 7: பாடசாலையினை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தலின் போது புதிய ஆசிரியர்களுக்கான படிவங்கள்.

Scanned with CamScanner

## உருவப் படங்களின் பட்டியல்

உரு 1: எதிர்காலப் பிரசை

உரு 2: ஆசிரியர் வாண்மை விருத்திக்கான உபாய மார்க்கம்

உரு 3: இலங்கையின் ஆசிரியர் கல்விக் கட்டமைப்பும் அதன் செயற்பாடுகளும்

உரு 4: பாடசாலையில் ஆசிரியர் வாண்மை விருத்தி ஒழுங்கமைப்பு முறைமை

உரு 5: பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்திச் செயன்முறை.

உரு 6: ஆசிரியர் வாண்மை விருத்திக்கான உதவிச் சேவைகள்

உரு 7: ஆசிரியர் வாண்மை விருத்திக்கான உதவிச் சேவை நிறுவனங்கள்

உரு 8: பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்திக்கான செயலொழுங்கு

உரு 9: பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்திக்கான சந்தர்ப்பங்களை அறிந்து கொள்ளும் முறையும் செயற்பாடுகளும்

உரு 10: பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தித் தேவையை அறிந்து கொள்வதற்காகப் "பிரச்சினை மரத்தைப்" பயன்படுத்தல்.

உரு 11: பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தித் தேவையை அறிந்து கொள்வதற்காக "மீன் வரி" அட்டவணையைப் (fishbone) பயன்படுத்தல்.

உரு 12: பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தித் தேவையை அறிந்து கொள்வதற்காக "ஏன்?" நுட்ப முறையினை பயன்படுத்திக் கொள்ளல்.

உரு 13: ஆசிரியர் அபிவிருத்தித் தேவையினை விசேடமாக அறிதல்.

உரு 14: முறைசார்ந்த கற்றல் ஆய்வுக் குழு முறைமை

உரு 15: பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட உதவியளித்தலின் நோக்கம்

உரு 16: பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட உதவியளித்தலின் பயன்கள்

உரு 17: செயல்நிலை ஆய்வின் பிரதான படிமுறைகள்

உரு 18: பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தைக் கண்காணித்தலும் மதிப்பீடும்.

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & SD/ HALDUMMULLA T.M.V

# அறிமுகம்

ஆசிரியர்கள் பல்வேறுபட்ட பாடநெறிகளைப் பின்பற்றிய போதிலும் அவர்களை உயிரோட்டமுடைய வாண்மையாளராக்குவதன் மத்திய நிலையமாக விளங்குவது பாடசாலையாகும். ஆகையினால் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் பல நாடுகள் தற்போது தமது அவதானத்தை செலுத்த தொடங்கியுள்ளன. ஆரம்பத்தில் தொடர்ச்சியான ஆசிரியர் விருத்தி (Continuous Teacher Development - CTD), பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD) என்ற பெயரில் குறிப்பிடப்பட்ட அவ்வெண்ணக்கரு தற்காலத்தில் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி (SBPTD) என அறிமுகஞ் செய்யப்படுகின்றது.

இலங்கையில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பல்வேறுபட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட அதே வேளை 2012 ஆண்டு தொடக்கம் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி (School Based Teacher Development - SBTD) என்ற பெயரில் 2016 தொடக்கம் 98 வலயங்களில் செயற்படுத்தப்பட்டது. இவ் வேலைத்திட்டத்திற்குரிய சுற்றறிக்கை மற்றும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி வழிகாட்டல் கைந்நூல் (2013) மூலம் வழிகாட்டல் மேற்கொள்ளப்படுவதோடு, வலய, மாகாண, தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்பார்வையும், மதிப்பீடும் மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கையில் அனைத்துப் பாடசாலை அமைப்பையும் உள்ளடக்கி நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் 2019 முதல் "பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி" (School Based Professional Teacher Development – SBPTD) என்றவாறு நடைமுறையில் உள்ளது. உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் இயங்கும் பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தில் (General Education Modernization Project - GEMP) உள்ளடங்கும் வேலைத்திட்டமாக அறிமுகம் செய்யப்படும் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டத்தில் பின்வரும் காரணிகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றன.

- பாட அறிவு, அதற்குப் பொருத்தமான செயற்பாடுகள் மற்றும் முறையியல் ஊடாக மாணவர்களது கற்றல் தேவைகளை நிறைவு செய்தல்.
- ஆக்கபூர்வமாகவும் ஒத்துழைப்புடனும் இடம்பெறும் கற்றல் ஊடாக மாணவர்களது உள சமூகத் திறன்களை விருத்தி செய்தல்.
- வகுப்பறையில் அன்றாடம் இடம்பெறும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆசிரியர் தேர்ச்சிகளைத் தொடர்ந்தும் மேம்படுத்தல்.
- ஏனைய ஆசிரியர்களுடன் தமது அறிவு மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதில் ஈடுபடுதல்.

மேற்கூறப்பட்ட காரணிகளை உள்ளடக்கியவாறு, பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டம், மேலும் பயனுள்ளவிதமாகவும் வலுவானதாகவும் தொடர்ச்சியாகச் செயற்பட்டுப், பாடசாலையில் உள்ள வளங்களின் உச்சபயனை அடைவதற்கு அவசியமான உதவியை வழங்கும் பொறிமுறையாகப் பாடசாலையில் முன்வைக்கப்படுகிறது.

கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் பண்புத்தர கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளின் வாயிலாகப் பெற்றுக்கொள்ளும் மீளாய்வைப் பாடசாலை வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கிப் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்துடன் இணைத்து ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

2019 ஆம் ஆண்டு முதல் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தவுள்ள பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டம் தொடர்பான விபரங்கள் மற்றும் வழிகாட்டல், (2013 இல் தயாரிக்கப்பட்ட "பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வழிகாட்டல் கையேடு" மீண்டும் தொகுக்கப்பட்டு பாடசாலை மட்டத்தில் இலகுவாக நடைமுறைப்படுத்தும் விதமாக) அவசியமான உதாரணங்கள், மற்றும் விளக்கங்கள் இவ் வழிகாட்டல் கையேட்டில் முன்வைக்கப்படுகின்றது

Scanned with CamScanner

UVA TAMIL - PDF & BD/HALDUMMULLA T.M.V

முதலாம் அத்தியாயம்

# தேசிய கல்வி இலக்கு, வாண்மைத்துவ ஆசிரியர் மற்றும் எதிர்காலப் பிரசை

## 1.1 அறிமுகம்

அபிவிருத்தியை நோக்கியதும் துரித வேகத்தில் நாளுக்கு நாள் மாற்றமடைந்து வருகின்றதுமான இன்றைய உலகிற்குப் பொருத்தமான அறிவு, விளக்கம் போன்ற அறிவாற்றல் முதல் விமர்சனரீதியானதும் தேடியாய்கின்ற சிந்தனை மற்றும் ஆக்கபூர்வமான திறன்கள் நிரம்பிய மிக உயர்ந்த் அறிவுப்புலமையுடன் மென்திறன்களையும் பிரதானமாகத் தன்னகத்தே கொண்ட சம ஆளுமையுடைய எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதே ஒட்டுமொத்த கல்வி நடவடிக்கைகளின் ஊடாக எதிர்பார்க்கப்படும் பலனாகும். அதற்காகச் செயற்படும்போது மனித மேம்பாட்டு எண்ணக்கரு சட்டக்கத்தின் உள்ளே கல்வியின் ஊடாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய கீழே தரப்பட்டுள்ள இலக்குகள் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்டுள்ளன. இலக்குகளை எய்துதல் கல்விப்புலம் தொடர்பான தமது எதிர்காலத்துக்கான தொலைநோக்கு என்பதை தேசிய கல்வி ஆணைக்குழு விளங்கிக் கொண்டுள்ளது.

**தேசிய கல்விக் குறிக்கோள்கள்**

1. தேசிய ஒருங்கிணைவு, தேசிய ஒன்றிணைவு, தேசிய ஒற்றுமை என்பவற்றின் அடைவு
2. எங்கும் பரவியவாறு சமூக நீதியின் நிறுவுகை
3. மனிதகுல வரலாற்றில் முதன்முறையாகக் காற்றினதும் நீரினதும் கிடைப்பை உறுதிகூற இயலாது போன 2000 ஆம் ஆண்டின் பின்னரும் அத்தியாவசியமாகும். நீடிப்புத் திறமுடைய வாழ்க்கைக் கோலத்தை – நீடிப்புத்திறமுடைய வாழ்க்கை முறையை உருவாக்கல்.
4. வேலை வாய்ப்புகளாகும் அதே வேளை, கண்ணியமும் மனநிறைவும் சுய ஈடேற்றமும் கொண்டவையாகவும் வேலைவாய்ப்புகளின் தோற்றுவிப்பு.
5. மேற்கூறிய சட்டக அமைப்புள், தேச வளர்ச்சிக்கான ஒன்று திரளும் கட்டமைப்புகளுக்கு இட்டுச் செல்லும் மனிதவள விருத்தியில் அனைவரும் பங்கேற்கத் தக்க பல்வகை சாத்தியக் கூறுகளை நிறுவல்.
6. நாட்டைக் கட்டும் நடவடிக்கைகளின் செயற்படு பங்காண்மை, ஒருவர்க்கு மற்றவர் ஆழமும் நிலைப்புமுடைய அக்கறையைத் தொடர்ந்து பேணுவதை உறுதி செய்ய வேண்டும்.
7. நாம் இன்று வாழ்வது போன்ற துரிதமாக மாறும் உலகில் மாற்றத்தைத் தழுவுதிறனின் கூறுகளைப் பயன்படுத்தலும் உருவாக்கலும் - மாறிவரும் சூழ்நிலைகளுக்குப் பொருந்திப் போகக் கற்றல் - கட்டாயமானது. இது தனதும் பிறரதும் மேம்பாட்டிற்கான மாற்றத்திற்கு வழிகாட்டும் தேர்ச்சிகளுடன் இணைய வேண்டும்.
8. சர்வதேச சமூகத்தில் மதிப்புமிகும் இடத்தை எய்தலுடன் தொடர்புடைய தகுதிகளை விருத்தி செய்தல்.

(உசாத்துணை: 2016 தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை)

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை எய்துவதோடு, எதிர்பார்த்த கல்வி இலக்கை நோக்கி கவனம் செலுத்துவதற்காக ஒட்டுமொத்த கல்விச் செயலொழுங்கில் உள்ளடங்கும் அனைத்துத் தரப்பினரும் செயலூக்கமும் பயனுறுதியும் கொண்ட கௌரவமான சேவையைத் தொடர்ந்தும் வழங்குதல் அவசியமாகும். ஆசிரியர் இச்செயன்முறையில் வழிகாட்டியாவார். முழுமையாகத் தொழிலில் ஈடுபட்டுள்ள பூரணத்துவம் பெற்ற ஓர் ஆசிரியருக்கு கற்பித்தல் முறைமை என்பது பொருட்டாகத் தோன்றுவதில்லை. எனவே தேசிய கல்விக் குறிக்கோள்களை பிரதான அடித்தளமாகக் கொண்ட செயன்முறைகளில் ஆசிரியரை மிகச் சிறந்த உயர்தரமான வாண்மையாளராக மேம்படுத்துதல் மற்றும் ஊட்டம் பெறச் செய்தல் என்பன தொடர்ச்சியாக இடம்பெறல் வேண்டும். தொழிற்றகைமையைப் போலவே, ஆசிரிய தேர்ச்சிகளிலும் வலுவூட்டப்பட்ட ஆசிரிய பரம்பரையினரை உருவாக்கி நாட்டுக்கு அர்ப்பணிக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

## 1.2 வாண்மைத்துவ ஆசிரியர்

கல்விச் செயற்பாடுகளின் பண்புத்தரம் ஆசிரியரால் தான் நிலைநிறுத்தப்படுகின்றது என்பதைப் பரீட்சார்த்தமான சாதனங்கள் உதவியுடன் கேட் மெக்லின் மற்றும் லீசா மார்கஸ் ஆகியோர் தெளிவுபடுத்தியுள்ளனர். (2013) நீண்ட கால முன் சேவை ஆசிரியர் கல்வி அல்லது குறுங்கால சேவைக்கால ஆசிரியர் கல்விச் செயன்முறைகளின் ஊடாகப் பாடசாலை அமைப்பிற்குப் புதிதாகப் பிரவேசிக்கும் ஆசிரியரில் இருந்து தொடங்கி சேவையில் ஈடுபடும் ஆசிரியர்கள் அனைவரும் வாண்மைத்துவம் மிக்க ஆசிரியர் எனப்படுவர். வாண்மைத்துவமுள்ள ஆசிரியர், தமது கௌரவமான சேவையைப் பண்புத்தரம் கொண்டதாக முன்னெடுப்பதற்குத் தமது தொழிற் பயணத்தின் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் ஊடாக வாண்மைத் தேர்ச்சிகள் மட்டத்தைத் தொடர்ச்சியாக விருத்தி செய்து கொள்ளக் கூடிய தேவை உள்ளது. இதற்கு ஒப்படைக்கப்பட்ட பணியானது அதிவிசேடத்துவம் வாய்ந்ததோடு பாரதூரமான பொறுப்புக்களையும் கொண்டிருப்பதே காரணமாகும். அபிவிருத்தியடைந்து வருகின்ற இன்றைய உலகிற்குப் பொருத்தமான நபர் ஒருவரைப் பாடசாலையில் உருவாக்கும் ஒப்பற்ற பணிக்கு ஆசிரியர் நேரடியான உதவி வழங்குபவர் ஆவார். மாறிவரும் உலகிற்கு அவசியமான உயர்ந்த அறிகைப் புலனைப் போலவே மனவெழுச்சி நுண்மதித்திறன்கள் மாணவரிடையே விருத்திபெறுவதற்கும் வாண்மைத்துவ ஆசிரியர் உதவக்கூடியவராக இருத்தல் வேண்டும். அதற்காக ஒவ்வொரு ஆசிரியரும் தமது வாண்மைத் தேர்ச்சித் திறன்களை விருத்தி செய்துகொள்வதற்கு, இடைவிடா முயற்சியில் ஈடுபடுவது முக்கியமானது. 'ஓர் ஆசிரியரான நீங்கள் கற்றுக்கொள்வதைக் கைவிட்ட வினாடியில் இருந்தே நீங்கள் கற்றுக்கொடுப்பவராக இருப்பதற்கான தகைமையை இழக்கிறீர்கள்' என தத்துவமேதை ஸ்ரீமத் இராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

சேவையில் நிலைத்திருக்கும் ஒரு ஆசிரியரது பணிகளுக்கு முடிவிராது. ஆசிரியர் தேர்ச்சி விருத்திக்கும் நிறைவு கிடையாது. அது நித்தமும் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகும். எப்போதும் உன்னத நிலையை நோக்கிச் செல்வதற்கு ஒவ்வொரு ஆசிரியரும் தன்னைப் பொன் போலப் புடமிட்டுக்கொண்டு ஆசிரிய வாண்மைத் தேர்ச்சிகளைத் தொடர்ந்தும் விருத்தி செய்து கொள்வதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். அதனால் ஆசிரியரின் கௌரவமிக்க சேவையின் பயனுறுதியும் வினைத்திறனும் கட்டியெழுப்பப்படும்.

ஆசிரியர் வாண்மைத் தேர்ச்சி எனப்படுவது காலங் காலமாக தாமாகவே பெற்றுக்கொண்ட அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகளின் ஒட்டுமொத்த கூட்டாக வெளிப்படுத்தப்படும் நடத்தைப் பாங்குகளாகும். அவற்றில் ஆசிரியரது நடத்தைக்குப் பொருத்தமான சமூகமயமாக்கல் உருவாகின்றது. அதனால் வாண்மைத்துவ ஆசிரியரது உன்னத நிலை வெளிப்படுகின்றது.

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

# ஆசிரிய வாண்மைத் தேர்ச்சிகள்

## தொடர்ச்சியான ஆசிரியர் வாண்மை அபிவிருத்தி

- ஆசிரியர் கற்றலில் நிலைத்திருத்தல் (மீள்நோக்கல் செயன்முறை)
- சகபாடி கற்றலில் ஈடுபடல்
- மாற்றங்களுக்கு இசைவாக்கம் அடைதல்
- செயல்நிலை ஆய்வு உள்ளிட்ட ஆய்வுக் கற்கையின் ஊடாக வாண்மைத் திறன் விருத்தி
- கலைசார் நிர்மாணங்கள் மற்றும் வெளியீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடல்
- பல்வேறு மொழிகளில் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்வதில் ஈடுபடல்
- அழகியல் திறன்களைத் தம்மிடையேயும் மாணவரிடையேயும் விருத்தி செய்தல்
- சக ஆசிரியர்களுடன் வாண்மைத்துவ அனுபவங்களை பரிமாற்றம் செய்வதன் ஊடாக வாண்மை விருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

## மாணவர் தொடர்பான அறிவு

- மாணவர் பல்வகைமைக்கும் மற்றும் மாணவருக்குப் பொருத்தமானதுமான கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்குதல்
- மாணவர்களது உடல் உளப் பாதுகாப்பை உறுதி செய்தல்
- மாணவர்களது பிரச்சினைகள், ஆர்வம் / ஆற்றல் தொடர்பாக ஆலோசனை வழிகாட்டலை வழங்குதல்

  விசேட தேவைகளுள்ள மாணவர்களுக்கு உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

## பாட அறிவு மற்றும் கற்பித்தல் பயிற்சித் திறன்கள்

- கற்பிக்கும் பாடங்களின் இயல்பு, கட்டமைப்பு, உள்ளடக்கம் தொடர்பான விளக்கம்
- மாணவர்களின் பன்முக நுண்மதித்திறன்கள் மற்றும் அறிகைப் புலனுக்குப் பொருத்தமான செயன்முறைகளைப் பயன்படுத்தி மாணவரை செயலூக்கம் கொண்ட ஆக்கபூர்வமான கற்றலில் ஈடுபடுத்தல்
- மாணவரைக் கற்றலுக்கு ஊக்கப்படுத்தல்
- மேலேயுள்ள அறிகைப் புலன் ஆற்றல்களின் வெளிப்பாடு மற்றும் பயன்பாடு
- தகவல் தொடர்பாடலின் (ICT) செயன்முறைப் பாவனைக்குப் பழக்கப்படுத்தல்

## கற்றல் சூழலை உருவாக்குதல்

- பிரச்சினையற்ற அமைதியான, சகவாழ்வுடன் கூடிய கற்றல் சூழலை உருவாக்குதல்
- இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி ஜனரஞ்சகமான, பயன்தரும் விதமான கற்றல் சூழலை உருவாக்குதல்
- பாடசாலையின் பௌதிக வளங்களைப் பயன்படுத்தலும் பாதுகாத்தலும் பராமரித்தலும்
- சமகாலத்தில் எழும் திடமான பிரச்சினைகளை விளங்கிக்கொண்டு சூழல் நிலைமையை இனங்காணல் மற்றும் பேணல்
- கற்றல் செயன்முறைகளுக்கு ஏற்ற விதத்தில் பாடசாலையின் வெளிச் சுற்றாடலைப் பயன்படுத்தல்

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

**அவதானிப்பு, கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறை**

- மாணவர் அடைவினைத் தொடர்ச்சியாக விசாரித்தறிதல்
- பின்னூட்டல் செயன்முறை வாயிலாக மாணவர் அடைவை மேம்படுத்தல்
- பல்வேறு நுட்பமுறைகளைப் பயன்படுத்திக், கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையில் ஈடுபடல்
- மாணவர் தகவல்கள், முன்னேற்ற அறிக்கை மற்றும் ஆவணங்களைக் கிரமமான முறையில் சரியாகப் பேணல் மற்றும் உரிய தரப்பினருக்கு அறிவித்தல்

**சட்ட திட்டங்கள் / ஒழுக்கம் /விழுமியங்கள் கொண்ட நடத்தை**

- ஆசிரியருக்கு உரித்தான நீதி நியாயம், சட்டதிட்டங்கள், சுற்றறிக்கைகளுக்கு அனுகூலமாக நடந்துகொள்ளல்
- ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்கவிதிகளையும் வாண்மை விழுமியங்களையும் தாம் பழக்கப்படுத்திக் கொண்டு, மாணவர்களிடையேயும் அவற்றை விருத்தி செய்தல்
- சிறுவர் மற்றும் மனித உரிமைகள், ஆண்-பெண் பாலின சமத்துவம் தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச அறிவாற்றலுடன் செயலாற்றுதல்

**ஆசிரியர் - மாணவர் மற்றும் சமூகத் தொடர்பாடல்**

- மாணவர் நலன்புரி சேவையுடன் நிலைத்திருத்தல்
- மாணவர் நடத்தை மேம்பாட்டுக்கு வழிகாட்டல்
- நல்ல ஆரோக்கிய பழக்கவழக்கம் மற்றும் போசாக்கு மேம்பட உதவுதல்
- பாட இணைச் செயற்பாடுகளில் உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்தல்
- பாடசாலை அபிவிருத்திக்காக சக ஆசிரியர்களுடன் ஒன்றிணைந்து செயலாற்றுதல்
- பொது நடவடிக்கைகளுக்காகப் பெற்றோர் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல்
- மக்கள் நலன்புரிச் செயற்பாடுகளுக்கு உதவுதல்


**திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ உபாய மார்க்கம்**

- பாடசாலை வருடாந்த திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் உரிய செயன்முறையில் ஈடுபடல்
- பாடசாலை நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் அவசியமான தலைமைத்துவத்தை வழங்குதல்
- பாடசாலை அபிவிருத்திக்கு ஏற்ற செயற்றிட்டங்களைத் திட்டமிடல், செயற்படுத்த உதவுதல்
- கற்றல்-கற்பித்தல் செயன்முறைக்கு ஏற்ற திட்டத்தை மாணவர்களின் பல்வகைமைக்குப் பொருத்தமானவாறு சரியானமுறையிலும் பயனுள்ளவாறும் சமகாலத்துக்கேற்றவாறு தயார் செய்தல்.

Scanned with CamScanner

ஆசிரிய வாண்மைத் தேர்ச்சிகளில் தொடர்ந்து விருத்தியும் [illegible] ஆசிரியரால் நடைமுறைப்படுத்தப்படும் கல்விச் செயன்முறையினால் உருவாக்கப்படும், [illegible] உலகிற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வருங்கால நற்பிரசை ஒருவர் கீழே காட்டப்பட்டுள்ள நடத்தைகளை வெளிப்படுத்துவார்.

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA, TM.V



**எதிர்காலப் பிரசை**

- பல்கலாசார சமூகத்தில் வாழ்வார். பல்வகைமையை மதிப்பார். வேறுபாடுகளை ஆதாரமாகக் கொண்டு கோபம் அடைய மாட்டார். ஏனைய கலாசாரங்களை ஏற்றுக் கொண்டு, அவற்றுக்கு மதிப்பளிப்பார். அடுத்தவர் மீது நம்பிக்கை கொள்வார். மனித நேயம் மிக்கவர். பிரிவினை வாதியல்லர். பிற கலாசாரங்களுக்கான எதிர்ப்பை தரக்கரீதியாகப் பகுப்பாய்வு செய்ய முடியும்.
- தீர்மானம் எடுத்தலில் ஜனநாயகவாதியாவார். முரண்பாடின்றி ஒன்றாக செயற்படும் தன்மை உள்ளவர். மற்றவர் கருத்துக்களை விளங்கிக்கொள்ள முயற்சிப்பார். வளங்களைப் பகிர்ந்து கொள்ளும் திறன் உள்ளவர். திறந்த மனதைக் கொண்டவர். விமர்சனரீதியாகச் சிந்திப்பார்.
- ஏனையோரின் உரிமைகளைப் பாதுகாத்து அவற்றிற்கு மதிப்பளிப்பார்.
- சிறப்பாகத் தொடர்பாடலில் ஈடுபடுவார். ஒவ்வொருவருடைய மொழியிலும் கருத்துக்களைப் பரிமாறுவார். அவற்றிற்குச் செவிமடுப்பார்.
- பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றலை உடையவர், சவால்களுக்கு முகங்கொடுப்பவர், விசேடமாக பல்வேறு கலாசாரங்களைக் கொண்ட சமூகத்தில் நிலவும் சவால்களை எதிர்கொள்வார்.
- முரண்பாடுகளை இழிவளவாக்கக் [illegible] கூடியவர். நேர்க்கணியமான முறையில் சிந்திக்கக் கூடியவர்.
- உள்ளார்ந்த மன அமைதியைத் தேடுபவர். அமைதியான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பவர். தமது இயலுமையை மற்றும் பணிகளின் தன்மைகளை விளங்கிக் கொள்வார்.
- அரசியல் தொடர்பான விளக்கம் பெற்றவர்.
- குற்றமற்றவர். லஞ்சம் பெறாதவர். எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி அடுத்தவர்களுக்கு சேவை புரிபவர். நல்ல மானிடப் பண்புகளைக் கொண்டிருப்பவர்.
- உலகளாவிய தொலைநோக்குப் பார்வை கொண்ட அகில உலகப் பிரசையாவார். பூமியின் மேம்பாட்டுக்கு உதவக்கூடிய அளவுக்கு மனவலிமையை உடையவர். சூழல் நேயமிக்கவர்.
- தமது எண்ணத்திலும் செயலிலும் எவருக்கும் தீங்கு செய்யாதவர்.
- இலங்கை நாட்டிற்குரிய சம்பிரதாயம், கலாசாரம், விழுமியங்கள் என்பவற்றைப் பாதுகாக்கும் இயலுமை கொண்டவர்.
- சட்டத்தை மதிப்பவர். சட்ட திட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பால் மேலதிகக் குணநலன்களைக் கொண்டவர்.

உரு: 1 எதிர்காலப் பிரசை


உசாத்துணை: சமூக ஒன்றிணைப்பு மற்றும் சமாதானக் கல்விக்கான தேசிய கொள்கைள், 2008 கல்வி அமைச்சு

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

இங்கு விபரிக்கப்பட்ட நடத்தைகளின் கூட்டாக அமைந்த நபர் ஒருவரை உருவாக்குவது இலகுவான காரியமல்ல. அதனால் தான் ஆசிரியர் பணிகள் சவால்களையும் சிக்கல்களையும் கொண்டிருக்கின்றன. வாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர், பாடசாலை மாணவர்களின் முழு ஆளுமை விருத்தியில் இடையீடு செய்யவும் அழுத்தம் அளிக்கவும் முன்வரல் வேண்டும்.

### 1.3 ஆசிரிய வாண்மைத் தேர்ச்சி விருத்திக்கான உபாயமார்க்கம்

சேவையில் உள்ள ஆசிரியர்களது பயனுறுதி மற்றும் விசேடத்துவம் தொடர்பில் ஆசிரியர்களது தேர்ச்சிகள் தொடர்ச்சியாக விருத்தி செய்யப்படல் வேண்டும். கல்விச் செயலொழுங்கின் எதிர்பார்க்கப்படும் இலக்கை எய்துவதற்கு ஆசிரிய சந்ததியினரை வலுவூட்டும் பொருட்டு, நாட்டிற்கு வெளியிலும் உள்நாட்டிலும் பல்வேறு உபாய மார்க்கங்கள், தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் வலய மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் செயற்படுத்தப்படுகின்றன.




உரு: 2 ஆசிரிய வாண்மைத் தேர்ச்சிகளின் விருத்திக்கான உபாயமார்க்கம்

மேலேயுள்ள உருவத்தில் உபாயமார்க்கங்களுக்கான சில மாதிரிகள் விளக்கப்படுகின்றன.

சமகாலத்தில் பல நாடுகளில், ஆசிரிய வாண்மை விருத்திக்காகப், பாடசாலையில் ஆசிரியர் விருத்தித் தேவைகளைக் கண்டறிந்து, அதனை நிவர்த்தி செய்து கொள்வதற்குப் பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்துவதைக் காணலாம். தேசிய கல்வி ஆணைக்குழு, இலங்கையில் ஆசிரியர்களின் தொடர்ச்சியான அபிவிருத்திச் செயன்முறைக்காக வினைத்திறனுள்ள நுட்பமுறையாகப் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்திச் செயன்முறையைப் பரிந்துரை செய்கின்றது. (தேசிய கல்வி ஆணைக்குழு – 2016)

Scanned with CamScanner

# இரண்டாம் அத்தியாயம்

## பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு.

### 2.1 பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி என்றால் என்ன?

ஆசிரியர் கல்வியில் பின்பற்றப்படும் பல்வகைப்பட்ட அணுகுமுறைகளிடையே பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி மிக விசேடமானதும் பிரயோக ரீதியானதுமான செயன்முறையாகும் பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களையும் தொழில் வாண்மையாளராக்குவது இதன் பிரதான நோக்கமாக அமைகிறது. அச் செயன்முறையைப் பாடசாலைக்கு ஏற்ற வகையில் பாடசாலைகள் தாமாகவே திட்டமிட்டுக் கூட்டாக செயற்படுத்தும் தொடர்ச்சியான ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும்.

இதன்படி பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தியின் இயல்புகள் சிலவாகும்

- **மாணவரின் கற்றல் விருத்தியினை திசைமுகப்படுத்தல்**

  மாணவர் கற்றல் விருத்தியினை ஏற்படுத்துவதற்காக ஆசிரியர்களின் நடத்தையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவது பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தியின் அடிப்படை நோக்கமாகும். ஆசிரியர் வாண்மை விருத்திக்கும் மாணவர் கற்றல் விருத்திக்குமிடையே நேர்க் கணியமான தொடர்பு வெளிப்படுத்தப்படும்.

- **இனங் கண்ட ஆசிரியர் வாண்மை விருத்தியின் தேவைக்கேற்ப செயற்படல்**

  அனைத்து பாடசாலைகளும் ஆசிரியர் விருத்தியின் தேவையினை இனங் கண்டு அதற்கேற்றவகையில் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளை செயற்படுத்துவது எதிர்பார்க்கப்படுகின்றது.

  ஆசிரியர் விருத்தியின் தேவையினை இனங்காண்பதற்காக பல்வேறுபட்ட முறைகளைப் பயன்படுத்த முடியும். இவ்வாறு அறிந்து கொண்ட விருத்தித் தேவையானது ஒரு ஆசிரியருக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக அமையலாம். அல்லது ஆசிரியர் குழுவிற்கு அல்லது அனைத்து ஆசிரியர் குழாமிற்கும் பொதுவானதாகவோ அமையலாம்.

- **பாடசாலையினால் திட்டமிடப்பட்டு செயற்படுத்தல்**

  அபிவிருத்தித் தேவைகளை அறிந்து கொண்டு பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தைத் திட்டமிடல் பாடசாலையாலேயே மேற்கொள்ளப்படும். அதிபர், பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி உப குழு மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழு என்பன தமது பங்களிப்பினை வழங்கும்.

- **கூட்டுறவான சூழலைக் கொண்டிருத்தல்**

  ஆசிரியர்கள் சிறு குழுக்களாகவும் அனைத்து ஆசிரியர் குழாமும் ஒன்றாக இணைந்தும் கூட்டுறவுடனும் பங்களித்துச் செயற்படுவர்.

- **தொடர்ச்சியாயிருத்தல்**


  ஆசிரியர் தொடர்ச்சியான கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதால். அவர் தொடர்ச்சியான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டியவராவார். ஆசிரியரின் சுய கற்றலுக்கு மேலதிகமாக ஆசிரியரின் கற்றலுக்கு உதவிச் சேவையினை வழங்கும் வாய்ப்பாக பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தியினை அறிமுகஞ் செய்ய முடியும். இதில் அடங்கியுள்ள செயற்பாடுகள் ஒரு சந்தர்ப்பத்திற்கு அல்லது செயற்பாட்டிற்கு மட்டுப்படுத்தப்படாமல் தொடர்ச்சியாகப் பாடசாலையில் செயற்படுத்தப்படுபவையாகும்.

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

## 2.2 பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி ஏன் அவசியம்?

இலங்கையில் ஆசிரியர்களின் தொழில் விருத்தி தொடர்பில் பல்வேறுபட்ட நிறுவனங்கள் மூலம் பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படும் விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.




உரு 3 : இலங்கையில் ஆசிரியர் கல்வியின் கட்டமைப்பும் அதன் செயற்பாடும்
(மூலம்:- தேசியக் கல்வி ஆணைக்குழு 2014 )

இந் நிகழ்ச்சித் திட்டம் ஆசிரியர் தொழிலுக்கு பிரவேசிப்பதற்கு முன்னும் (முன் சேவை) தொழிலினுள் பிரவேசித்ததன் பின்னும் (சேவைக்கால) என்ற வகையில் இருவிதமாக செயற்படுத்தப்படும். ஆசிரியர் உயிரோட்டமான மாணவராவதே ஆசிரியர் தொழிலின் அடிப்படையாகும். நிறுவன ரீதியான ஆசிரியர் கல்விப் பாடநெறியொன்றைத் தொடருதல் மூலமும் அல்லது அவ்வப்போது ஆசிரியர் அபிவிருத்தி பாடநெறியினைப் பின்பற்றுவதன் மூலமாக சிறந்த ஆசிரியராவதற்கான தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ள முடிந்தாலும் பாடசாலையின் இயல்பு, மற்றும் மாணவர்களின் இயல்பு, மாற்றமடையும் கல்வி, சமூகப் பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு அவை போதுமானதல்ல. ஆசிரியர் அது தொடர்பாக வலுப்பெற்றால் மாத்திரமே தேசிய மற்றும் உலகமயமாக்கல் தேவைக்கேற்ப பொருத்தமானதும் அதற்கேற்ப செயற்பட முடியுமான ஆசிரியரை உருவாக்க முடியும்.

Scanned with CamScanner

UVA TAMIL - PDC & BD/ HALDUMMULLA T.M.V

அரசினால் நடாத்தப்படும் பரீட்சைகள் தொடர்பில் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றார்களுக்குப் பாடசாலை மீது போதிய நம்பிக்கையில்லை. அவ்வாறாயின் பாடசாலை எதற்காக? கட்டாயக் கல்வியின் பொருட்டு செலவிடும் பெருந்தொகையான நிதியின் பயன் என்ன? இந்த சவால்மிக்க பிரச்சினையை வெற்றிக் கொள்ள வேண்டுமாயின் பாடசாலை, தரமான கல்வி அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் செயற்படவேண்டியேற்படும்.

இச் சவால்களுக்கு முன் பாடசாலையின் இருப்பினை வினைத்திறன் மிக்கதாக்கிக் கொள்ள அங்கு இடம் பெறும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை புதிய மாற்றங்களுக்குள்ளாக்க வேண்டும். அதே நேரம் பாடசாலை மூலம் சமூகத்திற்கு என்ன கிடைக்கப் பெறும் என்பது ஆழமாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

இதற்காக அதிபர் உட்பட ஆசிரியர்களினால் தாம் மேற்கொள்ளும் பணிகள் வெற்றியளிக்கின்றதா என்பதை உண்மையாக சிந்தித்தல் பயனுடையதாகும். தேசிய மட்ட பரீட்சைகளின் மூலம் தமது பாடசாலை பெறும் பெறுபேறுகளை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்வதன் மூலம் தமது பாடசாலை மூலம் நிறைவேற்றப்படுமென மக்களால் பெற்றுக் கொடுக்கப்பட்ட பொறுப்பு முறையாக நிறைவேற்றப்படுகின்றதா என்பதை நோக்குதல் அவசியமாகும். அவ்வாறு இல்லாவிடில் உடனடியாக உரிய நடவடிக்கையில் ஈடுபடுதல் வேண்டும்.

அவற்றிற்கிடையே மாணவர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய சமூகத் திறன்கள் மற்றும் ஆளுமைத் திறன் விருத்திக்கு பாடசாலைகள் களமாக அமைதல் வேண்டும். தமது பாடசாலையிலிருந்து நாட்டிற்குப் பயன் மிக்க பிரசையை உருவாக்குதல் பாடசாலையின் மற்றொரு பொறுப்பாகும். பாடசாலைகளில் பாட இணைச் செயற்பாடுகள், பாடப் புறச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் இங்கு முக்கியம் பெறுகின்றது.

இவ்வாறு நோக்குமிடத்து முழுப் பாடசாலையினதும் வடிவமும் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் கருவியாக அமையும். இதன் போது ஆசிரியரின் தொழில் மற்றும் ஆளுமை குணாதிசயங்களின் விருத்தி தொடர்பில் கவனம் செலுத்துவது சமகாலத் தேவையாகும். நாட்டில் இடம் பெறும் அனைத்து பிரச்சினைகள் புதிய போக்குகள் தொடர்பாகவும் அவற்றிற்கு தாம் எவ்வாறான பிரதிபலிப்பைக் காட்டுவது என்பது தொடர்பில் ஆசிரியர் தெளிவாயிருத்தல் அவசியமாகும். இதற்கு ஆசிரியருக்குப் பொருத்தமான உதவியை வழங்கக் கூடிய சிறந்த கருவியாக அமைவது பாடசாலையினை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மைவிருத்தி வேலைத் திட்டமாகும்.

பாடசாலையினை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மைவிருத்தி வேலைத் திட்டத்தினை செயற்படுத்தும் போது தாம் மேற்கொள்ளும் கற்றல் கற்பித்தல் செயற்பாடு தொடர்பாக சுயமதிப்பீடு செய்து, விருத்தி செய்து கொள்ள வேண்டிய துறையை அறிந்துகொள்ளல் அவசியமாகும். இதனை இவ் வேலைத் திட்டத்தை திட்டமிட்டு செயற்படுத்துபவரும் அபிவிருத்தித் தேவையுடைய ஆசிரியரும் மேற்கொள்ளல் வேண்டும். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத் திட்டக் குழுவே வேலைத் திட்டத்தைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும்.


### 2.3 பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத் திட்டத்தினைப் பாடசாலையில் எவ்வாறு ஸ்தாபிப்பது?

தொடர்ச்சியான ஆசிரியர் வாண்மை விருத்தி அவசியமானது என்பதும் இது பாடசாலையினை அடிப்படையாகக் கொண்டமைதல் வேண்டும் என்பதும் இதுவரையில் உங்களுக்கு தெளிவாகியிருக்கும். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவ எண்ணக்கருவின் (பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம்) கீழ் தரமான கல்வி அபிவிருத்திக்கான அடிப்படைப் பொறுப்புக் கூறும் துறையாக பாடசாலை அபிவிருத்தி திட்டமிடலூடாக செயற்படுத்தப்படல் வேண்டும் என கல்வியமைச்சின் சுற்றறிக்கை இல 26/2018 அமைவாகப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட பண்பு ரீதியான, கட்டமைப்பு ரீதியான அபிவிருத்திக்கான திட்டமிடல்கள் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்று நிருபம் மற்றும் கைந்நூலில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

### 2.3.1 பாடசாலையில் ஆசிரிய வாண்மை விருத்தி ஒழுங்கமைப்பின் கட்டமைப்பு

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V




உரு: 4 பாடசாலையில் ஆசிரிய வாண்மை விருத்தி ஒழுங்கமைப்பின் கட்டமைப்பு

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவ எண்ணக்கருவிற்கு ஏற்ப சமகால பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், (EPSI) பாடசாலை அபிவிருத்திச் செயற்பாட்டிற்கான பிரதான பொறுப்பினை பாடசாலை அபிவிருத்தி நிர்வாகக் குழுவிற்கு (SDEC) பொறுப்பளிக்கும் அதே வேளை அதற்கான குறித்த காலப் பகுதிக்காக பாடசாலை அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு தீர்மானமெடுத்தல், திட்டமிடல் செயன்முறை என்பவற்றிற்குப் பாடசாலை அபிவிருத்தி நிர்வாகக் குழு பொறுப்பாக இருத்தல் வேண்டும். இப் பாடசாலை அபிவிருத்தி திட்டமிடலை செயற்படுத்தும் பிரதான பொறுப்பு பாடசாலை முகாமைத்துவ அபிவிருத்திக் குழுவிற்கு (SMC) உரியதாகும். பாடசாலையின் எளிய அல்லது சிக்கலான இயல்புக்கேற்ப பாடசாலை முகாமைத்துவ குழு அல்லது அதன் கீழ் செயற்படும் உப குழுவினால் இப் பொறுப்பு செயற்படுத்தப்படுத்த சிபார்சு செய்யப்படுகின்றது. மேற் கூறப்பட்ட கல்வியமைச்சின் இல. 26/2018 சுற்றறிக்கையின் 4.7 இல் உள்ளவாறு பாடசாலையில் ஆசிரியர் வாண்மை விருத்திக்குப் (SBPTD) பொறுப்பான உப குழுவினை அமைத்துக் கொள்ளல் மிகவும் பயனுள்ளதாகும். அதற்குத் தரமான கல்வி அபிவிருத்தியில் தீர்மானமிக்க காரணியாகக் கற்றல் கற்பித்தல் செயற்பாடே அமைகின்றது. அதற்காக ஆசிரியரின் பணி தரமிக்கதாக அமைவதற்குப் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொடர்ச்சியான ஆசிரியர் வாண்மை விருத்தி இன்றியமையாத காரணியாக அமைகின்றது எனலாம்.

### 2.3.2 ஆசிரியர் வாண்மை விருத்திக்குப் பொறுப்பான (SBPTD) உப குழு.

பாடசாலையொன்றில் உள்ள ஆசிரியர் குழாத்தின் அனைத்து உறுப்பினர்களின் வாண்மை விருத்திக்காக பிரதான பொறுப்பினை வகிக்கும் அமைப்பு என்பதுடன் இக் குழுவின் அளவு அதன் எண்ணிக்கை பாடசாலை அபிவிருத்தி (நிர்வாகக்) குழு மற்றும் பாடசாலை முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்படல் வேண்டும். பொதுவாகப் பாடசாலையின் விசாலத் தன்மைக்கேற்ப 3-10 பேர் வரையிலான எண்ணிக்கை போதுமானதாகும் என பொதுவாகக் கூறலாம். இவ் உப குழுவின் அளவிற்கேற்ப பாடசாலையின் ஒவ்வொரு பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் சிரேஷ்டத்துவம், கல்வித் தகைமை மற்றும் தொழிற்றகைமை கொண்ட ஆசிரியர்/ஆசிரியைகளை ஆசிரியர் குழாமின் கூட்டுறவான இணக்கப்பாட்டுடன் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்து கொள்ள முடியும். இவ் உப குழு இயங்குவதற்கு இலகுவாக குழு அங்கத்தவர்களின் இணக்கப்பாட்டுடன் குழுவிற்கு பொறுப்பான ஒரு தலைவரைத் தெரிவு செய்து கொள்ளுதல் பொருத்தமானதாகும். எவ்வாறாயினும் பாடசாலையின் வாண்மை விருத்திக்காக உப குழுவானது கூட்டுப் பொறுப்பினை ஏற்க வேண்டும். தமது பொறுப்பினையும் கடமையினையும் வகிக்கும் போது மேல் மட்டத்தில் பாடசாலை அபிவிருத்தி (நிர்வாகம்) குழு மற்றும் பாடசாலை முகாமைத்துவக் குழுவுடனும் கீழ் மட்டத்தில் ஆசிரியர் குழாத்தினருடனும் தேவையான தொடர்புகளை பேணிக் கொள்ளல் வேண்டும்.

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V.

### 2.3.3 பாடசாலை அடிப்படையிலான ஆசிரியர் வாண்மை விருத்தி உபகுழுவின் கடமைப் பொறுப்புக்கள்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட தெளிவுப்படுத்தலுக்கேற்ப பாடசாலை அபிவிருத்தித் திட்டமிடலில் வாண்மை விருத்தி தொடர்பான பிரதான பொறுப்பினை பாடசாலை முகாமைத்துவக் குழுவின் சார்பாக பாடசாலை அடிப்படையிலான ஆசிரியர் வாண்மை விருத்தி உபகுழு மேற்கொள்ளல் வேண்டும். அதன்படி உப குழுவின் பிரதான கடமைகள் பின்வருமாறு அமையும்.


- ❖ ஆசிரியர் வாண்மை விருத்தியின் தேவையை அறிந்து கொள்ளல்.
  - ஆசிரியர் வாண்மை விருத்தியின் தேவைப் பகுப்பாய்வு.
  - ஆசிரியர் வாண்மை விருத்தியின் தேவையை முன்னுரிமைப்படுத்தல்.
- ❖ ஆசிரியர் வாண்மை விருத்தியின் வருடாந்தச் செயற்பாடுகளுக்கான திட்டத்தைத் தயாரித்தல்.
  - நோக்கம் மற்றும் குறிக்கோள்களை உறுதிப்படுத்தல்.
  - ஆசிரியர் வாண்மை விருத்தியின் முறையியலையும் உத்திகளையும் தீர்மானித்தல்.
  - திட்டமிடலில் காலவரையறைக்குரிய செயற்பாடுகளை வரிசைப்படுத்தல்.
  - செயல் திறன் குறிகாட்டிகள் (KPI) மற்றும் பொறுப்புக்களை உறுதிப்படுத்திக் காட்டல்
- ❖ ஆசிரியர் வாண்மை விருத்தித் திட்டமிடலைச் செயற்படுத்தல்.
  - ஆசிரியர் வாண்மை விருத்திச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்.
  - ஆசிரியர் வாண்மை விருத்திச் செயற்பாடுகளின் போது ஆலோசனை வழங்குதல்.
- ❖ முன்னேற்ற மீளாய்வுக்காக அறிக்கைப்படுத்தல்.
  - செயற்பாடுகளை மேற்பார்வை செய்தலும் மதிப்பிடலும்.
  - அறிக்கைகளைப் பேணல்.

பாடசாலை அபிவிருத்திக்கான திட்டமிடலில் பொதுச் செயன்முறையில் உள்ளடக்க வேண்டி ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளை நிச்சயித்து பாடசாலை முகாமைத்துவ குழுவிற் வழங்க வேண்டும். பாடசாலையின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தினை தயாரிப்பதற்காக அ பிரதான செயற்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் எதிர்பார்க்கும் செலவு என்பன பாடசாலையி பிரதான அபிவிருத்தி திட்டத்திற்குள்ளடக்கப்படல் வேண்டும். உப குழுவின் பொறுப்புக்களுக்கேற் உரிய கடமைகளை மேற்கூறப்பட்டவாறு குறிப்பிட்டாலும் ஆசிரிய வாண்மை விருத் முறைமையைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவது உப குழுவில் உள்ளடங்கியுள்ள அனைத் ஆசிரியர் குழாம் உறுப்பினர்களினதும் பொறுப்பாகும். மேற் கூறப்பட்ட ஒட்டுமொத்த கடமை பொறுப்புக்களும் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

அவை கீழ்க் காணப்படும் உருவில் காட்டப்பட்டுள்ளது.




**உரு 5: பாடசாலை அடிப்படையிலான ஆசிரியர் வாண்மை விருத்திச் செயன்முறை**

இந்த வழிகாட்டல் கையேட்டில் இதன் முழுமையான செயன்முறை தெளிவான விளக்கத்துடன் முன்வைக்கப்படுகின்றது. இதன் ஒவ்வொரு படிமுறை தொடர்பிலான விளக்கங்கள் தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளன.

### 2.3.4 அதிபர்களுக்கான வழிகாட்டல்

I. மாணவர்களின் கற்றல் இலக்குடன் கூடிய ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் பாடசாலை மட்ட ஆசிரிய வாண்மை விருத்திக்கான வருடாந்த திட்டமிடலை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

உ-ம் :- மாணவரின் கணிதப் பாட சித்தியை இலக்காகக்கொண்டு ஆசிரியரின் கற்பித்தல் திறனை விருத்தி செய்வதற்கு எவ்வகையான விசேட அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்யலாம் என்பது.

இதன்போது பாடசாலையில் உள்ள சிரேஷ்ட ஆசிரியர்களினதும் பாடசாலையின் வெளிவாரி வளவாளர்களினதும் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & RD/ HALDUMMULLA T.M.V

**II.** ஆசிரியர்களின் அபிவிருத்தித் தேவைகளை பாடசாலை மட்டத்தில் அறிந்து கொள்வதற்காகப் பல்வேறு வகையான கருவிகள் உள்ளன. அவற்றில் பொதுவாகத் தேவையானதா அல்லது ஒரு நபருக்கு தேவையானதா, அல்லது குழு அல்லது தனி நபர் ஆலோசனைச் செயன்முறை தேவையானதா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

**III.** நடைமுறையிலுள்ள ஆசிரியர் அபிவிருத்திச் செயன்முறையினை அவதானித்து மாணவரின் கற்றலில் நேர்க் கணியமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றவற்றை மட்டும் தொடர்ச்சியாக மேற்கொள்க. மாணவரின் தேவைக்கேற்ற விசேட கற்றல் முறையினை விருத்தி செய்து கொள்வதற்காகப் புதிய பாடசாலை மட்ட ஆசிரிய வாண்மை விருத்திச் செயற்பாடுகளைத் திட்டமிடல் வேண்டும். சில பாடசாலைகளில் இவை பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்திக்கான உப குழுவிற்கு அப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**IV.** சிறிய ஆசிரிய குழாம் உள்ள கிராமிய பாடசாலைகள் மற்றும் விசேட வழக்கங்கள் நடைமுறையிலுள்ள பாடசாலைகள் ஏனைய பாடசாலைகளுடன் இணைந்து பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்திக்கான திட்டமிடலைத் தயாரித்துக் கொள்வதால் பல நன்மைகள் ஏற்படும். முதலாவதாக இரண்டு அல்லது மூன்று பாடசாலைகள் வெவ்வேறாக தமது தேவையினை அறிந்து கொண்டு அவர்களின் பிரச்சினைகள் மற்றும் ஆலோசனைகளைத் தயாரித்தல் வேண்டும். அதன் பின் ஒன்றாக இணைந்து மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.
உ-ம்: பொதுவான செயலமர்வு, பாடங்கள் மற்றும் வகுப்பறைக்கான குழுத் திட்டமிடல்

**V.** SBPTD செயற்பாடுகள் நிகழும் காலம்: சிலவேளைகளில் இச் செயற்பாடுகள் வளவாளர் ஒருவரைக் கொண்டு மேற்கொள்ளப்படும் செயலமர்வாக அமையலாம். பெரும்பாலும் தீர்மானித்துக் கொண்ட பாடசாலை நாளொன்றில் அல்லது குறித்த பாடவேளை யொன்றில் அமையலாம்.

**VI.** நீங்களோ அல்லது உங்கள் பாடசாலையில் ஏனைய சிரேஷ்ட ஆசிரியர்களோ, ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்குவிப்பதற்காகவும் கற்பித்தல் தொடர்பில் கண்டறிவதற்காகவும் அவ்வப்போது வகுப்பறைகளில் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

**VII.** "பாடசாலைக் கல்வியின் தரத்தை உறுதி செய்வதற்கான மதிப்பீட்டுச் செயன்முறை" நூலில் உள்ள கருவிகளைக் கற்றல் - கற்பித்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பாகத் தேடியறிவதற்குப் பயன்படுத்தல். அதன் மூலம் கற்பித்தலுக்கான ஆசிரியரின் தேவையும், கற்றலுக்குரிய மாணவரின் தேவையையும் அவதானிக்க முடியும். (இணைப்பு 1)

**VIII.** பயன்தரக்கூடிய ஆசிரியர் செயற்பாடுகள், பிரபல்யமான மற்றும் ஜனரஞ்சகமான ஆசிரியர்களின் செயற்பாடுகள், வேறு பாடசாலைகளின் ஆலோசனைச் செயற்பாடுகள் தொடர்பாக பகிரங்கமாகக் கலந்துரையாடல் / ஆசிரியர் குழுவுக்கு அறிவுறுத்தல் மற்றும் மேன்மையான நடவடிக்கைகள் / அனுபவங்களை பரிமாற்றம் செய்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டியது அவசியமாகும்.

Scanned with CamScanner

JIVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

### 2.3.5 ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்.

I. உங்களது வகுப்பில் உள்ள மாணவருக்குக் கடினமானதென உணரும் பாடம் அல்லது எண்ணக்கருவினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

II. உங்களது வகுப்பில் உள்ள மாணவர்கள் திறமையை வெளிப்படுத்தும் பாடம் அல்லது எண்ணக்கருவினை அறிந்து கொண்டு, அவர்கள் அவை தொடர்பாக மேலதிகமாகக் கற்பதற்கான செயற்பாடுகளைத் திட்டமிட முடியும்.

III. மிகச் சிறந்த கற்றலுக்காக மாணவர்களை இட்டுச் செல்வதற்காக அவர்களிடையே வலுப்படுத்தக் கூடிய துறைகளை அறிந்து கொள்க. இத் தேவையினை அறிந்து கொள்வதற்காக அனுபவம் பெற்ற வேறு ஆசிரியர் ஒருவரின் துணை கொண்டு உங்களின் வகுப்பறையை அவதானிக்கச் செய்க. அதுபோல கற்றலுடன் தொடர்புடைய மாணவரின் தரவுகளைப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

IV. சில செயற்பாடுகளின் வெற்றி தோல்வியினை அச் சந்தர்ப்பத்திலேயே ஆசிரியர் அறிந்து கொள்ள முடிகின்ற அதே வேளை அவற்றை நிவர்த்தி செய்து கொள்வதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கும். இது அனைத்துப் பாடங்களின் போதும் மேற்கொள்ள வேண்டிய வழிமுறையாகும். மாணவரின் கற்றல் தொடர்பாகத் தேடியறிந்து தன்னுடைய கற்பித்தல் முறையினை ஆசிரியர் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

V. தம்மைப் போன்ற பிரச்சினையுடைய வேறு ஆசிரியர்கள் பாடசாலையில் உள்ளனரா என்பதைத் தேடியறிந்துகொள்க. பிரத்தியேகமான ஆலோசனைச் சேவை அவசியமா? குழுரீதியான ஆலோசனைச் சேவை அவசியமா? அல்லது செயலமர்வு ஒன்று அவசியமா? ஆசிரியர்களின் கலந்துரையாடலின் மூலம் இப் பணியை நிறைவேற்ற முடியுமா? என்பவற்றைத் தீர்மானித்துக் கொள்ள முடியும்

VI. மிகச் சிறந்த கற்றலுக்காகத் தாம் பின்பற்றிய கற்பித்தல் செயற்பாடுகள் பயனுள்ளதாக அமைந்ததா என்பதை மேற்பார்வை செய்தல் பயன்தரக்கூடியதாக அமையும்.

இதற்காக நீங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் வினாக்களின் மூலம் உங்களின் கடமைப் பொறுப்புக்களைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள முடியும்.


- கற்பித்தல் தொடர்பாக கருத்துக்களை நீங்கள் எவ்வாறு பிறருடன் பகிர்ந்து கொள்ள முடியும்?
- நீங்கள் உங்கள் பாடசாலையில் உள்ள சக ஆசிரியர்களது உதவியுடன் நான்கு அல்லது ஆறு அலகுகளுக்கான கற்பித்தல் செயற்பாடுகளையேனும் தயாரித்துக் கொண்டுள்ளீர்களா?
- நீங்கள் உங்களது சக ஆசிரியருடன் மாணவர்களின் முகாமைத்துவ பிரச்சினைகளை பகிர்ந்து கொண்டு அவற்றிற்கு தீர்வுகளைக் கண்டுள்ளீர்களா?
- உங்களது பாடசாலையில் அல்லது வேறொரு பாடசாலையில் இதற்கான வேலைத் திட்டமொன்றினை முன்னெடுக்க முடியுமா?
- உங்களின் வாண்மை விருத்திக்காக கற்றுக்கொள்ள அவசியமென நீங்கள் கருதும் உங்களுக்கு விருப்பமான பிற தலைப்புக்கள் யாவை?

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

**பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி உதவிச் சேவை**


பாடசாலையினால் பாடசாலையினுள் முன்னெடுக்கப்படும் ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்குப் பாடசாலைக்கு புறம்பாகக் கல்விப் புலத்திலுள்ள ஏனைய குழுக்கள் அதனை மேலும் வலுப்படுத்துவதற்கான உதவியை வழங்க முடியும்.




**உரு 6 : பாடசாலை மட்ட ஆசிரிய வாண்மை விருத்திக்கான உதவி சேவை நிறுவனங்கள்**

Scanned with CamScanner

ஆசிரிய வாண்மை விருத்தி தொடர்பிலான உதவிகள்




உரு: 7 ஆசிரிய வாண்மை விருத்தி தொடர்பிலான உதவிகள்


UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V



Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V


**மேற் கூறப்பட்ட நிறுவனங்கள் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பாக மேற் கொள்ளக் கூடிய பணிகள்**




உரு: 8 பாடசாலை மட்ட ஆசிரிய வாண்மை விருத்தி தொடர்பான செயலொழுங்கு

Scanned with CamScanner

# மூன்றாம் அத்தியாயம்

## பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

### 3.1 பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தித் தேவைகளை எவ்வாறு அறிந்து கொள்வது?

பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியர்கள் பல்தரப்பட்டவர்களாவர். தொழில் அனுபவம், சேவைக் காலம், கல்வித் தகைமை, கற்பிப்பதற்கான விருப்பம், ஆசிரியர் ஆளுமைப் பண்புகள், தனிப்பட்ட குணாதிசயங்கள் போன்ற காரணிகளினால் பல்தரப்பட்டவர்களாக உள்ளனர். இவ்வாறு அவர்கள் வேறுபட்டாலும் தமது பணியைப் பொறுத்தவரையில் அவர்கள் சமமானவர்களாவர். மாணவர்களுக்கு பாடங்களைக் கற்பித்தல், கற்றலுக்கான வசதிகளை வழங்குதல், மற்றும் வழிகாட்டுதல் என்பன அவர்களின் பிரதான வகிபாகங்களாகும்.

பாடசாலையின் விசேடத்துவம், மாணவர்களின் சமூகப் பொருளாதார கலாசாரப் பின்னணி என்பவற்றிற்கு ஏற்ப அனைத்து பாடசாலைகளுக்கும் பொதுவான பிரச்சினைகள் / தேவைகள் உள்ளன. பாடசாலைகளில் அவற்றிற்கே உரித்தான விசேட தேவைக்கேற்ப செயற்படுத்தப்படும் ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது பலவகைப்படலாம். பல்வேறுபட்ட செயற்பாடுகளைப் பயன்படுத்தி ஆசிரிய வாண்மை விருத்தித் தேவைகளை இனங்கண்டு கொள்ளலாம்.

பாடசாலையின் வாண்மை விருத்தித் தேவைகளை இனங்காண்பதற்குப் பாடசாலையின் பங்களிப்புக்கும் மேலதிகமாக வெளிவாரி நிறுவனங்களின் வளவாளர் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல் அவசியமாகும்.

ஆனாலும் பாடசாலையின் உண்மையான அபிவிருத்தி தேவை அச் சூழலில் உண்மையாக வாழும் தரப்பினருக்கே புரியும். ஆசிரியர் கல்வியூடாக அறிந்து கொண்ட தேவைக்குப் பொருத்தமான ஆசிரியரை தீர்மானிப்பதற்குத் தேவையான பின்னணியைக் கட்டியெழுப்பினாலும் பாடசாலைக்கு ஏற்றவாறு, பாடசாலையினுள் செயற்படுத்தக் கூடிய சாதாரண கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் கூடிய ஆசிரியர் அபிவிருத்தி அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய செயற்பாடுகள் மூலமாக மட்டுமே பாடசாலைக்குத் தேவையான, பாடசாலை மாணவரின் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் அவரின் கடமைப் பொறுப்புக்களை அமைத்துக் கொள்ள முடியும்

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA TMV

## 3.2 பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தியின் தேவையை அறிந்து கொள்ளும் முறையும் செயற்பாடுகளும்

பல்வேறுபட்ட வாண்மையும் கல்விப் பின்னணியும் கொண்ட ஆசிரியர்களுக்கு தமது கற்பித்தல் பணியை முன்னெடுத்துச் செல்லும் போது பல்வேறுபட்ட தேவைகள், இடர்ப்பாடுகள், வரையறைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும். இத் தேவைகள், இடர்ப்பாடுகள், வரையறைகள், மற்றும் சவால்கள் பல்வேறுபட்டவையாக இருக்க முடியும் என்பதைப் பின்வரும் உதாரணங்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

"என்னுடைய வகுப்பில் நாற்பது மாணவர்கள் இருந்தாலும் என்னுடைய பாடத்தைச் சில மாணவர்கள் மட்டுமே. சிறப்பாகக் கற்கிறார்கள். இது எனக்கு மிகப் தொந்தரவாக உள்ளது எனக் கருதுகின்றேன்".

"மாணவருக்கு தேவையில்லாவிடில் நாம் என்ன செய்வது?

"எனது வகுப்பில் உள்ள அனைத் மாணவர்களையும் அதிகப் புள்ளிகள் எடுக்க வைக்க முடியுமாயிருந்தால்"

"நான் ஆர்வமுள்ள மாணவர்கள் தெ மட்டுமே கவனம் லெுத்துவேன்"

"நான் நீண்ட நாட்களாக அருணி டீ கற்பிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அனைத்து மாணவர்களும் அவரிடம் மகிழ்ச்சியு கற்கின்றார்கள். அருணி டீச்சர் அனை பிள்ளைகளையும் இணைத்துக் கொ பணிபுரிவதை பார்க்க ஆசையாயிருக்கி



அதிபர் எங்களது குறைபாடுகளை சுட் காட்டுவது நல்லது. அதை விடவும் எங்களது குறைபாடுகளை நிவர்த்தி செ கொள்ள உதவி செய்தால்......அதற் சந்தர்ப்பம் வழங்கினால் நன்றாயிருக்கு

"நான் எவ்வளவு தான் ஆயத்தமாகச் சென்றாலும் பாடத்தின் ஒரு பகுதியை மட்டுமே கற்பிக்க முடிகின்றது

"எனக்கு இந்தத் தொழில் வெறுத்து போய் விட்டது. வேறு பாடசாலைக்கு போனாலும் இது போல்தான். இன்னு எத்தனை வருடங்களுக்கு இதைச்

Scanned with CamScanner

UVA TAMIL – PDCT & BD/ HALDUMMULLA T.M.V

மேலே காணப்படும் கூற்றுகளின்படி தென்படுவது:

ஆசிரியர்களால் தமது கற்பித்தல் தொடர்பாக
தமது மாணவர் தொடர்பாக
தமது பாடசாலை தொடர்பாக
தாம் தொடர்பாகவும் மாணவரின் பெற்றார்கள் தொடர்பாகவும் மாணவர்கள் தனது ஆசிரியர்கள் தொடர்பாகவும் பலவகையான கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

இக் கூற்றுக்களை வாசிக்கும் போது உங்கள் மனதில் தோன்றும் உணர்வு யாது? அதே போன்று அக்கூற்றுகள் தொடர்பில் மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளவும் முடியும்.
உதா:

- ஆசிரியர் தொழிலை வேண்டா வெறுப்புடன் செய்யும் ஆசிரியர் குழுவினர்
- ஆசிரியர் தொழில் தொடர்பாக இடம்பெறும் பிரதிபலிப்பு.
- மாற்றம் தேவை என்பதை வெளிப்படுத்தும் ஆசிரியர்களின் கூற்றுக்கள்.

பாடசாலை அடிப்படையிலான ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டங்களில் ஆசிரியர்களிடம் தமது செயற்பாடுகள் தொடர்பாகப் பல்வேறு எண்ணங்கள் காணப்படுகின்றன என்பதையும் அவை தொடர்பாகத் தேடியறிதல் அவசியம் என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும். இவை வாண்மை விருத்தித் தேவைகளை இனங்காணல் (வெளிப்படுத்தல்) எனப்படும்.

பாடசாலையில் பண்புசார் கல்வி அபிவிருத்தியை வலுப்படுத்திக் கொள்வதற்காக ஆசிரியர் வாண்மை விருத்திக்கான தேவைகள் மற்றும் செயற்பாடுகளை 03 துறைகளினூடாக காட்டலாம்.

1. ஆசிரியர் தேவைகளை மையப்படுத்திய செயற்பாடுகள். → ஆசிரியர்களின் சுய மதிப்பீட்டின் மூலம் அறிந்து கொண்ட தேவைகளின் அடிப்படையில்.

2. பாடசாலைத் தேவைகளை மையப்படுத்திய செயற்பாடுகள். → பாடசாலையின் ஒட்டுமொத்தமான அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் கூட்டாக மாணவரின் அடைவு மற்றும் ஆசிரியர்களின் கற்பித்தல் விருத்திக்காக இனங் கண்ட தேவைகளும் செயற்பாடுகளும்


3. ஆசிரியர் வாண்மைத்துவத்தை மையப்படுத்திய செயற்பாடுகள். → வாண்மைத்துவம். பொறுப்புக் கூறல் பொறுப்பேற்றலுக்காகத் தேசிய மட்டத்தில் ஏனைய வாண்மையாளர்களை ஒப்பீட்டு ரீதியில் அறிந்து கொண்ட தேவை மற்றும் செயற்பாடுகள்



Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA TM.V

இதன்படி ஆசிரியரையும் பாடசாலையையும் மையப்படுத்திய ஆசிரியர் அபிவிருத்தித் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய உயர்வான முறை பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்திச் செயற்பாடாகும். ஆசிரிய வாண்மை விருத்தித் தேவைகளை இனங்காணக்கூடிய பல்வேறு சந்தர்ப்பங்கள் மற்றும் முறைமைகள் இங்கே தரப்பட்டுள்ளன.




உரு 9: பாடசாலையின் ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகளை இனங் காணும் முறையும் செயற்பாடுக



Scanned with CamScanner

இதன்படி பாடசாலையின் ஆசிரியர்களின் அபிவிருத்தித் தேவைகளை இனங் காணும் போது பயன்படுத்தக் கூடிய சில முறைகள்

அட்டவணை 1: பாடசாலையில் ஆசிரியர் வாண்மை விருத்தித் தேவைகளை அறிந்து கொள்ளலும் அதன் பயன்களும்

| தொ. இலக்கம் | முறை | கருவி./கற்பித்தல் நுட்பம் | பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் | பாடசாலைக்குக் கிடைக்கும் பலன் |
|---|---|---|---|---|
| 01. | தகவல் பகுப்பாய்வு | பிரச்சினை பகுப்பாய்வு<br>▪ 5 Why's (ஏன்?/ ஏன்/ ஏன்……..?.) முறையில்<br>▪ வினாக்கொத்து | ▪ பாடசாலையின் தேசிய மட்ட பெறுபேற்று அட்டவணை. க.பொ.த (சா/த, உ/த)<br>▪ உள்ளக மதிப்பீட்டு அறிக்கை.<br>▪ பாடசாலைக் கல்விப் பண்புத் தரச் சுட்டி.<br>▪ உள்ளக மேற்பார்வை அறிக்கை.<br>▪ வெளிவாரி மேற்பார்வை அறிக்கை.<br>▪ ஆசிரியர் செயலாற்றுகை அறிக்கை, பாடத் திட்டம் / உள்ளக மேற்பார்வை<br>▪ புள்ளிகள் அறிக்கை<br>▪ சுயமதிப்பீடு.<br>▪ பாடசாலை தரவட்ட அறிக்கை.<br>▪ பாடசாலை அபிவிருத்தி கூட்ட அறிக்கை.<br>▪ ஆசிரியர் கூட்ட அறிக்கை | 1.பாடசாலையில் நிலவும் பிரச்சினைகளை இனங்காணல்<br>2. அப் பிரச்சினை / பிரச்சினைகளுக்கான பிரதான காரணிகளை அறிந்து கொள்ளல்.<br>3.பல்வேறு துறைக்கேற்ப காரணங்களை வகைப்படுத்தல்<br>4.பிரச்சினை / பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காக தலையீடு செய்யக் கூடிய துறைகளை அறிந்து கொள்ளல்<br>5.பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காக மேற்கொள்ளக் கூடிய வழிமுறைகளைத் தீர்மானித்தல். |
| 02. | கலந்துரையாடல் | நிழல் பகுப்பாய்வு (SWOT) | ▪ ஆசிரியர் கூட்டம்<br>▪ வகுப்புத் தரவட்டக் கூட்டம்<br>▪ பெற்றார் முறைப்பாடு<br>▪ ஆசிரியர் முறைப்பாடு | |
| 03. | மேற்பார்வை | ஒப்பீட்டுப் பட்டியல் | ▪ முறைசாரா வகுப்பறை மேற்பார்வை (Principal's walking)<br>▪ மாணவரின் பயிற்சிக் கொப்பிகள்)<br>▪ வரவு இடாப்பு (ஆசிரியர்/ மாணவர்)<br>▪ வகுப்புப் பாடப்பதிவு அறிக்கை | |

பாடசாலையில் ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகளை அறிந்து கொள்வதற்காகப் பயன்படுத்தக் கூடிய மேற்கூறப்பட்ட முறைகள், கருவிகள், உத்திகள் மற்றும் அவற்றைப் பயன்படுத்தக் கூடிய பல சந்தர்ப்பங்கள் பாடசாலையினுள் காணப்படுகின்றன.

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

இம் முறைகள், கருவிகள், உத்திகள் மற்றும் சந்தர்ப்பங்கள் என்பவற்றை பாடசாலைகளிலும் ஒரே முறையில் பயன்படுத்துவது சாத்தியமற்றதாக ஆகையினால் இம் முறைகள், கருவிகள், உத்திகள் மற்றும் சந்தர்ப்பங்களை தமது வசதிக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளும் சுதந்திரம் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திக் குழுவிற்குள்ளது. அந்தந்தப் பாடசாலைகளில் நிலவும் பிரச்சினை, அபிவிருத்தித் தேவைகள், அபிவிருத்திக்கான இலக்கு என்பவற்றிற்கு ஏற்ப முறைமைகளைப் பொருத்தமானவாறு அமைத்துக்கொள்ள முடியும்.

### 3.2.1 அவ்வாறான சந்தர்ப்பங்கள் சில உதாரணங்களாகக் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| சந்தர்ப்பம் | : | தேசிய மட்ட பரீட்சைப் பெறுபேறுகள் க.பொ.த (சா/த, உ/த). |
| அட்டவணை | : | மாணவரின் வருடாந்த அடைவு மட்டம் / பரீட்சைப் பெறுபேற்று அறிக்கை |
| ஆதாரம் (மூலம்) | : | தேசிய மட்ட பரீட்சைப் பெறுபேறுகள் க.பொ.த (சா/த ) 2016 – 2017 |
| உத்தி | : | பிரச்சினைப் பகுப்பாய்வு. |
| பங்களிப்போர் | : | பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்திக் குழு. |
| நோக்கம் | : | மாணவரின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்காகப் பாடத்துடன் தொடர்புடைய ஆசிரியர் வாண்மை விருத்தித் தேவையை அறிந்த கொள்ளல். |

**முதல் கட்டம்**

இவ் வினாக்களூடாக 1C வகையிலான கிராமிய பாடசாலையொன்றில் 16 மாணவர்கள் இர வருடங்களில் தோற்றிய க.பொ.த (சா/த ) பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வு அட்டவ கீழே காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப தெளிவுபடுத்திக் கொள்வதற்காக வினவக்கூடிய வினாக் பின்வருமாறு:

- ஒவ்வொரு பாடங்களிலும் சித்தி பெற்ற மாணவர் எண்ணிக்கை யாது?
- ஒவ்வொரு பாடங்களிலும் சித்தி பெறாத மாணவர் எண்ணிக்கை யாது?
- ஒவ்வொரு பாடங்களிலும் கிடைக்கப் பெற்ற சித்திகள் எத்தனை?

**அட்டவணை 2: தெரிவு செய்து கொண்ட பாடசாலையின் க.பொ.த(சா/த ) பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வு**

| | பாடம் | வருடம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2016 | | | | | 2017 | | | |
| | | சித்தி | | | | | சித்தி | | | |
| | | A | B | C | S | W | A | B | C | S |
| 1 | சமயம் | 3 | 4 | 4 | 2 | 3 | 1 | 1 | 5 | 5 |
| 2 | தமிழ் மொழியும் இலக்கியமும் | 2 | 3 | 7 | 1 | 3 | - | - | 6 | 6 |
| 3 | ஆங்கிலம் | - | - | - | 3 | 13 | - | - | - | 1 |
| 4 | விஞ்ஞானம் | 1 | - | 4 | 7 | 4 | 1 | - | 1 | 4 |
| 5 | கணிதம் | 2 | - | 4 | 2 | 8 | 1 | - | 1 | 1 |
| 6 | வரலாறு | 1 | 4 | 4 | 4 | 3 | - | 1 | 3 | 8 |

இப் பெறுபேற்றினை மேலும் பகுப்பாய்வு செய்தால்,

- இரண்டு வருடங்களிலும் மிகக் குறைந்த பெறுபேற்றினை கொண்ட பாடங்கள் யாவை?
- மிகக் கூடியளவு சித்தி பெறாத பாடங்கள் யாவை?

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

முதல் கட்டத்தில் பாட அடைவினை ஒப்பீட்டு ரீதியில் அறிந்து கொள்வதன் மூலம் பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் அபிவிருத்தியின் தேவையை அறிந்து கொள்ள முடியும். வெளியரங்கமான பரீட்சைப் பெறுபேற்றைப் போலவே பாடசாலை மட்ட முன்னேற்ற அறிக்கையையும் (பகுப்பாய்வு மட்டம், பாடசாலை மட்ட கணிப்பீடு போன்ற கிடைக்கும் மதிப்பீட்டு அறிக்கைகள், தவணை பரீட்சைப் புள்ளிகள் தொகுப்பு) இதற்காகப் பயன்படுத்தலாம்.


**இரண்டாம் கட்டம்**

இவ்வாறு குறைந்த அடைவில் தாக்கம் செலுத்தியுள்ள காரணிகள் தொடர்பில் பகுப்பாய்வு செய்ய முடியும். காரணிப் பகுப்பாய்வின் போது பிரச்சினை / காரணிகளைத் தெளிவாக அறிந்து கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய பல வழிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- பிரச்சினை மரம் (Problem Tree)
- மீன் வரி அட்டவணை (Fish bone chart)
- ஏன்? முறைமை (Five WHYs method)
- சுய பகுப்பாய்வு / கணிப்பீட்டு முறை (Self Assessment)

**பிரச்சினை மரம் முறைமை**

- பகுப்பாய்வுக்காக இவ்வாறான முறைமைகளைப் பயன்படுத்திப் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்திக் குழு சிந்தனைக் கிளறல் கலந்துரையாடலை மேற்கொள்ள முடியும்.





Scanned with CamScanner

இவ்வாறு குறைந்த பாட அடைவில் தாக்கம் செலுத்தும் காரணிகள்.


- மாணவர் தொடர்பான காரணிகள்
- ஆசிரியர் தொடர்பான காரணிகள்
- பாடம் தொடர்பான காரணிகள்
- குடும்பச் சூழல் தொடர்பான காரணிகள்

என்ற வகையில் விளக்க முடியும். அந்தந்த காரணிகளுடன் இணைந்த விசேடமான காரணி பலவற்றை அறிந்து கொள்ளலாம்.

**மீன் வரி அட்டவணை (fishbone)**




உரு 11: பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தித் தேவைகளை அறிந்து கொள்வதற்கு மீன் வரி அட்டவணையைப் பயன்படுத்




**உரு12:** பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் தொழில் வாண்மை விருத்தித் தேவைகளை அறிந்து கொள்வதற்காக "ஏன்" உத்தி முறையினைப் பயன்படுத்திக் கொள்ளல்

- முதல் வட்டத்தில் ஆங்கில பாடத்தில் குறைவு / குறைந்த அடைவு காட்டப்படுவது **ஏன்?**

- இரண்டாம் வட்டத்தில் ஆங்கில பாடத்தில் குறைவு / குறைந்த அடைவினைக் காட்டுவதற்கு கற்றல் கற்பித்தல் சிரமங்கள் காரணமாகக் காட்டப்படுவது **ஏன்?**

- மூன்றாம் வட்டத்தில் ஆங்கிலப் பாடத்தில் குறைவு / குறைந்த அடைவு மட்டத்திற்கு ஆசிரியரின் பாட அறிவு தொடர்பான குறைபாடு காரணமாகக் காட்டப்படுவது **ஏன்?**

- நான்காம் வட்டத்தில் ஆங்கிலப் பாடத்தில் குறைவு / குறைந்த அடைவு மட்டத்திற்கு கற்பித்தல் முறை மற்றும் வளம் தொடர்பான குறைபாடு காரணமாகக் காட்டப்படுவது **ஏன்?**

- ஐந்தாம் வட்டத்தில் ஆங்கிலப் பாடத்தில் குறைவு / குறைந்த அடைவு மட்டத்திற்கு மாணவரின் பல்வகைத் தன்மையைக் கவனத்திற் கொள்ளாமை, பரிகாரக் கற்பித்தல் முறையைப் பயன்படுத்தாமை, கற்பித்தல் துணை சாதனங்களைப் பயன்படுத்தாமை தொடர்பான பிரச்சினைகளைக் காரணமாகக் காட்டுவது **ஏன்?**

Scanned with CamScanner

இவ்வாறு பிரச்சினைப் பகுப்பாய்வின் போது இனங் கண்ட காரணிகளிடையே, ஆசிரியர் தொடர்பான காரணிகளை அறிந்து கொள்ளுதல் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தியில் முக்கியமானதாகும்.

இவ்வாறு ஐந்து வட்டச் சுழற்சியில் இப் பிரச்சினையை விசேடமான முறையில் பகுப்பாய்வு செய்ய முடியும். பிரதான பாடங்கள் தொடர்பாக இனங்கண்ட பிரச்சினைகள் மற்றும் காரணிகளுக்கிடையே பாடசாலை திட்டமிட்டு தலையீடு செய்யக் கூடிய ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகளை வெளிக் கொணர முடியும். அதற்காக மேலும் சிந்தனைக் கிளர்வினை ஏற்படுத்தக் கூடிய கலந்துரையாடலை மேற்கொண்டு,

- தனித்தனியாக ஒவ்வொரு ஆசிரியர் தொடர்பான வாண்மை விருத்திக்கான தேவைகள்
- குழுவாக இனங்கண்ட ஆசிரியர் விருத்திக்கான பொதுத் தேவைகள்

என்ற வகையில் வேறுபடுத்திக் கொள்ள முடியும். அவ்வாறு வேறுபடுத்திக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகளுக்குப் பெற்றுக் கொடுக்கக் கூடிய உதவிகள் யாவை? என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும்.

உதாரணமாக ஆங்கிலப் பாடத்தில் பெற்ற குறைந்த அடைவு மட்டத்திற்கான காரணிகள் ஆசிரியர் தொடர்பாக வெளிக் கொணரப்பட்ட காரணிகள் இவை:

ஆசிரியர் தொடர்பான காரணி

- மாணவர் மைய கற்றல்-கற்பித்தல் முறையினைப் பயன்படுத்தாமை
- கற்றல் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளாமை
- மாணவரின் பல்வகைத் தன்மை, மாணவர் கற்றல் பாணி தொடர்பாகக் கவனம் கொள்ளாமை

இவ்வாறு ஏனைய பாடங்களிலும் குறைந்த அடைவுக்கான காரணிகள் தொடர்பாக இன கண்டபின் இப் பாடசாலையின் ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகளில் இனங் கண் பொதுவான ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகள் சில கீழே காட்டப்படுகின்றன:

- வகுப்பறையிலுள்ள மாணவரின் கற்றல் பல்வகைத் தன்மைக்கேற்ப கற்றல் செயற்பாடுகளை அறிந்து கொள்ளல், திட்டமிடல் மற்றும் செயற்படுத்தும் தேவை.
- மாணவர் மைய கற்றல் முறையின் மூலம் பாடத்திற்கான மாணவரின் ஆர்வத்தை விருத்தி செய்து கொள்வதற்கான வழிமுறைகளை அறிந்து கொள்வதற்கான தேவை.

இந்த அடைவு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வினை மே உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேலும் சில உத்திகளைப் பயன்படுத்திக் கொள் பயனுடையதாகும்.

உதாரணமாக மேற் காட்டப்பட்ட பகுப்பாய்வினூடாக அறிந்து கொண்ட கணிதம், ஆங்கில வரலாறு, போன்ற பிரதான பாடங்கள் தொடர்பிலான ஆசிரியர் காரணிகளை மே உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பாடசாலையின் உள்ளக மேற்பார்வைக் குழுவின் மேற்பார் அறிக்கைகளைப் பரிசீலிக்க முடியும். அன்றேல் ஆசிரியர்களின் கற்பிக்கல் சந்தர்ப்பங்களை

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

கல்வியமைச்சின் "பாடசாலைக் கல்வியின் தரத்தை உறுதி செய்வதற்கான மதிப்பீட்டு செயன் முறை" மதிப்பீட்டுப் படிவம் 2 (இணைப்பு -1) படிவத்தைப் பயன்படுத்தி கற்பித்தல் சந்தர்ப்பங்களை மேற்பார்வை செய்ய முடியும்.

இவ்வாறு அறிந்து கொண்ட ஆசிரியர்களின் தேவை தொடர்பாக ஆசிரியர் குழாத்தினருடன் மேலும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியும். அக் கலந்துரையாடலுக்காக "பாடசாலைக் கல்வியின் தரத்தை உறுதி செய்வதற்கான மதிப்பீட்டுச் செயன்முறை" (கல்வி அமைச்சு) நூலின் பண்புத்தரம் தொடர்பான கலந்துரையாடல் படிவத்தை பாடத்திற்கேற்றவகையில் திருத்தியமைத்துப் பயன்படுத்த முடியும்.

**அட்டவணை 3: ஆங்கிலப் பாட அடைவினை அதிகரிப்பதற்காக ஆசிரியர் தரப்பில் ஏற்படக் கூடிய மாற்றங்கள்.**

| | குறைந்த அடைவில் தாக்கம் செலுத்தும் காரணிகள் தொடர்பிலான வெளிப்பாடு | கற்றல் அவதானிப்பின் போது இனங் கண்ட மாற்றத்திற்குள்ளாக வேண்டிய சந்தர்ப்பங்கள் | அபிவிருத்திக்கு மேற் கொள்ள வேண்டிய செயற்பாடுகள் |
|---|---|---|---|
| 1. | கற்பித்தல் முறை | ஆசிரியர் மைய அணுகுமுறையை மாற்றல் | ஆங்கில பாடத்துக்கான கற்றல் தரவட்டத்தைப் பயன்படுத்தல் |
| 2. | வளப் பயன்பாடு | ஆங்கிலப் பாடத்திற்காக கற்றல் உபகரணத் தொகுதியை தயாரித்தல். | கூட்டாகப் பாடத்தைத் திட்டமிடல் |
| 3. | மாணவர்(தனிப்பட்ட) பல்வகைத் தன்மையினை கவனத்திற் கொள்ளாமை | மாணவர் குழுக்களின் பல்வகைத் தன்மை தொடர்பில் கவனம் செலுத்தல் | பல்வேறு மாணவர் குழுக்களுக்காக விசேட செயற்பாடுகளை அமைத்தல் |

**ஆசிரியரின் சுய பகுப்பாய்வு / மதிப்பீட்டு முறை**

ஆசிரியர் வாண்மை விருத்தியின் தேவையினை அறிந்து கொள்வதற்கு மேற் கூறப்பட்ட உத்திகளுக்கு மேலதிகமாக ஆசிரியர்களிடமிருந்து வெவ்வேறாக கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக சுய பகுப்பாய்வு முறையினைப் பயன்படுத்த முடியும். அதற்காகப் பயன்படுத்தக் கூடிய மாதிரிப்படிவத்தின் மாதிரி கீழே காட்டப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

## சுய பகுப்பாய்வு / மதிப்பீட்டு முறைக்கான உதாரணம்

### மாதிரிப் படிவம்

பாடம் :

ஆசிரியரின் பெயர் :

கற்பிக்கும் வகுப்பு / வகுப்புக்கள் :

ஆலோசனை :

கீழ்க் காணப்படும் ஆசிரியர் விருத்திக்கான தேவைகளுள் நீங்கள் மேலும் விருத்தி செய்து கொள்ள வேண்டிய மூன்று தலைப்புக்களைத் தெரிவு செய்து **1, 2, 3,** என்னும் வகையில் முன்னுரிமைப்படி வரிசைப்படுத்துக.

| | விடயம் | முன்னுரிமை |
|---|---|---|
| **1.** | வகுப்பறையிலுள்ள பல்வேறுபட்ட மாணவருக்குக் கற்பித்தல் | ... |
| **2.** | மாணவரைக் கற்றலுக்குத் தூண்டுதல் | ... |
| **3.** | பாடத்துடன் தொடர்பான விடயங்கள் மற்றும் பிரயோகச் செயற்பாடுகள் | 1 |
| **4.** | பாடத்துடன் தொடர்பான கற்றல் வளங்கள் மற்றும் துணைச் சாதனங்கள் தயாரித்தல் | 2 |
| **5.** | பாடத்தைக் கற்பிப்பதற்கு புதிய முறைகளை பயன்படுத்தல் | |
| **6.** | பாடத்தைக் கற்பிக்கும் போது தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தல். | 3 |
| **7.** | பாட மதிப்பீட்டு முறைப் பயன்பாடு. | |
| **8.** | பாடத்துடன் தொடர்புடைய வகுப்பறைக்கு அப்பால் கற்றல் சந்தர்ப்பங்களை ஒழுங்கு செய்தல் | |
| **9.** | மாணவரை மேலதிக கற்றலில் ஈடுபடுத்தும் பல்வேறு செயற்பாடுகள் | |

- பாடத்துடன் தொடர்புடைய மாணவர்களின் அடைவு மட்ட விருத்திக்குப் பாடசாலையில் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய செயற்பாடுகள் தொடர்பில் உங்களின் கருத்துக்களைக் குறிப்பிடுக.


..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

Scanned with CamScanner

பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தித் தேவையினை அறிந்து கொள்வதற்காகப் பாடசாலையில் உள்ள ஆவணங்களை இலகுவாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய முறைகள், உத்திகள் என்பவற்றைப் பின்பற்றி மிக விசேடமான ஆசிரியர் விருத்தித் தேவைகளை அறிந்து கொள்வதன் மூலம் பயன்மிக்க ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகளை அறிந்து கொள்ள முடியும். ஆசிரியர் விருத்திக்கான தேவைகளை விசேடமான முறையில் அறிந்து கொள்ளும் விதம் கீழே சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.




உரு13: ஆசிரியர் அபிவிருத்தித் தேவையை விசேடமான முறையில் அறிந்து கொள்ளல்

Scanned with CamScanner

### 3.2.2 ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் அபிவிருத்தித் தேவைகளை அறிந்து கொள்ளல்

இங்கு 5 ஆந் தர மாணவரின் புலமைப்பரீட்சைப் பெறுபேற்று அட்டவணை, முதன்மை நிலை 1, 2, 3, ஆகியவற்றின் கணிப்பீட்டறிக்கை, மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் என்பவற்றுடன் ஆசிரியர் குழுக் கூட்ட அறிக்கை, பெற்றார், ஆசிரியர் சந்திப்பின் குறிப்புகள், உள்ளக மேற்பார்வை அறிக்கை போன்றவற்றைப் பயன்படுத்த முடியும். மேலே குறிப்பிடப்பட்ட நுட்ப முறைகளைப் பயன்படுத்தி ஆசிரியர் அபிவிருத்தித் தேவையை அறிந்து கொள்ள முடியும்.

சிறிய பாடசாலைகளின் ஆசிரியர் அபிவிருத்தித் தேவையினை வெவ்வேறாக அறிந்து கொண்ட பின் இரண்டு அல்லது பல பாடசாலைகளுக்குரிய பிரதான பொதுப் பிரச்சினைகளை அறிந்து பொது வேலைத்திட்டத்தைத் திட்டமிட்டுச் செயற்படுத்த முடியும். அதற்காக பொருத்தமான முதன்மையாசிரியரைப் பாடசாலையிலிருந்து தெரிவு செய்து கொள்ளலாம்.

ஆசிரியர் பற்றாக் குறையுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒழுங்குசெய்து வழிப்படுத்தும் போது, குடும்பப் பாடசாலை எண்ணக் கருவைப் பயன்படுத்த முடியும். அதன்படி அண்மையிலுள்ள பாடசாலைகளின் ஒத்துழைப்புடன் கூடிய சகபாடி வழிகாட்டலை மேற்கொள்ளல், வெளிவாரியாக ஓர் ஆசிரியரை அழைத்தல், பாடக் கற்கையின் தரவட்டத்தைச் செயற்படுத்தல் போன்றவற்றை ஒழுங்கமைத்துக் கொள்ளலாம்.

ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகளை செயற்படுத்தல், ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகளை அறிந்து கொள்ளல், முன்னுரிமைப்படி பிரச்சினைகள் சிலவற்றைத் தெரிந்து கொள்வதற்காக பாடப் பொறுப்பு ஆசிரிய ஆலோசகர் (ISA) அல்லது அனுபவமிக்க ஆசிரிய கல்வியியலாளர், ஆகியோரின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பூகோள அமைவிடத்திற்கேற்ப சிறிய பாடசாலையாயிருந்தாலும் இன்னொரு பாடசாலையுடன் தொடர்புகளை மேற்கொள்ள முடியாத பாடசாலை காணப்படலாம். அத்தகைய பாடசாலைகளின் ஆசிரியர் அபிவிருத்தித் தேவையினை அறிந்து கொள்ளும் போது அதற்காக வெளி வளவாளர்களின் (பாடப் பணிப்பாளர்/ ஆசிரிய கல்வியியலாளர்/ஆசிரிய ஆலோசகர் உதவியினைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு வெளிவளவாளர்களின் உதவியினை பெற்றுக் கொண்டாலும் அனைத்து ஆசிரியர்களையும் இச் செயற்பாட்டில் இணைத்துக் கொள்ளல் வேண்டும்.

ஆசிரியர் தனித்தனியாகத் தமது அபிவிருத்தித் தேவையினை அறிந்து கொள்வதற்காக பயன்படுத்தக் கூடிய செயற்பாடுகள் உள்ளன.

➢ தவணை இறுதி/வருட இறுதியில் தமது பாடத்திற்குரிய மாணவரின் விடைத்தாள்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம்

- அதிகளவான மாணவர்கள் விடையளித்துள்ள வினாக்கள் யாவை?
- வழங்கப்பட்டுள்ள விடைகளில் சரியான விடையெழுதப்பட்ட பாடப் பகுதி யாது?
- வழங்கப்பட்டுள்ள முற்றிலும் தவறாக அளிக்கப்பட்டுள்ள விடைகள் /விடையளிக்கப்படாத பாடப் பகுதிகள் எவை?

➢ மேற்கூறப்பட்ட பாட அலகுகளை நான் எவ்வாறு கற்பித்தேன்?

- விடயங்களை நானே சொல்லிக் கொடுத்ததன் மூலம்
- கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்திக் கொண்டு / கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தாமல்
- குறிப்புக்களை வழங்கியதன் மூலம்
- நான் எனது கற்பித்தல் தொடர்பாக மாணவரின் பிரதிபலிப்பைப் பெற்றுக் கொண்டு (இடை நிலை மாணவர்களுக்காக)

Scanned with CamScanner

உ-ம்: பாட / தேர்ச்சியின் இறுதியில் கீழ் காணும் மாதிரியின் மூலம் மாணவரின் பிரதிபலிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- இப் பாடத்தின் மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.
- இப் பாடத்தின் மூலம் கற்றுக் கொண்ட விடயத்தை மேலும் விளங்கிக்கொள்வதற்கு அவசியமான இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.
- உங்களுக்கு நான் கற்பித்த போதிலும் நீங்கள் புரிந்து கொள்வதற்கு சிரமமாக இருந்த விடயங்களைக் குறிப்பிடுக.

இம் முறையினைப் பயன்படுத்திக் கொண்டு ஆசிரியர் தன்னுடைய விடய அறிவு, கற்பித்தல் முறை, கற்பித்தல் செயன்முறை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். மாணவரின் பிரதிபலிப்புப் பகுப்பாய்வின் மூலம் ஆசிரியர் முக்கியமாகத் தாம் மாற்றமடைய வேண்டிய விதம் தொடர்பில் அறிந்து கொள்வார்.




ஆசிரியர் குழாத்தின் அனுபவம் மிக்க ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவதன் மூலமும், அது தொடர்பான புத்தகங்களை வாசிப்பதன் மூலமும் பெற்றுக் கொண்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மாற்றத்தை பிரயோகித்துப் பார்க்கும் ஆற்றல் கிடைக்கப் பெறும். இவ்வாறு கையாண்டு பார்ப்பதனூடாகவும், புதிய உத்திகளை பயன்படுத்திக் கற்பிப்பதன் ஊடாகவும் அவ்வப்போது மாணவரின் பிரதிபலிப்பு, மாணவரின் அடைவு தொடர்பான முன்னேற்ற அறிக்கை என்பவற்றைப் பகுப்பாய்வு செய்வதன் ஊடாகவும் ஆசிரியர் தமது சுய வாண்மை விருத்தியினை ஏற்படுத்திக் கொள்ள முடியும். நவீன காலத்தின் வகுப்பறை ஆய்வு, செயல்நிலை ஆய்வு என்பன ஆசிரியர் முதலில் தாம் மாற்றமடைந்து அதன் பின் மாணவரை மாற்றுவதற்கு /முன்னேற்றுவதற்கு எடுக்கின்ற முயற்சியாக அமையும்.

பாடசாலையில் பண்புசார்ந்த கல்வி அபிவிருத்திக்கான இலக்கினை அடைந்து கொள்வதற்கான ஓர் அணுகு முறையாக ஆசிரியர் அபிவிருத்தி முக்கியத்துவம் பெறும் அதே வேளை மேற்கூறப்பட்ட பல்வேறு உத்திகளின் அடிப்படையிலும் பாடசாலையில் ஆசிரியர் அபிவிருத்தித் தேவையினைத் தீர்மானித்துக் கொள்ள முடியும். அத்துடன் இத்தேவைகளின் அடிப்படையில் ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் திட்டத்தைத் தயாரிக்க முடியும். இதன் போது ஆசிரியர் அபிவிருத்தி உபகுழுவானது, நிதி தேவைப்படும் செயற்பாட்டுடன், நிதி தேவையற்ற செயற்பாடுகளையும் உள்ளடக்கி இங்கு குறிப்பிடப்படும் ஆசிரியர் அபிவிருத்தி உத்திகள் மற்றும் செயற்பாடுகளுடன் கூடிய வருடாந்த திட்டமொன்றினைத் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

## 3.3 ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பாகப் பயன்படுத்தக் கூடிய முறைமை மற்றும் செயற்பாடுகள் யாவை?

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி முறைமைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் பாடசாலைகள் பயன்படுத்தக் கூடிய பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்கான உதாரணங்கள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 4: பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி முறைமை மற்றும் செயற்பாடுகள்**

| தொழில்முறைக் கற்கை குழுச் செயற்பாடு | பங்கு பற்றுநர்கள் | இடம் | விசேட இயல்புகள் | மேலதிக கற்றல் வளங்க |
|---|---|---|---|---|
| செயல்நிலை ஆய்வு | ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்கள் | வகுப்பறை பாடசாலை | ஆசிரியர் அல்லது ஆசிரியர்கள் தொடர்ச்சியான கற்றல் சுற்றினை ஆராய்ந்து கொண்டிருப்பர். இலக்கிற்குரிய துறையைத் தெரிவு செய்தல், திட்டமிடல், செயற்படுத்தல், திட்டத்திற்கேற்ப செயற்படுத்தும் போது ஏற்படும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல், பகுப்பாய்வு செய்தல், மீள்நோக்கிப் பார்த்தல், புதிய செயன்முறைகளில் ஈடுபடல் என்பன சுற்றின் இயல்பாகும். | மீள்நோக்க பிரதிபலிப்பு குறிப்பு<br>முன்னேற்ற அறிக்கை |
| சம்பவக் கலந்துரையாடல் | ஆசிரியர் குழு | பாடசாலை அல்லது பொதுவான இடம் (ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம்) போன்ற | பாடசாலை, வகுப்பறை, கற்றல் கற்பித்தல் சந்தர்ப்பங்கள் உள்ளடங்கிய கதை, ஒளிநாடா, என்பவற்றை ஆசிரியர்கள் பரிசீலிப்பர். அது பற்றிய மீட்டலை மேற்கொண்டு பிறருடன் பயன்மிக்க அனுபவத்தைப் பெற்றுக் கொள்வர்.<br>• வகுப்பறை மட்டத்தில் நிலவும் நிலைமையை விளக்குவர். அதாவது, ஆசிரியருக்கு செய்ய வேண்டியதையும் உண்மையாக நடைபெற்றதையும் வழக்கின் மூலம் புரிந்து கொள்ள முடியும். வழக்கின் பிரச்சினையை புரிந்து கொள் வதற்கும் கலந்துரையாடுவதற்கும் ஆதாரங்களைப் பயன்படுத்தல் வேண்டும். ஆதாரங்களின் அடிப்படையில் பிரச்சினையை அறிந்து கொண்டதன் பின் பயன்மிகு தீர்மானங்களை மேற்கொள்ள முடியும். | கல்விய அமைச்சின் DVD ஒளிநாடா |
| காட்சிப் பாடம் (கட்புல) | ஜோடிகளாக அல்லது ஆசிரியர் சிலர் | வகுப்பறை | நன்றாக அமைக்கப்பட்ட நேரடியான வகுப்பறையிலுள்ள ஆசிரியரின் விசேட திறமை/ பாடமொன்றின் பகுதி /அல்லது முழுப் பாடத்தை நடாத்துவார். சக ஆசிரியர்/ஆசிரியர்கள் பாடத்தை அவதானிப்பர். பின் மதிப்பீட்டின் போது பாடத்தின் பலம், பலவீனம் மற்றும் விருத்தி செய்து கொள்வதற்கான ஆலோசனை பற்றிக் கலந்துரையாடுவர். | அவதானிப் அறிக்கை |
| வாண்மைக்கான வலைப்பின்னல் | வேறுபாடசாலை யுடன் அல்லது பாடசாலைத் தொகுதியுடன் | பாடசாலை அல்லது பொதுவான ஒரு இடம் (ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம், இலத்திரனியல் ஊடகம்) | • குறித்த நேரத்தின்படி நடைபெறும் கூட்டங்களுக்குச் சமுகமளித்தல்.<br>• ஒரு ஆசிரியர் இலத்திரனியல் ஊடகம் மூலம் இன்னொரு ஆசிரியருடன் தொடர்பு கொள்ளல்.<br>• கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள இலத்திரனியல் சஞ்சிகை. மற்றும் சமூக ஊடகங்கள் என்பவற்றைப் பயன்படுத்தல் | |



Scanned with CamScanner

| | | | | |
|---|---|---|---|---|
| சமமானவர்களின் வழிகாட்டல் | இரண்டு ஆசிரியர்கள் | வகுப்பறை /பாடசாலை | தம்மோடு இருப்பவரிடம் கற்றுக் கொள்வது சுமுகமான விருத்தியாகும். | கல்வியமைச்சின் DVD ஒளிநாடா |
| முறையான ஆய்வுக் குழு | குறித்த நேரத்திற்கு/ திகதியில் சந்திக்கும் ஆசிரியர் குழுவினர் | பாடசாலை அல்லது பொதுவான தொரு இடம் (ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம்) | இதன் இலக்காக அமைவது,<br>• நிகழ்ச்சித் திட்டம் மற்றும் விரிவுரையின் போது கற்றுக் கொண்ட உத்திகளை செயற்படுத்துதல்<br>• ஆய்வுகளைக் கலந்துரையாடவும் அவற்றை வகுப்பறையில் செயற்படுத்தும் முறை தொடர்பில் கலந்துரையாடுவதல்<br>• புதிய கற்றல் உத்திகளை செயற்படுத்துவதற்கான ஆய்வு மேற்கொள்ளல் | கல்வியமைச்சின் DVD ஒளிநாடா |
| டிஜிட்டல் மற்றும் Online வளங்கள் | தனியாக அல்லது குழுக்களாக | பாடசாலை அல்லது பொது இடம் | புத்தகங்களில் சஞ்சிகைகளில் மற்றும் இணையத் தளங்களில் பிரசுரமாகியுள்ள தகவல்களைப் பயன்படுத்தல், ஆசிரியர்களது கற்பித்தல் தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளல் | Techingchannel: w.w.w.teaching channel. Org khan Acadey w.w.w. khanacademy. org NJ center for Teaching and Learning www.njci.org |
| பாடசாலை மட்ட வழிகாட்டல் (Mentoring) | ஆசிரியர் மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் அல்லது வெளிவாரி வசதிப்படுத்துனர் (ஆசிரியர் ஆலோசகர்) | வகுப்பறை பாடசாலை | உங்களின் பாடத்தை கற்பிக்கத் தேவையான நுண்ணறிவு, அனுபவம் என்பவற்றை அனுபவமுள்ள ஆசிரியரிடமிருந்து பெற்றுக் கொள்ளல் மிகவும் பெறுமதியானது. | கல்வியமைச்சின் DVD ஒளிநாடா |
| வேறு பாடசாலைகள், கல்வி நிறுவனங்களுடன் உள்ள தொடர்பு | புாடசாலையில் இருந்து பாடசாலைக்கு,/ நிறுவனத்திற்கு | | வேறு பாடசாலைகள், அல்லது கல்வி நிறுவனங்களுடன் தொடர்புடைய பாடசாலையிலிருந்து பாடசாலைக்கு/நிறுவனத்திற்கு/ வேறு பாடசாலைகளுடன் அல்லது தேசிய கல்வியியற் கல்லூரி, பல்கலைக் கழகங்கள் அல்லது விசேட ஆர்வமுடைய குழுக்களுடன் செயலமர்வுகள், கருத்தரங்குகள், ஆய்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள் | |
| வாண்மைத்துவத் துடனான அங்கத்துவம் | | | கருத்தரங்குகள், சஞ்சிகைகள், விசேட குழுக்கள், பல்வேறு ஆய்வுச் செயற்பாடுகள், வாண்மைசார் சங்கங்கள் அமைப்பர். | |
| பிரதிபலித்தல் | ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்கள் அல்லது குழுக்கள் | பாடசாலை அல்லது பொது இடம் (ஆசிரிய வாண்மை விருத்தி வள நிலையம்) | கற்றல் கற்பித்தல் உபகரண விருத்தி | |

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பாகப் பயன்படுத்தப்படும் உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகள்

- முறைசார்ந்த கற்கை குழு (Lesson study Group)
- பாடசாலை மட்ட வழிகாட்டல் (School based mentoring)
- சகபாடி பயிற்றுவித்தல் (Peer coaching)
- செய்து காட்டல் (காட்சிநிலை) (Demonstration)
- சுயமான வழிப்படுத்தல் வாயிலான கற்றல் (Self directed learning)
- செயல்நிலை ஆய்வு (Action researches)
- பாடசாலைகளுடன் இணைந்த வேலைத் திட்டங்கள் (Colabarate with other schools)


முன்வைக்கப்பட்டுள்ள உத்திகளைப் பாடங்களுக்கேற்பவும் சந்தர்ப்பத்திற்கேற்பவும் தேவைக்கேற்பவும் பொருத்தப்பாடடையச் செய்து கொள்ளும் சுதந்திரம் உள்ளதுடன் செயற்படுத்தக் கூடிய முறையினைப் பயன்படுத்திக் கூட்டாக ஆசிரியர் அபிவிருத்தித் தேவையினை நிறைவேற்றிக் கொள்ள இவ்வழிகாட்டல் பெரிதும் உதவியாக அமையும்.

### 3.3.1 முறைசார்ந்த கற்கைக் குழு

இவ்வாறான முறைமைகளில்,

- ஆசிரியர்கள் தொடர்ச்சியாக ஒன்றிணைந்து செயற்படுதல்
- கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளல்
- முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்

மீள் திட்டமிடல் இடம்பெறும்




உரு: 14 முறைசார்ந்த கற்கைக் குழு முறை (Chiew & Lim 2005 : Stigler & Hiebert 1999) நூலின்படி முறைசார்ந்த கற்றல் அணுகுமுறையில் கடைப்பிடிக்க வேண்டிய விசேட செயற்பாடுகள்.

Scanned with CamScanner

மேலே காட்டப்பட்ட உருவத்தின் 08 பிரதான படிமுறைகள் மற்றும் அவற்றின் கீழ் அவதானம் செலுத்த வேண்டிய பிரதான காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன:

**படிமுறை1**

பாடக் கற்பித்தலின் போது எதிர்நோக்கும் பிரச்சினை/சவால்களை அறிந்து கொள்ளல்.

இப்படிமுறையில் பாடத்திற்கேற்ப ஆசிரியர்கள் ஒன்று கூடி கலந்துரையாடலை மேற்கொள்ளல் அவசியமாகும். அதன் போது முக்கியமாகப் பின்வரும் காரணிகளையும் தேவைகளையும் மேலோங்கச் செய்தல் வேண்டும்.

- எங்களது/எனது பாடத்தைக் கற்பிப்பதிலுள்ள கடினமான தலைப்பு/ தொனிப்பொருள் / தேர்ச்சி யாது?
- அத் தலைப்பு/ தொனிப்பொருள் / தேர்ச்சியைக் கற்பிப்பதில் சிரமம் ஏற்படுவதேன்?
- அதற்காக நாம் மேற்கொள்ள வேண்டிய /அறிந்து கொள்ள வேண்டிய கற்பித்தல் முறை மற்றும் காரணிகள் யாவை?
- அத் தலைப்பு / தொனிப்பொருள் / தேர்ச்சியைக் சிறப்பாகக் கற்பிப்பதற்குரிய ஆலோசனைகள் யாவை?

**பிரச்சினைத் தீர்த்தலுக்காக திட்டமிடல்.**

- முறைசார்ந்த கற்றல் ஆய்வுக் குழுவிற்காக மாதிரிக் கற்பித்தல், கலந்துரையாடல் தொடர்பாக உயிரோட்டமுள்ள திட்டத்தினை பாடசாலை தவணைக் குறிப்பில் உள்ளடக்குதல்
- மாதிரிக் கற்பித்தலுக்காக திட்டத்தைத் தயாரித்தல்
- மாதிரிக் கற்பித்தலுக்காக ஆசிரியர் ஒருவரைத் தெரிவு செய்து கொள்ளல்/சுயவிருப்பின் பேரில் முன்வருதல்.
- மாதிரிக் கற்பித்தலுக்கான வகுப்பு மற்றும் பாடத்தைத் தீர்மானித்தல்.

**படிமுறை 2**

**கூட்டாக இணைந்து பாடத்தைத் திட்டமிடல்.**

- மாதிரிக் கற்பித்தலுக்காக முதன்மைப் பாடத் திட்டமிடலைத் தயாரித்தல்
- பாட ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து தயாரித்த பாடத் திட்டத்தையும் அதன் விருத்திக்கான யோசனைகளையும் முன்வைத்தல்
- மாதிரிக் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியருடன் குழுக்கள் இணைந்து மாதிரிக் கற்பித்தலுக்கான பாடக்குறிப்பிற்குத் தேவையான திட்டத்தைத் தயாரித்தல்.
- மாதிரிக் கற்பித்தலின் போது அவதானிக்க வேண்டிய சந்தர்ப்பம் தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வருதலும் அவதானிக்க வேண்டிய சந்தர்ப்பத்தைத் தீர்மானித்தலும், அவதானிப்புத் திட்டத்தைத் தயாரித்தலும்.

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

படிமுறை 3

மாதிரிக் கற்பித்தலை நடைமுறைப்படுத்தல்

- யதார்த்தமான வகுப்பறையில் மாணவருக்கு மாதிரிப் பாடத்தைக் கற்பித்தல்
- பாடத்தை அவதானிக்கும் குழுவானது ஏற்கனவே தயாரித்துக் கொண்ட அவதானிப்புப் படிவத்தைப் பயன்படுத்திக் கலந்துரையாடுதல்
- அவதானிப்பின் பெறுபேறுகளை அறிக்கைப்படுத்தல்.

படிமுறை 4

பாடந் தொடர்பில் கலந்துரையாடலை மேற்கொள்ளலும் அதன் பயனுறுதி தொடர்பாகப் பிரதிபலித்தலும்

- மாதிரிப் பாடக் கற்பித்தலின் பின் அவதானித்த ஆசிரியர்கள் இணைந்து பாடத்தை விமர்சனம் செய்தல், அதன் விருத்திக்கான ஆலோசனைகளை இனங்காணல்
- முதலில் மாதிரிப் பாடத்தைக் கற்பித்த ஆசிரியரது கருத்துக்களை வினவுதல்
- பாடத்தின் சிறந்த அம்சத்தையும் விருத்திக்கான ஆலோசனையையும் முன் வைத்தல்.
- அதற்கேற்ப பாடத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வருதல்.

படிமுறை 5

பாடத்திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளல் (நாள் 1-2)

- மாதிரிப் பாடத்தை கற்பித்த ஆசிரியர் அல்லது முறைசார்ந்த கற்றல் ஆய்வுக் குழுவானது விருத்திக்கான யோசனையை அடிப்படையைக் கொண்டு பாடக் குறிப்பினைத் திருத்தம் செய்தல்.

படிமுறை 6

திருத்தப்பட்ட பாடத்தைக் கற்பித்தல்

- திருத்தப்பட்ட பாடத்தை அதே வகுப்பின் சமாந்தர வகுப்பிற்குக் கற்பித்தல்/வகுப்பின் ஒரு தொகுதியினருக்குக் கற்பித்தல்.
- முறைசார்ந்த கற்றல் ஆய்வுக் குழு விருத்திசார் யோசனைகள் தொடர்பில் விசேட கவனமெடுத்துப் பாடத்தை அவதானித்தல்.
- அவதானிப்புப் பெறுபேறுகளை அறிக்கைப்படுத்தல்.

Scanned with CamScanner

படிமுறை 7

**பாடந் தொடர்பாக மீள் கலந்துரையாடலும் பயன்மிகு பிரதிபலிப்புச் செயற்பாடும் (1-2 மணித்தியாலயம் நேரக் கூட்டத்தின் ஊடாக)**

- இரண்டாம் மாதிரிப் பாடந் தொடர்பில் கலந்துரையாடலை மேற்கொள்ளல்.
- பாடம் விருத்தியடைந்துள்ள விதத்தை அறிந்து கொள்ளல்.
- முறைசார்ந்த கற்றல் ஆய்வுக் குழுவின் சுற்று வட்டச் செயன்முறையில் ஆசிரியர் கற்பித்தவை தொடர்பில் கலந்துரையாடி அறிக்கைப்படுத்தலும் கோவைப்படுத்தலும்.

படிமுறை 8

**வலயக் காரியாலயம் / மாகாணக் காரியாலத்திற்கு அறிக்கைப்படுத்தல்**

- கிடைக்கப் பெற்ற அனுபவத்தைப் பரிமாறிக் கொள்ளல்.
- வலய/கோட்ட அதிபர் கூட்டத்தில் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்திக் குழுவின் பிரதிநிதி / முறைசார்ந்த கற்கைக் குழு உறுப்பினர் ஒருவரின் ஊடாக
- தேசிய மாநாட்டிற்குச் சமர்ப்பித்தல்.

## பாடசாலையினுள் முறைசார்ந்த ஆய்வுக் குழுவைத் தாபிப்பது எவ்வாறு?

- ஆசிரியர்கள் பாடங்களின் அடிப்படையில் குழுக்களாதல்.
  - இங்கு சமாந்தர வகுப்புக்கள் இருப்பின் பாட ஆசிரியர்கள் ஒன்றிணைந்து முறைசார்ந்த கற்றல் ஆய்வுக் குழுவை அமைத்தல்
  - **6-11** வகுப்புக்களுக்காக பாட விடயங்கள் வேறுபட்டாலும் ஒரு பாடத்தின் கீழ் முறைசார்ந்த கற்றல் ஆய்வுக் குழுவை அமைத்தல்
  - ஆரம்பப் பிரிவிற்காக முதன்மை நிலைகள் 1, 2, 3 என்பவற்றிற்கு வெவ்வேறாக அல்லது மூன்று முதன்மை நிலைகளும் ஒன்றிணைந்து பாட அடிப்படையில் முறைசார்ந்த கற்றல் ஆய்வுக் குழுவை அமைத்தல்
- பல்வேறு பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து முறைசார்ந்த ஆய்வுக் குழுவை அமைத்து, கற்பித்தல் முறை, வினாவெழுப்பும் முறை, வகுப்பறைக் கட்டுப்பாட்டு உத்திகள் தொடர்பான அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்கலாம். (இது சிறிய பாடசாலைகளுக்கு மிகவும் பொருத்தமானதாகும்.) முறைசார்ந்த கற்றல் ஆய்வுக் குழு முறைமையில் உள்ள தரப்பினர் பல்வகைமை கொண்டவர்களாக இருப்பதோடு அவர்களது கடமைப் பொறுப்புக்களும் பல்வகைமை கொண்டிருக்கும். (இணைப்பு 2)

Scanned with CamScanner

UVA TAMIL - PDGT & BD/ HALDUMMULLA T.M.V

- பல்வேறு பாடங்களின் உள்ளடக்கம் தொடர்பில் சரியான அறிவைப் பெற்றுக் கொள்ளல்
- பாடங்களைக் கற்பிக்கும் முறை மற்றும் மாணவர் மைய கற்பித்தல் முறை தொடர்பான திறன்களைப் பெற்றுக் கொள்ளல்
- கற்றல் வளங்கள் மற்றும் கற்றல் துணை சாதனங்களைத் தயாரித்தலும் பயன்படுத்தலும்
- வகுப்பறையில் பல்வேறு கற்றல் ஆற்றல் மற்றும் கற்றல் பாணிக்குப் பொருந்தும் வகையில் தமது கற்பித்தல் முறையை அமைத்துக் கொள்ளல்
- மாணவரின் பல்வகைமைக்கு ஏற்றவாறு கற்பிக்கும் பல்வேறு நுட்பங்கள் தொடர்பான திறன்
- ஆசிரியர் - மாணவர் தொடர்பினை வலுப்படுத்தல்
- கற்றல் தொடர்பாகக் கணிப்பீடு செய்தல்
- கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டுப் படிவங்கள் தயாரித்தல்
- பரிகாரக் கற்றல் - கற்பித்தல் முறையை அறிதல்
- வகுப்பறை ஆவணங்களை முறையாகப் பேணல்
- வகுப்பறைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகச் செயல்நிலை ஆய்வுக்கு வழிப்படுத்தல்

_ மேற்பார்வையின் போது கல்வியமைச்சினால் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதும் தற்போ
_சாலைகளில் நடைமுறையிலுள்ளதுமான மதிப்பீட்டுப் படிவம் 2 (கற்றல்-கற்பித்தல் மற்று
ிப்பீடு 1-13 வகுப்பு வரை) பயன்படுத்தலாம்.

ிபாடி வழிகாட்டல் தொடர்ச்சியாக இடம்பெறும் செயன்முறை என்பதோடு அவை தொடர்பான
ிக்கைகளைப் பேணுவது வழிகாட்டுபவருக்கும் சேவைநாடிக்கும் பயனுள்ளதாக அமையும்.
தற்காக மேற்காட்டப்பட்ட அவதானிப்புப் படிவத்தைப் பயன்படுத்த முடியும்.

## 3.3. மாதிரிக் கற்பித்தல் முறை

டசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் பயன்படுத்தக் கூடிய
திரிக் கற்பித்தல் முறையில், யாதாயினும் ஒன்றைச் சிறப்பாக முன்வைக்கும் விதத்தைக் காட்ட
வண்டும் என்பதே எதிர்பார்க்கப்படுகின்றது.

ிவ்வாறாயின்

வாய்மொழி மூலம் விளக்குதல்+காட்சிப்படுத்தல்/உபகரணம் பயன்படுத்தல் = மாதிரிக் கற்பித்தல்

Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

மாதிரிக் கற்பித்தல் முறையானது சிறிய அல்லது விசாலமான குழுக்களுக்கு கேட்பதற்கும் காண்பதற்கும் சந்தர்ப்பத்தை வழங்கக் கூடிய திறன் விருத்தியை இலக்காகக் கொண்ட கற்பித்தல் முறையாகும். மாதிரிக் கற்பித்தல் முறையைப் பல்வேறு விதமாகச் செயற்படுத்த முடியும். ஆசிரியர் ஒருவர் நேரடியாகக் கற்பித்தல், ஆசிரியர் ஆலோசகரால் அல்லது வெளிவாரியாக அழைக்கப்பட்ட வளவாளரினால் கற்பித்தல் மேற்கொள்ளப்படல். இச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக மாதிரிக் கற்பித்தலை பதிவு செய்த காணொளியையும் பயன்படுத்த முடியும். ஆசிரியர்கள் வகுப்பறையில் மாணவரின் கற்றலை இலகுபடுத்தவும் பயன்தரும் விதமாக ஆக்கிக் கொள்ளவும் நடைமுறைப்படுத்தக் கூடிய மாதிரிக் கற்பித்தல் முறையை, ஆசிரியர்களின் கற்பித்தல் உத்திகளை விருத்தி செய்வதற்காகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக இம் முறையினைப் பயன்படுத்தும் போது பலவேறு மட்டங்களில் இதனைத் திட்டமிட்டுச் செயற்படுத்த முடியும்

1. பாடங்களுக்கேற்றவாறு குழுக்களாகி, பாட விடயங்களைத் தெளிவாக முன்வைத்தல், துணைச் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கான ஒரு பயிற்சியாக,
2. பாடங்களுக்கேற்றவாறு குழுக்களாக அமையாது பொதுவான ஆசிரியர் வாண்மைத் திறன்களைப் பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டம் என்ற வகையில்,

மாதிரிக் கற்பித்தல் முறைமை எவ்வாறு? /யாது /எச் சந்தர்ப்பத்தில்? என்ற வினாக்களுக்கு விடையளித்துக் கொண்டு நேரடியாக வகுப்பறையில் செயற்படுத்தக் கூடியதொன்று என்பதுடன் ஆசிரியர் விருத்தியில் மூன்று முக்கிய சந்தர்ப்பங்களில் இதனைப் பயன்படுத்த முடியும்.

- முதலாவது சந்தர்ப்பம் (மாதிரிக் கற்பித்தலை மேற் கொள்வதற்கு முன்)

ஆசிரியர் ஒருவர் சுய விருப்பின் பேரில் பாடமொன்றைத் திட்டமிடல்

ஏனைய ஆசிரியர்கள் அப் பாடத்தை அவதானிக்கக் கூடிய அம்சங்கள் தொடர்பில் அவதானிப்புப் படிவத்தைத் தயாரிக்க வேண்டும். இதற்காகப் பாடசாலைக் கல்விப் பண்புத் தரத்தினை உறுதி செய்வதற்கான மதிப்பீட்டுச் செயன்முறைகளைப் பயன்படுத்த முடியும்.

- இரண்டாம் சந்தர்ப்பம் (கற்பித்தல் அவதானிப்பு)

பாடத்தைத் தயார் செய்த ஆசிரியரால் பாடம் கற்பிக்கப்படல்

மற்றைய ஆசிரியர்கள் அவதானிப்புப் படிவத்தின் துணையுடன் அவதானித்துக் குறித்துக்கொள்ளல்.

- மூன்றாம் சந்தர்ப்பம் (அவதானிப்பின் பின் கலந்துரையாடல் சந்தர்ப்பம்)

முதலில் பாடத்தைக் கற்பித்த ஆசிரியர் தமது கருத்துக்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குதல்.

அதன் பின் மற்றைய ஆசிரியர்களுடன் பாடம் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.

அவதானிப்பின் போது அறிந்து கொண்ட விருத்திக்கான ஆலோசனைகள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தல்.

Scanned with CamScanner

மாதிரிக் கற்பித்தலில் பெற்றுக் கொள்ளக்கூடிய பெறுபேறுகளாவன:

- பாட உள்ளடக்கத்தை முன் வைக்கும் முறை மற்றும் விளக்கம் அளித்தல் போதுமானதா?
- வகுப்பறையில் மாணவரின் நடத்தை எவ்வாறானது?
- அனைத்து மாணவர்களும் கற்பித்தலின் போது சமூகமளித்திருந்தனரா?
- மாதிரிக் கற்பித்தலில் முன்வைக்கப்பட்ட சிறந்த நடவடிக்கை யாது? போன்றவை அவதானிக்கப்படல்

## 3.3.4 பாடசாலை மட்டத்தில் உதவியளித்தல் (School Based Mentoring)

புதிய ஆசிரியரை பாடசாலையின் அனுபவம் வாய்ந்த ஆசிரியருடன் தொடர்புபடுத்தி அவரின் ஆலோசனையின் கீழ் வாண்மைத் திறன் விருத்தியினை பெற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்பினை வழங்கும் அணுகுமுறையே பாடசாலை மட்ட உதவியளித்தல் என்று அழைக்கப்படுகின்றது.

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள ஆசிரியர் சேவை முன் பயிற்சியின் கீழ் செயற்படுத்தப்படும் தேசியக் கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியர் பயிலுநர்களுக்கான கட்டுறுப் பயில்வுக் களப் பயிற்சியின் போது அனுபவம் வாய்ந்த ஆசிரியர் ஒருவரைத் தெரிவு செய்து அவரால் நடைமுறைப்படுத்தப்படும் உதவியாளர் (Mentor) செயன்முறையைப், பாடசாலைக்கு நிரந்தர நியமனம் பெற்று வரும் புதிய ஆசிரியர்களுக்காகவும் இலகுவாகச் செயற்படுத்த முடியும்.

இவ்வாறான உதவியாளர் செயன் முறையினைத் சட்டத்தரணி மற்றும் வைத்தியத் தொழில்களிலும் காண முடிகின்றது பயிலுநர் சட்டத்தரணி ஒருவர் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணியின் கீழ் பணி புரிவது அவ்வாறானதொரு சந்தர்ப்பமாகும். பாடசாலை மட்ட உதவியளிப்பின் போது வாண்மைத் திறன் கொண்ட ஆசிரியர் ஒருவர் இல்லாதவிடத்து வெளிவாரியான உதவியளிப்பாளரின் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பாடசாலை மட்ட உதவியளிப்பின் முழுமையான நோக்கம் கற்றல் மற்றும் கற்பித்தல் செயன் முறையில் விருத்தியை ஏற்படுத்துவதாகும். இதன் மூலம் ஆசிரியர் தொழிற் பயிற்சியைப் பின்பற்றி பாடசாலைகளுக்கு நியமனம் பெற்று வரும் ஆசிரியர்களைப் போலவே எவ்வித தொழிற் பயிற்சிப் பாடநெறியையும் பின்பற்றாது, பட்டதாரி மற்றும் பல்வேறு சான்றிதழ்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நியமனம் பெற்று வரும் ஆசிரியர்களுக்கும் இது பயனுள்ள முறையாகும்.

Scanned with CamScanner


பாடசாலை மட்ட உதவியளிப்பாளர் செயன் முறையில் எதிர்பார்க்கப்படும் நோக்கங் சிலவற்றை இனங்காண முடியும்.

- பல்வேறு சவால்கள் உள்ள நிலைமைகளுக்குப் பொருத்தப்பாடடையும் ஆற்றல்
  - புதிய தொழில் சூழலுக்கு
  - புதிய பாடசாலைச் சமூகத்தின் தொழில் கலாசாரத்திற்கு
  - புதிய பாடத்திட்டம் மற்றும் கணிப்பீட்டுச் செயன்முறைக்கு
  - புதிய தொழிலுக்கு.
- தொழிற் பணிகளை விருத்தி செய்து கொள்வதற்கு
  - வினைத்திறன் மிக்க கற்றல் உத்திகளைப் பயன்படுத்தல்
  - தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத் திறன்கள்
- பாடசாலை கற்றல் சமூகம் என்ற வகையில் அபிவிருத்திக்கு
  - உயிரோட்டமான கற்றலுக்கேற்ப
- கற்பித்தலுக்காகப் பாடத்தைத் திட்டமிடல்
- மாணவரின் நடத்தையை முகாமைத்துவம் செய்தல்
- பாடப் பகுதிகளைத் தெரிவு செய்து கொள்வதில் ஈடுபடுத்தல்
- கற்பித்தலை விருத்தி செய்து கொள்ளல்
- மிகச் சிறந்த முறையில் கற்பிப்பதற்காக
- ஆசிரியர் செயற்பாடுகளின் பிரதிபலித்தல் செயன்முறைக்கு (மீள்நோக்குதல்)
- மாணவரைக் கற்றல் சமூகத்தில் ஈடுபடுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகளை அறிந்து கொள்ளுதல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் தொடர்பில் புதிய ஆசிரியர்களுக்கு வழிகாட்டல் அவசியமாகும்.

Scanned with CamScanner

அல்பர்டா ஆசிரியர் சங்கம் குறிப்பிடுவதன் படி அனுபவமிக்க ஆசிரியர் மூன்று [illegible]
ஊடாகப் புதிய ஆசிரியர்களுக்கு உதவ முடியும்.

JIVA TAMIL PDOT & BD/ HALDUMMULLA T.M.V




உரு 15: பாடசாலை மட்ட உதவியளிப்பாளரின் பரிமாணங்கள்

இலங்கையில் தொழில் பயிற்சி எதுவுமின்றி பட்டதாரிகள் மற்றும் வெவ்வேறு மட்டத்திலான சான்றிதழ்களைக் கொண்டுள்ளவர்கள் ஆசிரியர்களாக நியமனம் பெறுகின்றமை காரணமாகப் பாடசாலையினுள் தொழிலுக்குத் திசைமுகப்படுத்தவும், சிறப்பாகக் கற்பித்தலை மேற்கொள்வதற்கு உதவியளிக்கவும் ஆசிரியர் எப்போதும் கற்றுக்கொள்பவராக இருப்பவர் என்பதை விளக்கவும் பாடசாலை ஒரு கற்றல் சமூகம் என்பதால் அதனை மேம்படுத்தவும் பாடசாலையினுள் உதவியளிப்பாளர்கள் சேவை மிக அவசியமாகும்.

- பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட உதவியளிப்பாளர் சேவை மேலிருந்து கீழ் நோக்கிக் கட்டளையிடும் ஒன்றல்ல. அது ஒரே மட்டத்தில் சமநிலையிலிருந்து நட்புறவான தொடர்பைப் பேணும் தன்மையுடையதாகும்.
- பயிலுநரின் தவறுகளைத் தேடுமொன்றல்ல. மாறாக உதவியளிக்கும் செயன்முறையாகும்.
- இது விமர்சனம் செய்யும் செயன்முறையும் அல்ல. உள்ள நிலைமையிலிருந்து மேல் நோக்கிச் செல்வதற்காக வழிகாட்டும் விருத்திசார் செயன்முறையாகும்.
- இது ஆணையிடும் அல்லது கட்டளையிடும் செயன்முறையல்ல. கற்பித்தலில் மிகச் சிறப்பாக வழிகாட்டும் செயன்முறையாகும்.
- இது மதிப்பீடு செய்வதல்ல. படிப்படியாக முன்னோக்கிச் செல்வதற்குத் தேவையான சக்திக்கு ஊக்குவிப்பை ஏற்படுத்தக் கூடிய கணிப்பீட்டுச் செயலொழுங்கு ஆகும்.
- அந்தந்த காலத்திற்கு என வரையறை செய்யப்பட்டதல்ல. தொடர்ச்சியாக வாண்மைத் திறனைப் பெற்றுக் கொள்ளும் வரையும் செயற்படுத்தப்படும் ஒன்றாகும்.



S. S. P.C. 200515

Scanned with CamScanner

பாடசாலை மட்ட உதவியளிப்பின் போது அனுபவசாலியான ஆசிரியர் பிரதான நான்கு துறையினூடாகப் புதிய ஆசிரியருக்கு உதவ முடியும்.

**அட்டவணை 5: அனுபவசாலியான ஆசிரியர்கள் உதவி வழங்கக் கூடிய துறைகள்**

| | உதவியளிக்கக் கூடிய துறைகள் | இத் துறைகளின் கீழ் உதவி வழங்கக் கூடிய பிரிவுகள் |
|---|---|---|
| 1 | வகுப்பறை முகாமைத்துவம் | ➢ வகுப்பறையில் ஆசனங்களை ஒழுங்கமைத்தல்<br>➢ வகுப்பறையில் பல்வேறு அறிவித்தல் பலகைகளைத் தயாரித்தலும் அவற்றைப் பேணலும்<br>➢ கற்பித்தலின் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளைத் தெளிவுபடுத்தல்<br>➢ ஆசிரியர் தொழிலுக்குரிய கொள்கை ஒழுங்கு முறைகளை அறிந்து கொள்ளல்<br>➢ மாணவரின் பயிற்சிகள் / செயற்பாடுகளை தயாரித்தல்<br>➢ நல்ல வகுப்பறைச் சூழலை அமைப்பதற்கு<br>➢ மாணவரின் நன்னடத்தைகளை உருவாக்குவதற்கு<br>➢ அறிக்கைகளை பேணிச் செல்வதற்கு |
| 2 | கற்பித்தலைத் திட்டமிடல் | ➢ உள்ள வளங்களை அறிந்து கொள்ளல்<br>➢ நாளுக்கான மற்றும் அலகிற்கான திட்டத்தைத் தயாரித்தல்<br>➢ மாணவர் தரவுகளைப் பேணல்<br>➢ குழுவாக அமைத்தல்<br>➢ பெற்றோரின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்<br>➢ பெற்றார்களுக்கு அறிக்கைப்படுத்தல்<br>➢ பாடசாலைக் கொள்கைகளுக்கேற்ப செயற்படுதல்<br>➢ ஆசிரியர், மாணவர், பெற்றோர் கூட்டத்தை நடாத்துதல் |
| 3 | பாட உள்ளடக்கத்தைக் கற்பித்தல் | ➢ பாடத் திட்டம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்<br>➢ கற்றல் பேறுகளை அறிந்து கொள்ளல்<br>➢ பரீட்சைகள் நடாத்துதல்<br>➢ வெளிப்படுத்தல், தொடர் மதிப்பீடு, கணிப்பீட்டுத் தொகுதி |
| 4 | மாணவரை ஊக்கப்படுத்தல் | ➢ பல்வேறு கற்பித்தல் மற்றும் கற்றல் முறையினை இணங்கண்டு கொள்ளல், திட்டமிடல் மற்றும் பயன்படுத்தல்<br>➢ பெற்றாருடன் இணைந்து செயற்படுவதன் மூலம் மாணவர்களை ஊக்குவித்தல்<br>➢ பல்வேறு கற்றல் உத்திகளைத் திட்டமிடவும் பயன்படுத்தவும் [illegible] |

Scanned with CamScanner

**பாடசாலை மட்ட உதவியளிப்பாளர் சேவையைப் பாடசாலையினுள் எவ்வாறு செயற்படுத்துவது?**

இதற்காக அதிபர், அனுபவமுடைய சிரேஷ்ட ஆசிரியர் மற்றும் புதிய ஆசிரியர் ஆகிய மூன்று தரப்பினருக்கும் பரஸ்பரத் தொடர்பு இருத்தல் வேண்டும். தமது பாடசாலைக்கு நியமனம் பெற்று வரும் புதிய ஆசிரியரை இன்முகத்துடன் வரவேற்று, அனுபவமுடைய உதவியளிப்பாளரான ஆசிரியரிடம் அத்தருணத்திலேயே பொறுப்பளிக்க வேண்டும். இதனால் புதிய ஆசிரியரினுள் மாற்றத்திற்கான விருப்பு ஏற்படும். இப்பணியின் போது அதிபரால் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான பணிகள் சில உள்ளன.

1 பாடசாலையில் ஆசிரியர் குழுவினரின் தேவையை அடிப்படையாகக் கொண்ட உதவியளிப்பாளர் வேலைத் திட்டத்தை அறிமுகம் செய்தல்.


2 அதற்காகத் தேவையான கால அவகாசத்தையும் வளங்களையும் பெற்றுக் கொடுத்தல்.

3 புதிய ஆசிரியர் மற்றும் அனுபவமுடைய ஆசிரியர்கள் ஒன்றாக இணைந்து சேவையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்குதல்.

4 சரியான அனுபவமுடைய ஆசிரியர்களைத் தெரிவு செய்து கொள்ளல்.

5 அவ்வப்போது இவ் வேலைத்திட்டம் தொடர்பில் அனுபவமிக்கவர்கள் மற்றும் புதிய ஆசிரியர்கள் இருதரப்பினருடனும் கலந்துரையாடுவதன் மூலம் எதிர்காலத்தில் மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை அறிந்து கொள்ளல்.

இச் செயன் முறையின் மூலம் புதிய ஆசிரியருக்கும் சிரேஷ்ட ஆசிரியருக்கும் பாடசாலையின் நிர்வாகத்திற்கும் மற்றும் மாணவருக்கும் பலன் கிடைக்கப் பெறும்.




உரு 16 : பாடசாலை மட்ட உதவியளித்தலின் பயன்கள்

Scanned with CamScanner

இலங்கைப் பாடசாலைகளில் இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பல்வேறு சவால்கள், தடைகள் ஏற்படலாம்.

உ-ம்: நேரம் போதாமை, ஓராசிரியர் மற்றொரு ஆசிரியரிடம் கற்பதற்கு விருப்பின்மை, உதவியினைப் பெறுவதற்கு உளரீதியாக விருப்பமின்மை, மற்றும் உதவியளித்தல் இச்செயன்முறையின் சிறப்பான இயல்பு தொடர்பாகப் போதிய தெளிவின்மை போன்றவை இது போன்ற சவால் மிக்க காரணிகள் ஆகும்.

பாடசாலையினுள் இச் செயன்முறையைச் செயற்படுத்த வேண்டிய முறைகளைச் சில உதாரணங்கள் மூலம் காணலாம்.

1. அனுபவமுடைய ஓர் ஆசிரியரைப் பாடசாலைக்கு வரும் புதிய ஆசிரியர்/ஆசிரியர்களுக்கு உதவியளிப்பதற்காகப் பரிந்துரைத்தல். (ஈடுபடுத்தல்)
2. பாடசாலையில் தற்போது சேவையில் உள்ள ஆசிரியர்களுக்கு அவ்வப்போது அனுபவமுடைய ஆசிரியர்களிடமிருந்து பின்னூட்டலைப் பெற்றுக் கொடுத்தல்.

புதிய ஆசிரியர்களுக்காகப் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட உதவியளிப்பாள சேவையைப் பல்வேறு படிமுறைகளில் செயற்படுத்த முடியும்.

- சிரேஷ்ட ஆசிரியரைப் புதிய ஆசிரியர் சந்தித்தல்.
- புதிய ஆசிரியர் சிரேஷ்ட ஆசிரியரிடம் சில ஆலோசனைகளை வேண்டுவார்.
- இருவரும் ஒன்றாகத் திட்டமிடுவார்கள்.
- தனது வகுப்பறையில் கற்பித்தல் சந்தர்ப்பமொன்றினை அவதானிக்குமாறு புதிய ஆசிரியரை அழைத்தல்.
- அது தொடர்பாக புதிய ஆசிரியரின் கருத்தினைக் கேட்டல்.

  (பாடத்தின் போது பெற்றுக் கொண்ட அனுபவம், வினாக்கள் வினவுதல், மாணவரை வழிப்படுத்தல், மாணவரின் பல்வேறு கற்றல் பாங்குகளுடன் ஆசிரியரின் பணிகளைப் பொருந்தச் செய்யும் விதம் போன்ற அம்சங்கள்)
- புதிய ஆசிரியர் வேண்டுகோள் விடுப்பாராயின் அவ்வாசிரியரின் பாடத்தை அவ்வப்போது அவதானித்தல்.

  (இவ் அவதானிப்பு பாடசாலையின் உள்ளக மேற்பார்வையாக அல்ல, புதிய ஆசிரியருக்கு உதவியையும், ஊக்கத்தையும் பின்னூட்டலையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.)
- பின்னர் இடம்பெறும் கலந்துரையாடலின்போது, இனங்காணப்பட்ட வலிவுகளை முன்வைத்தல் மற்றும் விருத்தி செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களை வெளிக் கொணருதல்.

Scanned with CamScanner

இங்கு கலந்துரையாடல் நட்புறவு கொண்டதாக அமைதல் வேண்டும். சிரேஷ்ட ஆசிரியர் பயன்படுத்தும் சொற்பிரயோகம் மிகவும் முக்கியமானதாகும்.

உ-ம் :

சிரேஷ்ட ஆசிரியர்: வினாக்களை இந்த விதமாகக் கேட்டால் மாணவர்கள் இன்னும் சிறப்பாக பதில் அளிப்பார்கள் என நான் நினைக்கின்றேன்............

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட உதவியளிப்பாளர் சேவையைப் பாடசாலையில் தற்போது சேவையிலுள்ள ஆசிரியர்களுக்குத் தவணை இறுதியின் போதும், வருட இறுதியின் போதும் அவ்வப்போது பின்னூட்டல் வழங்கித், தெரிவு செய்து கொண்ட பரப்புகளினூடாகச் செயற்படுத்த முடியும். அதற்கென உள்ளக மேற்பார்வைக் குழுவின் வாயிலாக அறிந்து கொண்ட முடிவுகளை அடிப்படையாகக் கொள்ளலாம். அல்லாவிடில், வெளிவாரி மேற்பார்வைக் குழுவின் அறிக்கையையும் அடிப்படையாகக் கொள்ளலாம். அதற்கென வெளிவாரியாக அனுபவமிக்க சிரேஷ்ட ஆசிரியர், ஆசிரிய கல்வியியலாளர் ஆகியோரின் உதவியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பாடசாலை மட்ட உதவியளிப்பாளர் சேவை சகபாடி வழிகாட்டலை விட வேறுபட்டுள்ளது. மிகவும் இலகுவாக அவ் வேறுபாடுகளை இனங்கண்டு கொள்ள முடியும்.

**அட்டவணை 6:** பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட உதவியளிப்பாளர், மற்றும் சகபாடி வழிகாட்டல் என்பன, ஒப்பீட்டு ரீதியில்

| | மூலம் | பாடசாலை மட்ட உதவியளிப்பு | சகபாடி வழிகாட்டல் |
|---|---|---|---|
| 1 | நபர்கள் | அனுபவம் வாய்ந்த மற்றும் புதிய ஆசிரியர்கள் ஒன்றாக இருத்தல். | சம நிலையிலுள்ளவர்கள் ஒன்றாயிருத்தல். |
| 2 | சந்தர்ப்பம் | பாடசாலைக்கு இசைவாக்கமடைதல், தொழிலுக்குப் பொருத்தப்பாடடைதல், இலகுவான மட்டத்திலிருந்து கற்பிக்கப் பழகுதல். | கற்பிக்கும் விடயம் தொடர்பானது |
| 3 | முறை | அவதானிப்பு, கலந்துரையாடல் இணைந்து திட்டமிடல் | அவதானிப்பு, கலந்துரையாடல் இணைந்து திட்டமிடல். |
| 4 | சூழல்/ நிலைமை | நட்பு, அருகாமை, அபிவிருத்திசார்ந்தது | நட்பு, அருகாமை, கையாண்டு பார்த்தலுடன் |
| 5 | இடம் | வகுப்பறை, வகுப்பறைக்கு வெளியே | வகுப்பறை, வகுப்பறைக்கு வெளியே |
| 6 | குறிக்கோள் | ஆசிரியர் தொழிலுக்கு வெற்றிகரமாக இசைவாக்கமடைவதற்கு உதவுதல். | துறை சார் விடயங்கள் தொடர்பான பிரச்சினை / தேவைகளை அறிந்து கொள்வதற்கும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கும் |

பாடசாலை மட்ட உதவியளிப்பின் போது புதிய ஆசிரியரைப் போலவே சிரேஷ்ட ஆசிரியரும் தமது பணிகள் தொடர்பில் தொடர்ச்சியான கணிப்பீட்டை மேற்கொள்ள முடியும். புதிய ஆசிரியர்கள் இதற்காக குறிப்புப் புத்தகம் ஒன்றினைப் பயன்படுத்த முடியும். அதற்காகப் பயன்படுத்தக் கூடிய எளிமையான மாதிரி கீழே காட்டப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

அட்டவணை 7: பாடசாலை மட்ட உதவியளிப்பாளர் சேவைக்கான புதிய ஆசிரியர்களுக்கான மாதிரிப்படிவம்

| | திகதி | எதிர்நோக்கிய சிக்கல்/பிரச்சினை | சிரேஷ்ட ஆசிரியரிடம் பெற்ற ஆலோசனை | (நேர்க்கணியமாக/எதிர்மறையாக) அதன்படி செயற்பட்டதனால் வகுப்பறையில் ஏற்பட்ட மாற்றம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

## 3.3.5 செயல்நிலை ஆய்வு (Action Research)

நடைமுறைச் செயலாய்வு, வகுப்பறை ஆய்வு, செயன்முறை ஆய்வு, செயல்நிலை ஆய்வு என பல்வேறு பெயர்களினால் குறிப்பிடப்படும் இவ் ஆய்வு முறையானது அநேகமான ஆசிரியர் கற்கை நெறிகளில் கட்டாயமான ஓர் அங்கமாக அமைந்துள்ளது.

➢ **செயல்நிலை ஆய்வு என்றால் என்ன?**

செயல்நிலை ஆய்வு என்றால் என்ன என்பதற்கு ஆய்வாளர்களினால் பல்வேறு வகையிலான வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

"இது இவ்வாறு நடைபெறவேண்டும்" என சிந்தித்து இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த தொழிற் பணியை மாற்றுவதற்காகத் தமது வகுப்பறை தொடர்பாக தாம் தேடியறிய வேண்டும் என ஆசிரியர் ஒருவர் எண்ணிய போது செயல்நிலை ஆய்வு என்னும் ஆய்வு முறை தோற்றம் பெற்றது என ஹல்டஸ்லர், கெசிட் மற்றும் கப் (1986) ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

"சிறியளவிலான தலையீட்டினை தாமே மேற்கொண்டு அத் தலையீட்டின் விளைவுகளை கிட்டிய வகையில் பரீட்சித்துப் பார்த்தல் செயல்நிலை ஆய்வு" என ஹெல்சே (1972) குறிப்பிடுகிறார்.

செயல்நிலை ஆய்வுச் செயன்முறையானது பிரச்சினைக்குரிய நிலைமையினை வெளிப்படுத்திக் கொள்வதற்கும், பரிகார வழிமுறைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவும் ஒழுங்கு படுத்துவதற்கும் பொருத்தமான முறை" என பர்ன்ஸ் (1998) குறிப்பிடுகிறார்.

இதன்படி அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த அல்லது விருத்தியை மேற்கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தைப் பரிசீலித்துத் தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கான வினைத்திறன் மிக்க, பொருத்தமான வழிமுறை என செயல்நிலை ஆய்வு முறையினைக் குறிப்பிடலாம்.

➢ **செயல்நிலை ஆய்வின் படிமுறைகள்**

செயல்நிலை ஆய்வுச் செயன்முறைக்கான பொதுவான இயல்புகளைப் போலவே, விசேட பிரச்சினைகள், விசேட சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளும் செயல்நிலை ஆய்வுகளுக்கும் ஒன்றுக்கொன்று விசேடமான இயல்புகள் உள்ளன. இதனால் செயல்நிலை ஆய்வுக்கான படிமுறைகளை சுழற்சி வடிவில் முன்வைப்பது கடினமாகும்.


செயல்நிலை ஆய்வின் பிரதான படிமுறையாக அமைவது பிரதிபலிப்புச் செய்தல் போன்ற சுயமாக மீளாய்வு செய்யும் மதிப்பீடாகும். இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 1944 ஆம் ஆண்டு கர்ட்லெவின் செயல்நிலை ஆய்வுப் படிமுறை சுழற்சி வடிவிலான உருவின் மூலம் காட்ட முடியும் எனவும் அவ்வாறான சுழற்சி வட்டத்திற்காக நான்கு பிரதான படிமுறைகளை உள்ளடக்க முடியும் எனவும் குறிப்பிடுகின்றார்.



Scanned with CamScanner

UVA TAMIL - PDCT & BD/ HALDUMMULLA T.M.V

அவையாவன, திட்டமிடல், செயற்படுத்தல், அவதானிப்பு மற்றும் பிரதிபலிப்பு என்பனவாகு இவ்வடிப்படைக் கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு, செயல்நிலை ஆய்வு ஒன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கான பல்வேறு படிமுறைகளை இனங்கண்டு கொ முடியும். அவை ஒழுங்குமுறையில் கீழே காட்டப்பட்டுள்ளது.




உரு 17: செயல்நிலை ஆய்வின் பிரதான படிமுறைகள்

1. தொழிலுக்கேற்ப உங்களின் பணிகளைப் பகுதிகளாக்கி வகுப்பறை மட்டத்தில் மாற்றம் ஏற்படக் கூடிய சந்தர்ப்பத்தை அறிந்து கொள்ளல்.
2. இச் சந்தர்ப்பத்துடன் தொடர்பு ஏற்பட்ட பின்னணி பற்றிய தரவுகளை அறிந்து கொள்ளல்.
3. பின்னணித் தரவுகளை பகுப்பாய்வு செய்து ஆய்வுப் பிரச்சினைகளை விரிவாக ஆராய்தல்.
4. ஆய்வு நோக்கத்தைக் கட்டியெழுப்புதல்.
5. சந்தர்ப்பத்தை மாற்றுவதற்காகப் பொருத்தமான தலையீட்டு வேலைத் திட்டத்தினை காலச் சட்டகத்துக்கேற்ப திட்டமிடல்.
6. அதனை நடைமுறைப்படுத்தத் தேவையான பின்னணியை அமைத்துக் கொள்ளல்.
7. தலையீட்டு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
8. செயற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தினை அவதானிப்பிற்குட்படுத்தல், கண்காணித்தல், பெறுபேறுகளை அறிக்கைப்படுத்தல்.
9. தலையீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சேகரித்துக் கொண்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.
10. பகுப்பாய்வு செய்த தரவுகளின் மூலம் உரிய சந்தர்ப்பம் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளதா என்பதைத் தேடியறிதல் / மீளாய்வு செய்தல்.
11. எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அண்மிக்காவிடில் அதற்கான மாற்றுத் தீர்வினையும் அதற்குப் பொருத்தமான செயற்பாடுகளையும் தயாரித்தல்.
12. மாற்றுத் திட்டத்தினைச் செயற்படுத்தல்.
13. மாற்று வேலைத் திட்டத்தினை அவதானித்தல், அதனடிப்படையில் சேகரித்துக் கொண்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதனூடாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப் பெற்றுள்ளனவா என்பதை அளவிடல்.
14. எதிர்பார்க்கப்பட்ட மாற்றத்தை அண்மிக்கும் வரை இவ்வகையான மாற்றுத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளல்.

Scanned with CamScanner

